
தண்ணிலவின்
சாறெடுத்து...!
ஜெய்சக்தி
தண்ணிலவின் சாறெடுத்து...!
தண்ணிலவின்
சாறெடுத்து...!
ஜெய்சக்தி

THANNILAVIL SARADUTHU

By: Jaisakthi

First Edition: May, 2013

No. of Pages: 200

Paper used: 11.6 White

விலை ரூ. 95/–

TAMILTHEN PATHIPAGAM
Old No:26, New No:23
Raja Annamalai Road,
Saibaba Colony,
Coimbatore - 641 011.
Ph:0422 - 4202731.
Cell: 98422 32646.

Laser Typeset By : TamilThen Pathipagam.

Printed at : MAHA OFFSET. CHENNAI

## அத்தியாயம் -1

"இது ரொம்ப நல்லாயிருக்கில்லே" என்றாள் மாலதி. சம்யுக்தாவின் தோழி.

"ஆமா! இந்த பெயிண்டிங் ரொம்ப நல்லாயிருக்கு" என்றாள் சம்யுக்தா.

"வாங்கிக்கலாமா?" என்றாள் மாலதி.

"வாங்கிக்கலாம், ஏற்கனவே நிறைய இருக்கு" என்றாள் சம்யுக்தா.

"இல்லை. இது விலை கூட கட்டுபடியாகும் போல இருக்கு! கேட்போமா?" என்றாள் மாலதி.

கேட்டார்கள். விலை அவர்களுடைய பட்ஜெட்டுக் குள்ளே வந்தது. "சரிடி, மாலினி வாங்கிக்கலாம்" என்றாள் சம்யுக்தா.

அந்த ஓவியத்தை வாங்கிக் கொண்டார்கள்.

அது ஒரு அழகான ஓவியம். தவழ்கின்ற ஒரு குழந்தை ஒரு பக்கமாக திரும்பிப் பார்த்து சிரிக்கிறாற் போல அந்த ஓவியம் வரையப்பட்டிருந்தது. சம்யுக்தாவுக்கு கலைகளிலே எப்போதும் ஆர்வம். நல்ல புத்தகங்கள் நல்ல கலைப்பொருட்கள் என்று நிறைய வாங்கிக் கொள்ள வேண்டும் என்று நினைப்பாள்.

ஆனால், இது நாள் வரை அவளுடைய தந்தைக்கு மாற்றலாகிச் செல்லும் வேலை என்பதால் வீட்டில் பெரிதாக அனுமதி கிடைக்காது. தாய் சரோஜாவும், தந்தை சுந்தரவரதனும் அவளுடைய ஆசைக்கு அணை போட்டு விடுவார்கள்.

"இதோ பாரும்மா. நாம ரெண்டு, மூணு வருஷத்துக்கு ஒருக்கா மூட்டை தூக்கணும். அப்படியிருக்கையில பொருள் நிறைய சேர்த்துக்கிட்டோம்னா கொண்டு போறது கஷ்டம்.

இல்லைன்னாலும் நல்ல கலைப்பொருட்களையெல்லாம் வாங்கினோம்னா அதை நல்லா பத்திரமா வச்சுக்கோணும். பராமரிக்கணும். அதனால யோசிச்சு வாங்கும்மா" என்று மட்டும் சொல்லுவார்கள்.

ஆனாலும், அவளுக்கு ஒரு பொருளின் மேல் மிகவும் விருப்பம் என்றால் அனுமதித்து விடுவார்கள். தாய் தந்தை இருவருமே சொல்வதில் நியாயம் இருப்பதை அவள் உணர்ந்திருந்தாள். பெரும்பாலும் அவள் வாங்கித் தான் ஆக வேண்டும் என்று அடம் பிடிக்க மாட்டாள்.

அடம் பிடிப்பதற்கு அவள் என்ன சின்னக் குழந்தையா? இன்றைக்கு இருபத்தாறு வயதாகிவிட்டது அவளுக்கு. ஆனால் இப்போது துணிந்து வாங்குவது எதனால் என்றால் இப்பொழுது அவர்கள் கோயமுத்தூருக்கே வந்து விட்டார்கள்.

வேலை பெறுவதற்கு முன்பாகவே இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பாகவே அவர் தன்விருப்ப ஓய்வு வாங்கிக் கொண்டார். அதனால் கோவைக்கே வந்து விட்டார்கள்.



சம்யுக்தா அவர்களுக்கு ஒரே மகள். அதனால் அவள் மிகவும் செல்லமாகத்தான் வளர்க்கப்பட்டாள். அரசு உத்தியோகத்தில் இருந்த அவளுடைய தந்தை கோவையிலேயே வேண்டும் அளவுக்கு சொத்துக்கள் வைத்திருந்தார்.

சுந்தரவரதன் மிகவும் நியாயமான அலுவலர் என்று பெயர் எடுத்தவர். அவரால் மற்றவர்களுக்குத் தொல்லை இருக்காது. ஆனால், தன்னைப் பொறுத்த மட்டிலும் சரியாக இருந்து கொள்ளுவார்.

அதற்கு அவர் சம்யுக்தாவிடம் சொல்லுவார். "உலகத்தைத்" திருத்த நம்மால் முடியாது. ஆனால், நம்மளவிற்கு உண்மையாக இருந்தால் நம்மைப் பார்த்து நாலு பேர் திருந்தினால் கூட போதும்" என்பார்.

ஆரம்ப காலத்தில் மிகவும் கடினமாக இருந்தது. ஒரு நேர்மையாளனாக ஒரு துறையிலே இருப்பது, அதுவும் அரசுத் துறையிலே இருப்பது என்பது எவ்வளவு கடின மானது என்பது அனுபவப்பட்டவர்களுக்கு புரியும்.

முதலில் சிரமமாக இருந்தாலும் பிறகு அவர் அப்படித் தான் அவர் எது நியாயமோ அதை செய்வார். அவருகிட்ட காசு கொடுத்தா வேலை ஆகாது என்று எல்லோரும் ஒதுங்கிக் கொள்ளுவார்கள்.

சுந்தரவரதன் தன்னுடைய விருப்பத்தின் காரணமாக சட்டம் படித்து வைத்துக் கொண்டார். தபாலிலே பி.ஜி.எல் என்று அந்தக் காலத்திலேயே படித்து வைத்துக் கொண்டிருந் தார். அதனால் சட்ட ரீதியாகவும் அவரை யாரும் மிரட்ட முடியாது.

'படுத்தால் நிம்மதியாக தூங்கணும்' என்பார். அதுபோல இன்றைய நாள் வரைக்கும் அவர் படுத்தால் நிம்மதியாக உறங்குகிற மாதிரித்தான் தன்னுடைய தொழிலில் பெயரைச் சம்பாதித்துக் கொண்டிருந்தார்.

இருந்தாலும், சமீப காலமாக அவருக்குக் கொஞ்சம் மன அழுத்தம் அதிகமாக இருந்தது. 'போதும், ஒரே மகளுக்கு வேண்டும் அளவுக்கு சேர்த்தாயிற்று. இனிமேல் எதற்கு?' என்று நினைத்தார். அதற்கு ஏற்ப சம்யுக்தாவும் ஒரு பெரிய தனியார் நிறுவனத்திலே வேலை செய்து கொண்டிருந்தாள்.

அவள் பி.டெக் முடித்து விட்டு அழகான கட்டிடக் கலை நிபுணராக பெயரெடுத்துக் கொண்டிருந்தாள். அவளுடைய அந்தப் பெரிய நிறுவனம் அவள் விருப்பத்திற்கு ஏற்ப கோவைக்கு மாற்றல் கொடுத்தது.

அவளும் இன்றைக்கு ஐந்து இலக்கத்திலே சம்பாதித்துக் கொண்டிருந்தாள்.

சுந்தர வரதனுக்கு ஐம்பது வயதைத் தாண்டியதற்குப் பிறகு உறவினர்களோடு கோவையிலே இருந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது.

அதனால், தன்விருப்ப ஓய்வு வாங்கிக் கொண்டு கிளம்பி வந்து விட்டார். கோவைக்கு வருவதிலேயே சம்யுக்தாவிற்கு ஒரு விதத்தில் மகிழ்ச்சி என்றால் இன்னொரு விதத்திலே கொஞ்சம் அச்சமும் இருந்தது.

ஆறு ஆண்டுகள்! அவள் சென்னையிலே தன்னுடைய தொழிலே பெயரெடுத்த போதிலும் கூட அவளை விடாமல் துரத்திக் கொண்டிருந்த ஆறு ஆண்டுகள்!



அவளுடைய படிப்புக்கு என்றுதான் அப்பா சென்னைக்குப் போக வேண்டும் என்று விருப்பப் பட்டார். அவளும் அந்த பி.டெக். படிப்புக்காக சென்னையில் இருப்பதுதான் நல்லது என்று நினைத்தாள். ஆனால், வளர் இளம் பருவத்திலேயே அவள் மனத்திலே வளர்ந்த அந்த அன்பு இன்றைக்கும் அப்படியே தான் இருந்தது. நிறைய பேருடன் பழகி விட்டாள். நிறைய பேரைப் பார்த்து விட்டாள். தன் ஒத்த வயதினருடன் பழகி விட்டாள். இருந்தாலும் அந்த முகத்தையும், அந்த நெகிழ்வையும் அவளால் மறக்கவே முடியவில்லை.

அப்பா திரும்பவும் கோவைக்கு வரவேண்டும் என்று சொன்னவுடனேயே அவள் ஒரு பக்கத்தில் மகிழ்ச்சியைக் காட்டிக் கொண்டாலும் உள்ளூர கலக்கத்தில் இருந்தாள்.

அப்பாவுக்கும், அம்மாவுக்கும் இவளுடைய பிரச்சினைகள் எதுவுமே தெரியாது. அவள் சொல்லிக் கொள்ளவும் இல்லை. அந்தக் காலகட்டத்தில் அந்தக் காயம் ஒரு பெரிய காயமாக இருந்தது. இப்பொழுது அந்தக் காயம் அவ்வளவு பெரிய காயம் இல்லை என்பது போலத் தோன்றினாலும். அந்த முதல் வடு, மனதிலே விழுந்த வடு இப்பொழுதும் அவள் மொத்த வாழ்க்கையிலும் ஒரு உறுத்தலாகவும், நெருடலாகவும்தான் இருந்தது.

அதைத் தூக்கி தூரப் போட்டு விட்டு அடுத்த வேலையைப் பார்க்க வேண்டும் என்று எவ்வளவோ முயற்சி செய்தாள். இப்பொழுது அதில் ஓரளவு வெற்றியும் பெற்று விட்டாள் என்றாலும் கூட கோவைக்கு வந்திருக் கிறோம். இது இனி எந்தெந்த வடிவத்தில் உருவெடுக் குமோ? என்ற கவலை அவளுக்கு ஓரத்திலே இருந்தது.

"ஏய்! நான் கேட்டுட்டே இருக்கேன். நீ எங்கடி இருக்கே?" என்றாள் மாலினி.

"நான் இங்க தாண்டி இருக்கேன்!"என்றாள் சம்யுக்தா.

தன்னை உலுக்கிக் கொண்டாள். அந்தப் பழைய சிந்தனை களிலே இருந்து மீட்டுக் கொண்டாள்.

"என்னடி ஆச்சு?" என்றாள் மாலினி.

சம்யுக்தா நீண்ட தொரு பெருமூச்சு விட்டுவிட்டு "ஒண்ணும் இல்லை" என்றாள்.

"போச்சுடா! பழைய ஞாபகமா?" என்றாள் மாலினி.

மாலினிக்கு மட்டும் அவளுடைய மன வருத்தம், நடந்து போன நிகழ்வுகள் எல்லாமே தெரியும்.

மாலினி அவளை முறைத்தாள். "நீ கோயமுத்தூருக்கு வருவதற்கு முன்னாடியே ஃபோன்ல நான் என்ன சொன்னேன். அதெல்லாம் துடைச்சுரு. மறந்துடு. நிம்மதியா வா! அப்படின்னுதானே சொன்னேன். இன்னும் அதை யெல்லாம் சுமந்துட்டு அலையறியாக்கும் நீ" என்றாள் மாலினி.

சம்யுக்தா உயிரே இல்லாமல் ஒரு புன்னகையை வெளி யிட்டாள். "நான் மறக்கணும்னு தாண்டி நினைக்கிறேன். தூக்கிப் போடணும்னுதான் நினைக்கிறேன். ஓரளவுக்கு மறந்தும் கூட இருந்தேன். ஆனா இங்க வந்தவுடனே எல்லாமே அப்படியே கிளம்புதே?" என்றாள்.

"கிளம்பும். கிளம்பும். அந்த நினைப்பு தலையெடுத்துச் சுன்னா அது தலை மேல ஒண்ணு ஓங்கிக் கொடுத்து உள்ளே அமுக்கிடு" என்றாள் மாலினி.



உண்மையிலேயே மாலினி இந்த ஆறு ஆண்டு காலத்தில் அவளுக்கு உண்மையான ஒரு தோழியாகத்தான் இருந்தாள். அவளுடைய அந்த மனக்கசப்பில் இருந்து வெளியே வருவதற்கு மாலினி எவ்வளவோ உதவி செய்தாள்.

அது மட்டுமில்லாமல் அவள் இவளுடைய ரகசியத்தை காக்கக் கூடிய ஒரு தோழியாகவும் இருந்தாள். சம்யுக்தா வினுடைய பெற்றோருக்கும் கூட இவளுடைய ரகசியம் தெரியாது என்றால் அவள் அவ்வளவு அழகாக இவளோடு ஒத்துழைத்தாள் என்றுதானே பொருள்.

"சரி, இதையும் வாங்கியாச்சு. போலாமா?" என்றாள் மாலினி.

"போலாம்டி!" என்று அவர்கள் அந்தப் பெரிய காம்ப்ளக்ஸில் இருந்து வெளியே வந்தார்கள். காந்திபுரம் தொகுதியிலேயே அந்த காம்ப்ளக்ஸ் இருந்தது. அதிலே இந்த ஓவியக் கடையும் இருந்தது.

இது அவ்வளவு பிரபலமாக எல்லாருக்கும் தெரியாத கடை. குறிப்பாக ஆர்வமுள்ளவர்களுக்கு மட்டும்தான் இப்படியான ஓவியம் இங்கே கிடைக்கும் என்று தெரியும்.

அந்தக் கடைக்காரரே நல்ல ஓவியம் வந்தால் வாங்கக் கூடியவர்களுக்கு ஃபோன் செய்து சொல்லுவார். அது போல மாலினிக்கும் சொன்னார். மாலினியும் ஓரளவு வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவள் தான். அவளும் அவ்வப்பொழுது இப்படி ஏதாவது வாங்குவாள்.

அவள் உடனே சம்யுக்தாவிற்கு ஃபோன் செய்தாள். இரண்டு பேருமாக இந்த ஓவியத்தை வாங்குவதற்காக

வந்திருந்தார்கள். வரும்பொழுதே மாலினி சொல்லி விட்டாள். "இந்த தடவை உனக்கு ஃபர்ஸ்ட் பிரஃபரன்ஸ். ஏன்னா, நீ பாவம் ரொம்ப நாள் கழிச்சு ஊர்ல இருந்து வந்திருக்கே. அதனால பர்மிட் பண்றேன். ஆனா நெக்ஸ்ட் டைம் ஒரே ஒவியத்துக்கு ரெண்டு பேரும் ஆசைப் பட்டோம்னா குலுக்கல் போட்டுத்தான் எடுக்கணும்" என்றாள் மாலினி.

சம்யுக்தா சிரித்தாள். "அவ்வளவு கஷ்டம் எதுக்குடி? உனக்கு அதுதான் பிரியம் அப்படின்னா நான் விட்டுக் கொடுத்துடுவேன்" என்றாள்.

மாலினி சிரித்தாள். "ஏண்டி ஃபைட் பண்ண மாட்டியா?" என்றாள்.

"ஃபைட் பண்ணினா ஜெயிக்க முடியும்னா ஃபைட் பண்ணலாம். உங்கிட்ட பைட் பண்ணி ஜெயிச்சேன்னு வச்சுக்கயேன் எனக்கு அது உறுத்தலாவே இருக்கும். பாவம் மாலினி ரொம்ப ஆசைப்பட்டா நாம கொடுக்காம விட்டுட்டோம். அப்படின்னு வருத்தப்பட்டுட்டே இருப்பேன்."

மாலினி சிரித்தாள், "நல்லா ஐஸ் வைக்கிறடி" என்றாள்.

இரண்டு பேரும் பேசிக் கொண்டே அந்தக் காம்ப்ளக்ஸை விட்டு வெளியிலே வந்தார்கள்.

மையமான பகுதியிலே இருந்தாலும் அங்கே பார்க்கிங் செய்வதற்கு வேண்டுமளவுக்கு இடம் இருந்தது.

சம்யுக்தா தன்னுடைய சான்ட்ரோ காரிலே வந்திருந் தாள். அதை எடுக்கலாம் என்று அந்தப் பக்கத்திற்குப் போகும்பொழுதுதான். அவள் பார்வையில் அது பட்டது.



சட்டென்று அவள் கைகள் மாலினியினுடைய இடது மணிக்கட்டைப் பிடித்தது.

மாலினி நின்றாள். திரும்பி அவளைக் கேள்விக் குறியாக பார்த்தாள்.

சம்யுக்தா அவளைப் பார்த்து விட்டுத் தன் கண்களை வேறொரு இடத்திற்கு ஓட்டினாள். அப்படிப் பார்வையைச் செலுத்திக் கொண்டே மாலினியை உள்ளே இழுத்தாள். இரண்டு பேரும் அவர்கள் நின்று கொண்டிருந்த இடத்தில் இருந்த கடையில் இருந்த ஷோக்கேஸிற்குப் பின்னால் ஒதுங்கிக் கொண்டார்கள். யாரைப் பார்க்கக் கூடாது என்று அவள் இத்தனை நாள் திட்டம் போட்டுக் கொண்டிருந் தாளோ? அந்த மனிதன் தன்னுடைய ஐந்தே முக்கால் அடி உயரத்துக்கு கம்பீரமாக நடந்து சென்று ஒரு காரினுடைய கதவை திறந்து கொண்டிருந்தான்.

அவன் டிரைவிங் சீட்டில் அமர பின்னாலே ஒரு பெண், சுடிதார் அணிந்த பெண், அவனிடம் ஏதோ சொல்லிக் கொண்டே போய் டிரைவர் சீட்டுக்கு பக்கத்து சீட்டிலே அமர்ந்தாள். டிரைவர் சீட்டிலே அமர்ந்தவன், எட்டிப் பின் கதவை திறந்து விட இரண்டு குழந்தைகள் அதிலே ஏறிக் கொண்டார்கள்.

ஒரு குழந்தைக்கு அநேகமாக ஏழு வயது இருக்கும். இன்னொரு குழந்தைக்கு ஐந்து வயது இருக்கும்.

உள்ளே அவர்கள் ஏறிக் கொண்டு அமர்ந்து ஏதோ சொல்ல அவன் வாய் விட்டு சிரித்ததை இங்கிருந்தே பார்க்க முடிந்தது. சிரித்துக் கொண்டே திரும்பி அந்தப் பெண்ணிடம் ஏதோ சொல்ல அவளும் சிரித்தாள். நான்கு

பேரும் ஒரு கலகலச் சிரிப்புடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். அவன் மெல்ல காரை நகர்த்தினான்.

கார் நகரும் வரை மாலினியின் கையை இறுகப் பிடித்துக் கொண்டு சம்யுக்தா நின்று கொண்டிருந்தாள். அந்த நேரத்தில் சம்யுக்தாவின் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. மாலினியும் தன் கையால் அவள் மணிக்கட்டை அழுத்திக் கொடுத்தாள்.

பிறகு திரும்பி சம்யுக்தாவைப் பார்த்தாள். ''இதோ பாருடி. இனிமேல் நீ அடிக்கடி பார்க்கத்தான் வேண்டி இருக்கும். இப்படியெல்லாம் ரியாக்ட் பண்ணினா என்னாகறது? தூக்கி எறிஞ்சுட்டுப் போன்னு நான் சொல்லிட்டு இருக்கேன். நீயேன் அதை தூக்கிட்டே அலைஞ்சுட்டு இருக்கே?'' என்றாள்.

சம்யுக்தா ஒரு பெருமூச்சு விட்டாள். ''புரியுது. புரியுது. ஆனா ரொம்ப நாளைக்கு அப்புறமா ஃபர்ஸ்ட் டைமா பார்த்ததுனால நான் கொஞ்சம்,,,!'' என்று தடுமாறினாள்.

''என்ன? அஃபெக்ட் ஆயிட்டியா? அஃபெக்ட் ஆகக் கூடாதுடி. உன்னைப் பார்த்துதான் அந்தாளு பயப்படணும்'' என்றாள்.

''எனக்கு பயமெல்லாம் இல்லடி!'' என்றவள்.

''சரி வா! வேற பேசலாம்'' என்று மாலினியை இழுத்துக் கொண்டு காரை நோக்கி நடந்தாள்.

கோவைக்கு வர மாட்டேன் என்று அப்பாவிடம் பிடிவாதம் பிடித்திருக்க வேண்டுமோ? என்று முதல் முதலாக அவள் உள்ளத்திலே ஒரு எண்ணம் தோன்றியது.



## அத்தியாயம் - 2

''இவ்வளவு வேகமாக ஓடாதடி'' என்றாள் மாலினி.

சம்யுக்தா கலகலவென்று சிரித்தாள். ''இவ்வளவு வேகமாக ஓடாதயா? தடி பிடிச்சுட்டு நடக்கச் சொல்றியா? அதுக்கு பேரு ஜாக்கிங் இல்லடி வாக்கிங்.'' என்றாள் ராகம் போட்டு.

மாலினி முறைத்தாள். ''இதுக்குத்தான் நான் உன் கூட வரமாட்டேன்னு சொல்றது?'' என்றாள். ''வெட்கமா இல்லை உனக்கு? இவ்வளவு யங்கான ஒரு கேர்ள். வேகமாக ஓட முடியலைன்னு சொல்றியே?'' என்றாள் சம்யுக்தா.

''உன் அளவுக்கு வேகமா ஓட முடியலைன்னு தானே சொன்னேன். நான் ஒண்ணும் ஓட மாட்டேன்னு சொல்லலை''

''சரி, நீ இப்படியே தடவித் தடவி மெதுவா வா. நான் கொஞ்சம் முன்னாடி போறேன்'' என்று சொல்லி விட்டு சம்யுக்தா வேகம் எடுத்தாள். சம்யுக்தா பள்ளி நாட்களில் இருந்தே ப்ளேயர். விளையாட்டு வீராங்கனை. அதனால் அவளால் வேகமாக ஓட முடிந்தது.

மாலினி அதை லேசான பொறாமையுடன் பார்த்து விட்டுத் தனக்கேற்ற வேகத்தில் தொடர்ந்து ஓடலானாள். அவர்கள் இருவரும் ஒரு கல்லூரி வளாகத்தில் ஓடிக் கொண்டிருந்தார்கள்.

சம்யுக்தா அப்பொழுது பி.ஆர்க். படிப்பின் இறுதி ஆண்டில் இருந்தாள். விடுமுறைக்கு வந்திருந்தாள்.

மாலினியும் சென்னையில் தான் படித்துக் கொண்டிருந்தாள். பள்ளி நாட்களில் இருந்தே இருவருக்கும் அறிமுகம். ஆனால், இவ்வளவு நெருங்கிய தோழிகள் ஆக வில்லை.

இரண்டு பேரும் சென்னைக்கு படிப்புக்குச் சென்ற போது அவர்கள் பெற்றோர்கள் ரயில் நிலையத்தில் சந்தித்துக் கொண்ட பொழுது அறிமுகப்படுத்திக் கொண்டார்கள்.

அதற்குப் பிறகு இரண்டு குடும்பங்களும் நெருங்கி விட்டார்கள். மாலினி வேறொரு கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள். அவள் பயோ டெக்னாலஜி என்ற படிப்பை ஒரு பெரிய பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தாள்.

இரண்டு பேரும் ஒரே விடுதியில் தங்கிக் கொண்டார்கள். ஒரே அறையில் கூட தங்கினார்கள். அதனால் மிகவும் நெருங்கியவர்களாகி விட்டார்கள். ஒன்றாக சென்னையில் இருந்து வருவது போவது, கோயமுத்தூருக்கு வந்தாலும் கூட தொடர்ந்து ஒன்றாக வெளியே செல்வது என்று அவர்கள் மிக நெருங்கிய தோழிகளாக ஆகி விட்டார்கள்.

கோவைக்கு வந்தால் கண்டிப்பாக இந்தக் கல்லூரி வளாகத்தில் ஜாக்கிங் செய்வது அவர்களுக்கு பிடித்தமான விஷயம். காலை நேரத்தில் மட்டும் அந்தக் கல்லூரியில் இதற்கான அனுமதி உண்டு. எல்லோரையும் அனுமதித்து விட மாட்டார்கள். சம்யுக்தாவின் தந்தைக்கு தெரிந்த ஒரு பேராசிரியர் அந்தக் கல்லூரியிலே இருந்ததால் சிறப்பு அனுமதி வாங்கிக் கொடுத்திருந்தார்.

காலை நேரத்தில் மரங்களுக்கு நடுவே சுத்தமாக இருந்த அந்த சின்னத் தார்பாதையிலே ஓடுவது அவ்வளவு சுகமாக இருந்தது சம்யுக்தாவிற்கு.



ரசித்து, ருசித்து, அனுபவித்து ஓடிக் கொண்டிருந்தாள். முதல் ரவுண்டு முடிக்கையிலேயே அங்கே இருந்த சின்ன ஸ்டேடியத்திற்கு முன்பாக இருந்த கிரவுண்டை கவனித்தாள். இளைஞர்கள் சிலர் அங்கே விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

அவளுக்கு அறிமுகமானவர்களும் ஒன்றிரண்டு பேர் உண்டு. அவளைப் பார்த்துக் கையாட்டினால் இவளும் கையாட்டி விட்டு ஓடிக் கொண்டிருப்பாள்.

இன்றைக்கு புதிதாக ஒரு குருப் பூ பந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

விளையாட்டை விட அவர்களுடைய சத்தமும் சிரிப்பும் அதிகமாக இருந்ததை கவனித்தாள். லேசாகப் புன்னகைத்துக் கொண்டு தன் ஓட்டத்தை தொடர்ந்தாள்.

அவளது கல்லூரியிலும் பார்த்திருக்கிறாளே இந்த வயதுக்கே உண்டான சிரிப்பும், குறும்பும் இருக்கத்தானே செய்யும் என்று எண்ணிக் கொண்டு ஓட்டத்தை தொடர்ந்தாள்.

இரண்டாவது ரவுண்டு முடிகிற நேரத்தில் அவள் மீது பூ பந்து ஒன்று பொட்டென்று விழுந்தது.

அவள் நின்றாள். குனிந்து அதை எடுத்தாள். அந்த நால்வரில் ஒருவன் அவளை நோக்கி ஓடி வந்தான்.

முன் நெற்றியில் விழுந்த முடியை ஒரு உதறு உதறித் தள்ளி விட்டு *'சாரி மேடம்!'* என்றான்.

''பரவாயில்லை, பரவாயில்லை'' என்று சொல்லி விட்டு அவள் அந்தப் பூ பந்தை நீட்டினாள்.

"தாங்க் யூ" என்று சொல்லி விட்டு அவன் வாங்கிக் கொண்டு போனான்.

அதை அவள் பெரிதாகவும் எடுத்துக் கொள்ள வில்லை. ஆனால் ஏனோ, அந்தப் பையனுடைய தோற்றம் ஒரு நிமிடம் அவள் மனதுக்குள் விளையாட்டுக் காட்டி விட்டுப் போனது போல இருந்தது.

தீட்சண்யமான கண்கள். அவள் 'பரவாயில்லை' என்று சொல்லி விட்டு பூ பந்தை நீட்டிய பொழுது அழகாக சிரித்தான்.

அந்த வரிசைப் பற்கள் பளிச்சென்று மின்னின. அந்தச் சிரிப்பே திரும்பவும் நினைவுக்கு வரவும் தலையிலே ஒரு தட்டு தட்டிக் கொண்டாள். "ரொம்ப ரொமாண்டிக் ஆயிட்டே சம்யுக்தா!" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்.

"ரொமாண்டிக்கா? ஒரே ஒரு தடவை பார்த்த ஆளைப் பார்த்தா. வாட் நான்சென்ஸ்!" என்று தலையைச் சிலுப்பிக் கொண்டாள்.

வழக்கமாக ஓடுகிற ஐந்து ரவுண்டுகளை முடித்து விட்டு அந்த ஸ்டேடியத்தில் வந்து அமர்ந்தாள்.

கை, கால் முகம் துடைத்துக் கொண்டு மாலினியின் வரவுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள். மாலினி அப்பொழுதுதான் நான்காவது சுற்று ஓடிக் கொண்டிருந் தாள்.

நான்காவது சுற்றை முடித்து விட்டு வந்து இவள் அருகில் அமர்ந்து கொண்டாள். "ஏண்டி, அஞ்சு ரவுண்டு போகலையா?" என்றாள் சம்யுக்தா.



"போதும் போ. அஞ்சு ரவுண்டு போய்த்தான் ஆகணும்னு எந்த சட்டத்துல சொல்லியிருக்கு?" என்றாள்.

"ஏய், அட்லீஸ்ட் நாற்பது நிமிஷமாவது ஓர்க் பண்ணணும்டி. முதல் இருபது நிமிடம் பாடி வார்ம் அப் ஆகும். அதுக்கப்புறம்தான் நம்மளோட எக்ஸர்சைஸோட பலனே கிடைக்கும்." என்றாள்.

"ஐய்யய்யோ பாட்டி! தாங்கலையே" என்று அவள் சிணுங்கினாள்.

"சோம்பேறி ,சோம்பேறி," என்று செல்லமாகத் திட்டி விட்டு எழுந்து கொண்டாள். அவள் பார்வை மறுபடியும் அந்த இளைஞர்கள் இடத்தில் போனது.

நால்வரும் கடுமையான போட்டியுடன் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அதிலேயும் அவளைப் பார்த்து சிரித்த அந்த இளைஞன் இன்னும் சிறப்பாக விளையாடுவதாக அவளுக்கு தோன்றியது. சற்று நேரம் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"ஏய்! அவங்க நல்லா விளையாடறாங்க இல்லை?" என்றாள் சம்யுக்தா.

"ஆமா, இத்தனை நாளா பார்த்தது இல்லையே?" என்றாள் மாலினி.

"போடி, நாம என்ன வருஷம் முழுக்கவா இங்க வந்து விளையாடறோம். ஏதோ வெக்கேஷன்கறதாலே வந்திருக் கோம். அவங்க எப்பவுமே வர்றவங்களா இருக்கும்" என்றாள்.

"அதானே? இங்க வர்றவங்க சரித்திரமெல்லாம் தெரிஞ்சா இருக்கு?" என்று சொல்லிக் கொண்டாள் மாலினி.

பிறகு மெல்லச் சிரித்துக் கொண்டு இவளை நோக்கித் திரும்பி "ஏய், அந்தப் பையன் கொஞ்சம் ஸ்மார்ட்டா இல்லை?" என்றாள்.

"ஸ்மார்ட்டா இல்லை?" என்று அவள் கை காட்டிய பையன் சற்று முன் சிரித்த பையன் தான் என்பது இவளுக்கு புரிந்தது.

"ஏய்! சும்மா இருடி. கவனிச்சுடப் போறாங்க!" என்று சொல்லிவிட்டு நடந்த நிகழ்வைச் சொன்னாள். "என்னாச்சு தெரியுமா? நான் இரண்டாவது ரவுண்டு ஓடி வந்துட்டு இருக்கும் போது அந்த கார்க் வந்து என் மேல விழுந்துடுச்சு. அவரு தான் வந்து சாரி சொல்லிட்டு வாங்கிட்டுப் போனாரு!" என்றாள்.

"அவரா?" என்றாள் மாலினி.

"பின்னே? அவன் இவன்னு சொல்லி அதே பழக்க மாயிடும். அப்புறம் அவங்க காதுல விழுந்தா சங்கடம்டி" என்றாள் சம்யுக்தா.

மாலினி கண்களை அகல விரித்தாள். "எப்படிடி இப்படி யெல்லாம் புத்தரானே நீ?" என்றாள்.

"ஏய்! இதுக்கெல்லாம் புத்தரை இழுக்காதே? அவரு பெரிய ஞானி!" என்றாள் சம்யுக்தா.

மாலினிக்கும் கூட சம்யுக்தாவின் அந்த குணம் பிடித்திருந்தது. விளையாட்டாகக் கூட பெரிய தலைவர்





களையோ ஞானிகளையோ பற்றி கேலி பேசினால் அதுவும் குறைவாகப் பேசினால் ஒத்துக் கொள்ளவே மாட்டாள்.

"சாரிம்மா சாரி. உன் ஃபீலிங் தெரியாம பேசிட்டேன்" என்று மறுபடியும் மன்னிப்புக் கேட்டாள் மாலினி.

"சரிடி, போகலாமா?" என்று இரண்டு பேரும் அந்த ஸ்டேடியத்தை விட்டு இறங்கி நடந்தார்கள்.

அவர்கள் அந்தப் பெரிய கல்லூரியினுடைய கேட்டுக்கு போய் சேருவதற்கும் அந்த நால்வரும் இரண்டு பைக்கு களில் கிளம்பி வருவதற்கும் சரியாக இருந்தது.

பைக் தொடர்ந்து வரவே மாலினியும், சம்யுக்தாவும் ஒரு புறம் ஒதுங்கி நின்றார்கள். பின்னால் வந்த பைக்கை ஓட்டிக் கொண்டு வந்தான் அந்த இளைஞன்.

இவளைப் பார்த்தவுடனே மெல்லப் புன்னகைத்து விட்டு "போயிட்டு வர்றேன்" என்பது போல தலையாட்டினான். இவளும் தன்னிச்சையாக கையை ஆட்டி விட்டு புன்னகைத்தாள்.

அந்த பைக் கடந்து போய் விட்டது. மாலினி இதை ஆச்சரியமாகப் பார்த்து விட்டு "என்னடி இது ஆச்சரியமா இருக்குது..?"

"என்னைக் கேட்டா? எல்லாம் ஒரு கர்ட்டசிதான், அவன் தலையாட்டினான். நானும் தலையாட்டினேன்" என்றாள் இவள்.

"சரி.... சரி!" என்று ஒரு விதமாக இழுத்தாள் மாலினி. சம்யுக்தா அவளை முறைத்தாள்.

"ஏய்! சும்மா ஒரு பையன் கிட்ட பேசினாலே அதுக்கு வேற ஒரு அர்த்தம் கற்பிச்சிடுவீங்களா? நம்ம காலேஜ்ல எத்தனை பேரைப் பார்க்கிறோம். டிரெயின்ல எத்தனைப் பேரை பார்க்கிறோம். சும்மா இருடி" என்று மிரட்டி விட்டு இரண்டு பேரும் அந்த கேட்டுக்கு வெளியே வந்தார்கள்.

"இன்னைக்கு எதுலடி வந்தே?" என்று கேட்டாள் சம்யுக்தா

மாலினி "இன்னைக்கு மாருதி எய்ட் ஹன்ட்ரட்ல வந்தேண்டி!" என்றாள்.

"ஆட்டோவா?"

"இருக்கும்டி இருக்கும். அதை எங்க அண்ணன் போன பர்த்டேவுக்கு வாங்கிக் கொடுத்தான்"

"சரி, சரி, நீ ஓட்டி நான் வரணும்னு இருக்கு"

"அவ்வளவு ரோஷப் படறவ, நீ உன் காரை எடுத்துட்டு வந்திருக்க வேண்டியதுதானே?" என்றாள். "எங்கடி எங்கப்பா சைக்கிள் எடுத்துட்டுப் போங்கறாரு" என்றாள் சம்யுக்தா.

மாலினி குபீரென்று சிரித்தாள். "ஆமாமா! அவருதான் நேர்மைத் திலகமாயிற்றே?" என்றாள்.

"இல்லடி. இப்ப இருந்தே எங்கே போனாலும் கார்ல போய் பழகக் கூடாது. சைக்கிள்ல போ. பஸ்ல போ. அப்படிங்கறாரு" என்றாள்.

"அதுவும் நிஜம்தான்டி. ரொம்ப சொகுசா இருந்து பழகிட்டோம்னா அப்புறம் பின்னாடி கஷ்டப்பட வேண்டியதுதான்" என்றாள் மாலினி.



"அப்ப ஒண்ணு செய்வோமா?" என்றாள் சம்யுக்தா.

"என்னடி?" என்றாள் மாலினி.

"நாளைக்கு மருதமலைக்கு சைக்கிள்ல போவோமா?" என்றாள்.

"இது நல்ல ஐடியாவா இருக்கே?" என்றாள் மாலினி.

"வெரி குட். நாளைக்கு நான் உங்க வீட்டுக்கு வந்துடறேன். நைட்டே என்னோட சைக்கிளை கொண்டு வந்து வச்சிடட்டுமா?" என்றாள் மாலினி.

இரண்டு பேரும் உற்சாகமாகத் திட்டமிடலானார்கள்.

"ரொம்ப நாளாச்சேடி. அவ்வளவு டிஸ்டன்ஸ் போக முடியுமா?" என்றாள் சம்யுக்தா.

"போலாம்! போலாம்! இல்லாட்டி ஒண்ணு பண்ணலாம்டி. அங்க போற வழியில என்ன இடம்பா?" என்று சற்று நேரம் யோசித்து விட்டு "ம்... புதூர்... புதூர்ல என் ஃப்ரண்டு வீடு இருக்கு. அங்க வேண்ணா கொண்டு போய் காரை நிறுத்திவிட்டு அங்க இருந்து சைக்கிள எடுத்திட்டு போவோமா?" என்றாள்.

சம்யுக்தா தலையில் அடித்துக் கொண்டாள். "சைக்கிளை எப்படி கொண்டு போய் வைப்பே அவங்க வீட்ல?"

"அது ஒண்ணும் பிரச்சினையில்லைடி அவ வீட்லயும் ரெண்டு சைக்கிள் இருக்கு. அவளோடதும் அவங்க அக்காவோடதும் இருக்கு. கேட்டா கொடுப்பா!" என்றாள்.

"சரி, கேட்டு ஃபைனலைஸ் பண்ணிடு!" என்றாள்.

திட்டமிட்டபடியே அடுத்த நாள் சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பினார்கள். ஆனால், அவர்கள் எதிர்பாராத விஷயம் ஒன்றும் நடந்தது.

சம்யுக்தா மாலினியை முறைத்தாள் "இது தேவையாடி?" என்றாள்.

மாலினி என்ன பதில் சொல்வது என்றே தெரியாமல் முகத்தை தொங்கப்போட்டுக் கொண்டு நின்றாள். "நான் என்னடி கண்டேன். நான் வேற மாதிரி நினைச்சேன்." என்றாள்.

"என்னத்தை வேற மாதிரி நினைச்சே?" என்று மறுபடியும் கடிந்து கொண்டாள் சம்யுக்தா.

இரண்டு பேரும் பரிதாபமாகத் தங்களிடமிருந்த சைக்கிள்களை பார்த்தார்கள். மாலினி 'ஃப்ரெண்டு வீடு இருக்கு. ப்ரெண்டோட அக்கா சைக்கிள் இருக்கு. ரெண்டு பேரும் எடுத்துக்கலாம்' என்று சொல்லியிருந்தாளே என்று நம்பிக் கொண்டு வந்தாள் சம்யுக்தா.

காரை நிறுத்தி விட்டு உள்ளே போனதும். மாலினியினுடைய தோழியினுடைய அம்மா பிரமாதமாக வரவேற்றார்கள். வரவேற்புக்கெல்லாம் ஒன்றும் குறை இருக்கவில்லை. மாலினியினுடைய தோழி வேதா வெளியே போய் இருந்தாள்.

"வேதா கிளம்பிட்டாம்மா. ஸாரிம்மா. என்கிட்ட சொல்லிட்டுப் போனா. இதோ சைக்கிள் ரெண்டும் அந்த மாடிப் படிக்கு கீழே இருக்கிற ரூம்ல இருக்கு. எடுத்துக் கோங்க. இதோ சாவி! வச்சுக்கோங்க டிரைவ் போயிட்டு வந்துட்டு நீங்களே பூட்டி உள்ள வச்சுடுங்க" என்று சாவியை நீட்டினாள் வேதாவின் அம்மா.



மாலினி "சரிங்க ஆண்டி.. சரிங்க ஆண்டி." என்று வாங்கிக் கொண்டாள்.

"காஃபி கலக்கட்டுமா?" என்று கேட்டாள் வேதாவின் அம்மா.

கேட்கும் போதே இவர்கள் வேண்டாம் என்று சொல்லி விட்டால் தேவலை என்பது போலத்தான் கேட்டாள். புரிந்து கொண்ட மாலினியும், சம்யுக்தாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"பரவாயில்லை ஆண்ட்டி. நீங்க கிளம்பிட்டு இருக்கீங்க? நாங்க காஃபி சாப்பிடறது இல்லை" என்று இழுத்தாள் மாலினி.

"சரிம்மா டேக் கேர்." என்று சொல்லி விட்டு அவசர மாகப் போய் டு வீலரை கிளப்பினாள் அந்த அம்மையார்.

அவர்கள் போனதற்குப் பிறகு அந்த மாடிப் படிக்குக் கீழே இருக்கிற அறையைப் போய் திறந்தார்கள் தோழிகள் இருவரும். கதவே கிறீச்சிட்டது. உள்ளே அந்த இரண்டு சைக்கிள்கள் நின்று கொண்டிருந்தன.

தூசி தட்டியே பல நாட்கள் ஆகியிருக்கும் போல நின்று கொண்டிருந்தது அந்த சைக்கிள். சம்யுக்தாவிற்கு அப்போதே கோபம் கிளம்பியது. முறைத்தாள். மாலினி தயவாக அவளைப் பார்த்தாள்.

"சாரிடி, நான் இப்படி இருக்கும்னு நினைக்கலை. போன மாசம் கூட சைக்கிள் ஓட்டிட்டு வந்ததைப் பார்த்தேன். சரி வாங்கிக்கலாம்னு நினைச்சேன்" என்றாள்.

"சரி, சைக்கிளை எடு" என்றார்கள். இரண்டு பேரும் சைக்கிளை வெளியே தள்ளி உருட்டி, தூசி தட்டி விட்டு கிளம்பினார்கள்.

"காத்திருக்காடி?" என்றாள் சம்யுக்தா.

"இருக்கு இருக்கு மேனேஜ் பண்ணிக்கலாம். இல்லைன்னா வழியில எங்காவது அடிச்சுக்கலாம்" என்றாள்.

காரை உள்ளே நிறுத்தி விட்டு கேட்டை பூட்டி விட்டு இரண்டு பேரும் சைக்கிளை தள்ளிக் கொண்டு கிளம்பினார்கள். ஒரு கிலோ மீட்டர் தூரம் போய் இருப்பார்கள். சைக்கிளில் இருந்த காத்து இறங்கி விட்டது தெரிந்தது. மாலினி எடுத்துக் கொண்ட வண்டி ஒழுங்காகத்தான் இருந்தது.

வண்டியை நிறுத்தி விட்டு இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்துக் கொண்டு நின்றார்கள். அப்பொழுதுதான் கேட்டாள் "உனக்கு இது தேவையாடி?" என்று.

"இப்ப என்னடி செய்யறது?" என்றாள் மாலினி.

"என்ன செய்யறது? பேசாம வண்டியைத் திருப்பி நடந்து போய் அங்கே நிறுத்திவிட்டு நம்ம காரை எடுத்துட்டுத் திரும்பி வீட்டுக்குப் போக வேண்டியதுதான்" என்றாள் சம்யுக்தா.

"இல்லடி, இங்க பக்கத்துல எங்காவது காத்து அடிக்கிற இடம் இருக்கும். பார்க்கலாம்" என்றாள் மாலினி.

"இதோ பாருடி, நீ ஏதாவது சஜெக்ஷன் கொடுத்தே கொன்னே போடுவேன்" என்றாள் சம்யுக்தா. மாலினி



என்ன செய்வது என்று தெரியாமல் அவளைப் பார்த்து அசடு வழிய சிரித்தாள்.

"சிரிக்காதே. ஆசை ஆசையா ரைடிங் போலாம்னுட்டு வந்தேன்"

"சரிடி.. அதனால் என்ன? பார்க்கலாமே இங்கே ஏதாவது தெரிஞ்ச வீடு இருந்தா நிறுத்திட்டு." என்றாள் மாலினி.

"இனிமே யாராவது தெரிஞ்ச வீடு, ஃப்ரெண்ட்ஸ்னெல்லாம் சொன்னே....? என்றாள் சம்யுக்தா கடுப்பாக.

அவள் சொல்லி முடிப்பதற்கு முன்பாக எதிர் வீட்டு கேட் திறந்தது. அந்தப் பக்கம் இருந்து இரண்டு இளைஞர்கள் வெளியிலே வந்தார்கள். முன்னாலே வந்த இளைஞன் திரும்பிப் பின்னாலே நிற்கின்ற ஒரு பெரியவரிடத்திலே பேசினான். "சரிங்க சித்தப்பா. நான் கிளம்பறேன். நீங்க அப்பாவுக்கு ஃபோன் பண்ணி விபரம் சொல்லிக்கோங்க. என்கிட்ட இந்த பண்டிலை அப்பா உங்ககிட்ட கொடுக்கச் சொன்னாரு. கொடுத்துட்டேன். அதுக்கு மேல நீங்களாச்சு உங்க பிரதர் ஆச்சு" என்று சொல்லிச் சிரித்தான் அந்த இளைஞன்.

சிரித்துக் கொண்டே திரும்பினான். மாலினியும், சம்யுக்தாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அந்த இளைஞன் வேறு யாரும் இல்லை. நேற்று இவனைப் பார்த்து சிரித்தானே அவன் தான்.

அவனும் இவர்களைப் பார்த்தவுடன் அடையாளம் கண்டு கொண்டான். "ஹலோ மேடம்! நீங்க என்ன இங்க நின்னுட்டு இருக்கீங்க?" என்று வந்தான். அவனோடு

அவனுடைய தோழனும் வந்தான். இவனால் சித்தப்பா என்று அழைக்கப்பட்ட பெரியவர். உள்ளே நின்ற படியே பார்த்துக் கொண்டிருந்தார்.

''இல்லை சார். நாங்க சும்மா அப்படியே ரைடிங் போலாம்னுட்டு வந்தோம். மாலினியோட ஃப்ரெண்டோட வண்டியை எடுத்துட்டு வந்தோம். ஆனா அது சரியா மெயின்டெய்ன் பண்ணலை போல இருக்கு. காத்து போயிடுச்சு'' என்றாள் சம்யுக்தா. அவள் சொல்லுவதே ஏதோ காத்து போன பலூன் மாதிரித்தான் தோற்றமளித்தது.

அவன் சிரிப்பை அடக்கிக் கொண்டான். ''ஓகே, ஓகே, நோ ப்ராப்ளம்.'' மாலினியும் சம்யுக்தாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''என்ன பண்ணப் போறீங்க?''

''என்ன பண்றது. ஒரு கிலோ மீட்டர்ல தான் அவங்க வீடு. கொண்டு போய் நிறுத்திட்டு காரை எடுத்துட்டுப் போக வேண்டியதுதான்'' என்றாள் சம்யுக்தா கடுப்பாக.

அவன் புன்னகைத்துக் கொண்டான் ''பாவம். ஆசையா ரைடிங் போலாம்னு வந்திருப்பீங்க போல இருக்கு'' என்றான்.

சம்யுக்தா ஒன்றும் சொல்லவில்லை.

''நோ ப்ராப்ளம் மேடம்!'' என்று திரும்பிப் பார்த்து ''சித்தப்பா காத்து அடிக்கிற பம்ப் இருக்கா?'' என்று கேட்டான்.

''இருக்குமே?'' என்று அவர் உள்ளே போய் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தார்.



''வாங்க. இங்கே வாங்க'' என்று அவர்களை சித்தப்பாவின் இல்லத்திற்கு அழைத்துக் கொண்டு போனான்.

போகும் போது ''ம் பைத பை, நாம இன்டரட்டியூஸ் பண்ணிக்கணும் இல்லை. ஐ ஆம் சந்திர காந்தன், இவன் முருக வேல்'' என்று தன்னுடைய நண்பனை அறிமுகப் படுத்தினான்.

இவளுக்கும் வேற வழி இருக்கவில்லை. ''ஐ ஆம் சம்யுக்தா. இவள் என் ஃப்ரெண்டு'' மாலினி.

''இணை பிரியாத தோழிகள் மாதிரி தெரியுது'' என்று புன்னகைத்தான் அவன்.

அதற்குள்ளாக வேல் முருகன் ஓடிப் போய் சித்தப்பாவிடம் இருந்து காற்றடிக்கும் பம்பை வாங்கிக் கொண்டு வந்தான். சைக்கிளுக்கு காற்று அடித்துக் கொடுத்தார்கள். அந்த நேரத்திற்குள்ளாக சித்தப்பா வீட்டிற்குள் தலையசைத்து ஏதோ சைகை காட்டினார். அடுத்த இரண்டு நிமிடங்களுக்காக காஃபி இரண்டு கப்பிலே வந்தது.

''குழந்தைங்களா! தம்பி காத்து அடிக்கிற வரைக்கும் இங்க வந்து உட்காருங்க'' என்று அழைத்தார் அந்த பெரியவர்.

இரண்டு பேருக்கும் காஃபி குடித்தால் தேவலை போலத்தான் இருந்தது. அதனால் உள்ளே போனார்கள்.

அந்த சிட் அவுட்டிலே நீளமாக ஒரு சோஃபா போட்டிருந்தார்கள். அதிலே அவர்களை அமரச் செய்து விட்டு சித்தப்பா உள்ளே போனார். இரண்டு பேரும் காஃபி கப்பை வாங்கிக் கொண்டு மெல்ல சுவைத்து அருந்தி

வார்கள். மருதமலைக்குச் செல்லுகிற அந்த வடவள்ளி ரோடு அந்த காலை நேரத்திலே மிகவும் ரம்மியமாக காட்சி அளித்தது.

ஒரு பத்து நிமிடங்களுக்குள்ளாக காத்து அடித்து முடித்த வுடனே முருகவேல் "டேய், காந்தா முடிஞ்சதுடா!" என்றான்.

"சரிடா, சித்தப்பாகிட்டே குடுத்துட்டு வந்துடு!" என்று இவன் அவர்களுக்குப் பக்கவாட்டிலே இருந்த சோபாவிலே போய் அமர்ந்தான்.

"ஸ்போர்ட்ஸ்னா ரொம்ப இன்ட்ரஸ்டா?" என்று கேட்டான்.

"எக்ஸர்ஸைஸ்னா ரொம்ப இன்ட்ரஸ்ட்!" என்றாள் சம்யுக்தா.

"ரெண்டுக்கும் என்ன வித்தியாசம்?" என்றால் அவன்.

"ப்ளேயர்ஸா இருந்தாத்தான் ஸ்போர்ட்ஸ், நாங்க ஒடம்பை மெயின்டெய்ன் பண்ணிக்கணும். அதுக்காக ஜாக்கிங், ரைடிங் பண்றோம்" என்றாள்.

மாலினி வந்த இடத்தில் எப்போதுமே நல்ல பெயர் எடுப்பதற்கு முயற்சிப்பாள். அது போல இரண்டு காலி கப்பையும் எடுத்துக் கொண்டு 'சித்தப்பா! என்று அழைத்துக் கொண்டு போனாள்.

சம்யுக்தாவுக்கு சிரிப்பு பொங்கிக் கொண்டு வந்தது. அவள் சந்திர காந்தனைப் பார்த்து குபீரென்று சிரித்தாள். அவனும் சிரித்து வைத்தான்.



அந்த இடைவெளியில் அவள் "நீங்க என்ன அந்த காலேஜ் ஸ்டுடண்டா?"என்றாள்.

அவன் முகம் மலர சிரித்தான். "தாங்க்ஸ் ஃபார் தி காம்ப்ளிமெண்ட்

"ஹலோ ஸ்டுடண்டான்னு கேட்டா என்னங்க காம்ப்ளிமெண்ட்" என்றாள் அவள்.

"மேடம் ஐ'ம் ரன்னிங் ட்வெண்டி ஃபைவ். காலேஜ் முடிச்சு வெளிய வந்து நாளாச்சு. ஆனாலும், என்னைப் பார்த்து காலேஜ் ஸ்டுண்டான்னு கேட்டா அது காம்ப்ளி மெண்ட் இல்லாம வேற என்ன?" என்றான்.

"யு லுக் லைக் எ ஸ்டுண்ட்" என்றாள் சம்யுக்தா சமாளிக்கும் விதமாக.

"தாங்க்யூ!" என்று அவன் காலரைத் தூக்கிக் கொண்டான். மித எளிதாக அவன் பழகியதைப் பார்த்து அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவனே தொடர்ந்து சொன்னான். "எனக்கு எல்லா காலேஜ்லயும் எது வேண்ணாலும் எடுத்துக்கோங்கன்னாங்க ஐ பிரெஃபர்ட் சிவில். அதனால சிவில் என்ஜினியர். சொந்தமா கம்பெனி வச்சிருக்கிறோம்."

"அப்படியா? வெரி நைஸ். வெரி நைஸ். நானும் பி ஆர்க் தான் பண்றேன்." என்றாள் சம்யுக்தா.

"ரியலி! ஓகோ! கட்டிட கலையும் கட்டிட வல்லுனரும் சந்திச்சிருக்கோம்!" என்று சிரித்தான் அவன். அவளும் புன்னகைத்தாள்.

''அப்ப நிறைய பேசறதுக்கு காமனா இருக்கும் இல்லை?'' என்றான்.

''தெரியவில்லை'' என்பது போல அவள் தோளைக் குலுக்கினாள்.

'சரி' என்று எழுந்தார்கள்.

''ரொம்ப தாங்க்ஸ் சார்'' என்று நன்றி சொன்னாள் சம்யுக்தா. அதற்குள்ளாக மாலினி வந்தாள். ''எவ்வளவு தூரம் போகப் போறீங்க?'' என்றான் அவன்.

''சும்மா ஒரு கிலோ மீட்டர்லேயிருந்து ஐந்து கிலோ மீட்டருக்குள்ளே போயிட்டு வந்துடுவோம்'' என்றாள் அவள்.

''ஒண்ணு பண்ணுங்களேன் நாளைக்கு வாங்க. நாம வேண்ணா மலை ஏறிட்டு வருவோம். அந்த மருத மலைக்குப் போற ரோட்டிலே ஜாக்கிங் பண்ணிட்டு வந்தா ரொம்ப நல்லா இருக்கும்'' என்றான்.

திடீரென்று இளைஞர்களோடு சேர்ந்து எப்படிப் போக முடியும் என்று அவளுக்கு யோசனையாக இருந்தது. ''ஹலோ, என்னுடைய விசிட்டிங் கார்டு தரேன். உங்க வீட்டுல சொல்லிட்டு... வேண்ணா ஒரு போலீஸ் கம்ப்ளய்ண்ட் கூட கொடுத்து வச்சுட்டு வாங்க. பத்திரமா கொண்டு போய் சேர்த்துடறேன்'' என்றான்.

அவள் சிரித்து விட்டாள். ''இல்லை...!'' என்று இழுத்தாள்.

''புரியுது... புரியுது. நீங்க ஜாக்கிரதையாத்தான் இருந்துக் கணும்!'' என்றான் அவன்.



அதைக் கேட்டுக் கொண்டே வெளியே வந்த சித்தப்பா ''நல்ல பையன்ம்மா. திடீர்னு ரெண்டு பொண்ணுங்களைக் கொண்டு வந்து இன்டரெடியூஸ் பண்றான். நம்ம வீட்ல இருந்து காஃபி கொடுக்கறோம். அப்படின்னா பையன் எப்படிப் பட்ட பையனா இருப்பான்னு நீங்களே யோசிச் சுக்கங்க''

சம்யுக்தா அசடு வழிய சிரித்தாள். ''நல்ல கெட்டிக்காரப் பையன். நல்லவங்களோடதான் பழகுவான்'' என்றார் சித்தப்பா.

''தாங்க்ஸ் சித்தப்பா!'' என்றான் அவன் பெருமையுடன் சித்தப்பாவைப் பார்த்து. ''சரிடா, உங்க அப்பன் கிட்ட சொல்லு எனக்கு இந்த டீலை முடிச்சுக் கொடுக்கச் சொல்லு!'' என்றார் சித்தப்பா.

''சித்தப்பா நான் சிம்ப்ளி கூரியர் மேன். நீங்கதான் ரெண்டு பேரும் பேசிக்கணும்'' என்று சிரித்து விட்டு, ''ஓகே மேடம். எனக்குக் கொஞ்சம் அவசர வேலை இருக்கு. நான் கிளம்பறேன். சைட்டுக்குப் போகணும்'' என்று அவன் கிளம்பினான். முருகவேலும் ஒட்டிக் கொண்டான்.

கையை ஆட்டி விட்டு அவர்கள் இந்தப் பக்கம் போக அவர்கள் சென்ற திசைக்கு நேர் எதிராக சம்யுக்தாவும் மாலினியும் சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பி னார்கள்.

''ரொம்ப நல்லவங்களா தெரியறாங்க!'' என்றாள் மாலினி.

''ம்...'' என்றாள் சம்யுக்தா.

அப்போது அவளுக்கு தெரியவில்லை. இந்த இளைஞன் தன்னுடைய வாழ்க்கையிலே ஒரு பெரிய சூறாவளியை கொண்டு வரப் போகிறான் என்று.

## அத்தியாயம் - 4

மூச்சு வாங்க நின்றாள் சம்யுக்தா. முதல் நாள் திட்டமிட்டது போலவே அவர்கள் இப்போது மருதமலையிலே அந்த மலைப் பாதையிலே ஏறிக் கொண்டிருந்தார்கள். இல்லையில்லை ஓடிக் கொண்டிருந்தார்கள். சற்று தொலைவு போயிருந்த சந்திரகாந்தன் அங்கே இருந்து திரும்பிப் பார்த்து நின்றான்.

"என்ன இவ்வளவு தானா?" என்பது போல அங்கிருந்து சைகை காட்டினான். இவள் தன்னுடைய வலது கையை 'இல்லை' என்பது போல ஆட்டி விட்டு "மூச்சு வாங்குது" என்றாள் சைகையில்.

"ஓகே, ரிலாக்ஸ் ரிலாக்ஸ். பண்ணிட்டு வாங்க" என்று சொல்லிவிட்டு அவன் மேலே தொடர்ந்தான். அவள் சுற்று முற்றும் பார்த்தாள். ஒரு ஓரமாக ஒரு பாலத்துத் திட்டுப் போல இருந்தது அதிலே ஐந்து நிமிடம் அமர்ந்து விட்டு தொடர்ந்தாள். அப்படி எழுந்திருக்கும் முன்பாக கீழே பார்த்தாள். கொஞ்சம் தொலைவில் மாலினி ஓடி வந்து கொண்டிருந்தாள். அவர்களுடைய தோழிகள் இரண்டு பேர் அதற்கும் சற்று பின்னாலே ஓடி வந்து கொண்டிருந்தார்கள்.

நேற்றைய தினம் தன்னுடைய விசிட்டிங் கார்டை எடுத்துக் கொடுத்து விட்டு உங்கள் வீட்டில் வேண்டுமானாலும் சொல்லி விட்டு வாருங்கள் என்று அவன் சந்திரகாந்தன் சொன்னது அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.



நேற்று வீட்டுக்குப் போகையிலே மாலினி அவளை ஆச்சரியமாகப் பார்த்தாள். "அவங்க கூப்பிடறாங்கன்னு நாளைக்கு வரலாங்கறியா?" என்று ஒரு விதமான திகிலுடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"ஆமாடி நல்ல தில்லா அட்ரஸ் கொடுத்து வீட்ல சொல்லிட்டு வாங்கன்னு சொல்றாங்கள்ல, அப்ப டீசன்டானவங்களாத்தான் இருப்பாங்க. அது மட்டும் இல்லடி சட்டுன்னு நம்மளைக் கூட்டிட்டுப் போய் அவங்க சித்தப்பாகிட்ட அறிமுகப்படுத்தினாரு. மனசுல கல்மிஷம் இருக்கறவங்க இப்படியெல்லாம் செய்ய மாட்டாங்கடி!" என்றாள் சம்யுக்தா.

மாலினி ஒரு பெருமூச்சு விட்டாள். "அதெல்லாம் நிஜம்தான். இருந்தாலும் திடீர்னு நாலு பாய்ஸ் கிட்ட பழகறது!" என்றாள்.

"என்னடி கோயமுத்தூர் வந்தவுடனே ரொம்பவும் சாமியார் வேஷம் போடறே?" என்றாள் சம்யுக்தா. "அப்படியில்லடி. நீ உங்க வீட்ல சொல்லிட்டு வருவே. எங்க வீட்ல சொன்னா...!" என்று இழுத்தாள். "ஒரு தடவை இரண்டு தடவை சத்தம் போடுவாங்கடி. அப்புறம் நம்பளை புரிஞ்சுக்குவாங்க" என்றாள் சம்யுக்தா.

அதுபோலவே தோழிகள் இரண்டு பேரும் அவர்கள் வீட்டிலே சொல்லி விட்டுத்தான் வந்தார்கள். இவர்களுடைய தோழிகள் இரண்டு பேரையும் அழைத்துக் கொண்டு வந்தார்கள்.

உண்மையாகவே அந்த அதிகாலைப் பொழுதில் அப்படி ஜாக்கிங் செய்தது அவளுக்கு மிகவும் பிடித்துப் போனது. ஏதோ கல்லூரியில் இருந்து கூட கொஞ்சம் பேர் வந்து அங்கே ஜாக்கிங் செய்து கொண்டிருந்தார்கள்.

கோவிலுக்கு மலை ஏறுபவர்கள் ஒரு பக்கம் படிகளிலே ஏறிக் கொண்டிருந்தார்கள். அது ஒரு விசேஷ நாள் இல்லை என்பதால் கூட்டம் அவ்வளவாக இல்லாமல் இருந்தது. ஆனால், தனிமை பயப்படுவது என்பதற்கெல்லாம் அங்கே ஒன்றும் வேலை இருக்கவில்லை. எனவே, இந்த அனுப வத்தை உள்வாங்கிக் கொள்வது இந்த இனிமையான காற்றை முழுமையாக அனுபவிப்பது என்று முடிவு செய்து கொண்டாள் சம்யுக்தா. பாதி தூரம் மேலே ஏறி நின்று கொண்டு கீழே பார்த்த பொழுது கோயமுத்தூர் நகரம் தீப்பெட்டிகளை அடுக்கி வைத்தாற் போல தோற்றத்துடன் அழகாக காட்சி அளித்தது.

''நல்லாயிருக்கில்லடி'' என்றாள் மாலினியிடம். 'ஆமாடி, சூப்பரா இருக்கு' என்றாள் அவளும்.

''மாசத்துக்கு ஒரு தடவை இரண்டு தடவை இப்படி வந்து ஜாக்கிங் பண்ணிட்டா கூட நல்லாயிருக்கும்'' என்றாள்.

''ஆமாடி நம்ம ஜனங்களுக்கு மந்த்லி ஒன்ஸ் மலை ஏறணும்னா முடியாது. அதனால தான் இப்படி கோயிலை வச்சுட்டாங்க. சாமி கும்பிடறதுக்கு மலை ஏறணுமில்லே. அப்படி ஏறினாலே உடம்புக்கு நல்லது'' என்றாள் சம்யுக்தா.

''ஆமாங்க பாட்டி!'' என்று சிரித்தாள் மாலினி.



''என்ன. மேடம் தத்துவம் சொல்றாங்களா?'' என்ற படியே அவர்கள் அருகிலே வந்து நின்றான் சந்திர காந்தன்.

''உங்களுக்குத் தெரியாது. இப்பத்தானே பழக ஆரம்பிச் சிருக்கீங்க. கொஞ்ச நாள்ல புரியும். ஒரு பை வச்சுக்கணும்'' என்றாள் மாலினி.

''எதுக்கு?'' என்றான் சந்திரகாந்தன்.

''இவள் தத்துவம் தத்துவமா உதிர்ப்பா. நீங்க அப்படியே கையிலே ஏந்தி வாங்கி உங்க பையில நிறைச்சுக்கணும்'' என்றாள் மாலினி.

சந்திர காந்தன் சிரித்தான். ''என்னங்க சேம் சைடு கோல் போடறாங்க!'' என்றான்.

''வரட்டும். வரட்டும். என்கிட்ட ஏதாவது காரியத்துக்கு வருவாள்ல அப்பப் பார்த்துக்கறேன்'' என்றாள் சம்யுக்தா.

தோழிகள் இரண்டு பேரும் சிரித்தார்கள். அவனும் சிரித்தான்.

''எங்கேங்க உங்க தோஸ்துங்களையெல்லாம் காணோம்'' என்றாள் மாலினி.

''சோம்பேறிப் பசங்க. இத்தா முருகவேல் வரான்!'' என்று மற்ற இருவரையும் காட்டினான். அதில் ஒருவனை அருணாசலம் என்று அறிமுகப்படுத்தியிருந்தான். இன்னொருவனை கோவிந்தன் என்று அறிமுகப்படுத்தி விட்டு. 'கோவிந்தன்னா இவருக்குப் பிடிக்காது. கோவிந்தா அப்படின்னு கூப்பிட்டாலும் பிடிக்காது. கோவிந்த் அப்படின்னு சொல்லணும்' என்று அவன் முன்னிலையிலேயே கலாய்த் தான். அவன் ஒன்றும் அலட்டிக் கொள்ளவில்லை.

சிரித்து விட்டுச் சொன்னான். "ஆமாங்க. இவனுங்க ரொம்ப நட்பு மாதிரி பில்டப் குடுத்துட்டு நாலு பேரு போயிட்டிருக்கும்போது டேய் கோவிந்தா அப்படிம்பாங்க. அப்புறம் நம்மளை யாராவது திரும்பிப் பார்ப்பாங்களா? முதல் முயற்சியே கோவிந்தா ஆயிடுதுங்க" என்றான் அவன்.

இவர்கள் இரண்டு பேரும் சிரித்தார்கள். நான்கு பேரும் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டவுடன் நல்ல குடும்பத்தில் இருந்துதான் வருகிறார்கள் என்று இவளுக்கு தெரிந்தது.

"டேய், முருகவேல் பார்த்துப் பேசு. ஓவராப் பேசினா.....!" என்று இழுத்தான் சந்திர காந்தன்.

"ஓவரா பேசினா?!" என்றான் அவன் தெனாவெட்டாக.

"மேடத்தோட அப்பா பெரிய லாயர்டா" என்றான்.

"அப்படிங்களா?" என்றான் ஆச்சரியமாக அவன்.

"ஆமாம். ஆமாம் கொஞ்சம் பெரிய லாயர்தான்" என்றாள் மாலினி.

"அப்ப ஜாக்கிரதையா இருந்துக்கணும்டா!" என்றான் அருணாசலம் தலையை ஆட்டிக் கொண்டு.

"ஆமாடா, லாயர்கிட்டயும் போலீஸ்காரர்கிட்டயும் பத்தடி தள்ளியே நின்னுக்கணும்" என்றான் அருணாசலம்.

உடனே சம்யுக்தா புன்னகைத்தபடி சொன்னாள். "அப்படியெல்லாம் இல்லைங்க லாயர் கிட்டயும் போலீஸ் காரர்கிட்டயும் தாராளமா பழகலாம். ஆனால், வழக்குங்கிற சூழ்நிலைக்குப் போகாத அளவுக்குப் பார்த்துக்கங்க. அவ்வளவுதான்" என்றாள்.



"எச்சரிக்கை விடுத்து விட்டார்கள்" என்று சிரித்தான் சந்திரகாந்தன்.

"ஐய்யோ அப்படியெல்லாம் இல்லைங்க." என்றாள் அவள் படபடப்பாக.

"இல்லைங்க. இல்லாட்டியும் நாங்க ரொம்ப நல்ல பசங்கதான்"

"சரி வாங்க, கொஞ்ச நேரம் அந்தக் கல்லில உட்காரலாம்" என்று அழைத்துக் கொண்டு போனார்கள்.

"ஏய், கோவிலுக்குள்ளே போயிட்டு வரலாமா?" என்றாள் மாலினி.

"என்னடி இது வேர்த்து விறுவிறுத்து வந்திருக்கோம்!" என்று தயங்கினாள் சம்யுக்தா.

"அதனால் என்னடி குளிச்சுட்டுத்தானே வந்திருக்கோம் வா!" என்று இழுத்துக் கொண்டு போனாள் மாலினி.

இருவரும் போய் சுவாமி தரிசனம் செய்து விட்டு வந்தார்கள். மருதமலை முருகன் அழகாக சிரித்தான்.

"சாமி லட்சணமா இருக்கில்லடி" என்று சொல்லிக் கொண்டே வெளியிலே வந்தார்கள்.

முன்னாலே இருந்த அந்த பெரிய நிலப்பரப்பில் ஓரமாக போட்டிருந்த கல்பலகையின் மேலே அமர்ந்தார்கள்.

திரும்பிப் பார்த்தார்கள். அவர்கள் நாலு பேரையும் காணவில்லை. இவர்களுடைய தோழிமார்கள் ரேகாவும், லதாவும் மட்டும் வந்தார்கள்.

"செம பர்ஸனாலிட்டீஸ்டி. எங்கடி இப்படி புடிச்சீங்க?" என்று கேட்டாள் லதா.

சம்யுக்தா அவளை முறைத்தாள். "சீப்பாப் பேசாதீங்கடி" என்றாள்.

"இவளோட பெரிய வம்பாப் போச்சு. என்னடி சொன்னேன். நாலு பேரும் நல்லா பர்சனாலிட்டியா இருக்காங்கன்னு சொன்னேன்"

"அதை இப்படி டீசன்டா சொல்லலாம் இல்லே?" என்றாள் சம்யுக்தா.

"காலேஜ் ஸ்டூடண்ட் மாதிரி பேசுடி" என்றாள் லதா. சம்யுக்தா அதற்கு மேல் எதுவும் பேசவில்லை.

ஒரு பத்தடி தூரத்தில் சந்திரகாந்தன் ஒரு கூடையை எடுத்துக் கொண்டு வந்தான். கல் பலகையில் வைத்தான். "எல்லாரும் ரொம்ப களைச்சுப் போயிருக்கீங்க. எங்க அம்மா சுண்டல் செய்து அனுப்பியிருக்காங்க. ஹாட் பேக்கில் வைத்து எடுத்துட்டு வந்திருக்கேன்" என்று எடுத்துக் கொடுத்தான்.

எல்லோரும் அந்த நேரத்தில் அது தேவாமிர்தமாக இருந்தது. ஆளுக்கு கொஞ்சம் அள்ளி வாயிலே போட்டுக் கொண்டார்கள். அதற்குள்ளாக அவன் உள்ளே இருந்து பனையோலை கிண்ணங்கள் எடுத்தான். அதிலே பரிமாறிக் கொடுத்தான்.

யூஸ் அன் துரோ கப் கொண்டு வந்திருந்தான். அதனால் ஆளுக்கு இரண்டு கப் மூன்று கப் என்று விளாசித் தள்ளினார்கள். "அப்பாடா! இறங்கிப் போறதுக்கு தெம்பு கிடைச்சது" என்றாள் லதா.

"இறங்கிப் போறதுக்கெல்லாம் ஒண்ணும் தெம்பே வேண்டியதில்லைடி. இறக்கம்தானே? சும்மா காலை



அசைச்சோம்னா போதும். அதுவே இழுத்துட்டுப் போயிடும்" என்றாள் ரேகா.

"ஆமா, அது என்னவோ நிஜம்!" என்றாள் சம்யுக்தா.

"ஏங்க காபி, டீ ஏதாவது குடிக்கறீங்களா?" என்றான். அங்கே இருந்த ஹோட்டலிலே அவர்களுக்கு டீ வாங்கிக் கொடுத்தான் சந்திரகாந்தன்.

அதையும் வாங்கிக் கொண்டு போய் அமர்ந்து ஒருபக்கம் ருசித்துக் குடித்தார்கள்.

ஒரு பத்து நிமிடம் அமர்ந்து விட்டு 'கிளம்பலாமா?' என்றான் அவன். எல்லோரும் கிளம்பினார்கள்.

இறங்குமுகம் என்பதாலோ என்னவோ எல்லாரும் சரசரவென்று இறங்கினார்கள். சம்யுக்தா மட்டும் சற்று மெதுவாகவே இறங்கினாள்.

கொஞ்சம் முன்னாலே போன சந்திரகாந்தன் திரும்பி வந்து 'ஏங்க?' என்றான்.

"இல்லைங்க. இந்த வியூ எவ்வளவு நல்லா இருக்கு. அதான் ஜாக்கிங் மேல ஏறி வந்துட்டோமில்லே. இப்ப நான் ரசிச்சுட்டு மெதுவாத்தான் இறங்கப் போறேன்" என்றாள்.

"சரிங்க. ஒண்ணும் ப்ராப்ளம் இல்லை. நான் வேண்ணா கூட வரட்டுமா?" என்றான்.

"இல்லையில்லை. நீங்க கொஞ்சம் முன்னாலே போயிட்டிருங்க. ஏதாவது வேண்ணா நான் கூப்பிடறேன்" என்றாள் அவள்.

கொஞ்ச தூரம் வந்திருப்பாள். அந்தக் காட்சியைக் கண்டவுடன் உறைந்து போய் நின்றாள். ஏனென்றால் அவளுக்கு சற்று முன்பாக ஒரு பாம்பு படுத்துக் கிடந்தது.

பயந்து போனவளாக பின்னாலே திரும்பி ஒரு எட்டடி ஓடி விட்டாள். சத்தத்தைக் காணவில்லையே என்று திரும்பிப் பார்த்த சந்திரகாந்தன். அவளுடைய வெளிறிய முகத்தைப் பார்த்து அங்கிருந்தே 'என்ன?' என்றான்.

இவள் வலது கையை உயர்த்தி நாகம் போல செய்கை காட்டி 'பாம்பு! பாம்பு!'' என்றாள்.

அவன் சட்டென எழுந்து மேலே வந்தான்.

'வராதீங்க! வராதீங்க!' என்று இவள் கத்தினாள். அவன் வாயில் விரலை வைத்துக் காட்டி விட்டு 'பயப்படாதீங்க!' என்று சொல்லி இந்த மலையின் தெருப் பக்கத்திலே ஒரு ஒற்றையடிப் பாதை மாதிரி ஒரு பாதை கண்டு பிடித்தான். சட்டென்று அதன் வழியாக ஏறி அவள் அருகிலே வந்து நின்றான்.

'வெயிட் பண்ணலாங்க. போயிடும்' என்றான். அதற்குள் அவள் பயந்துவிட்டாள்.

சட்டென்று அவன் மார்பிலே சாய்ந்து கொண்டாள். 'பயந்தே போனேன்' என்றாள். அவன் ஒன்றும் பேச வில்லை. மெதுவாக அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தான். 'போயிடும்! போயிடும்! பயப்படாதீங்க!' என்றான்.

ஐந்து நிமிடம் அவர்கள் காத்திருந்தார்கள். அதற்குப் பிறகுதான் பாம்பு மெதுவாக தலையைத் திருப்பி இந்தப் பக்கம் அந்தப் பக்கம் பார்த்து விட்டு நகர்ந்து புதருக்குள்ளே போனது. மறுபடியும் கூட நகருவதற்கு யோசித்தாள் சம்யுக்தா. 'போகும் போது குறுக்கே வந்துட்டா!' என்றாள்.

''ஹலோ! போயாச்சு. வாங்க'' என்றான் சந்திரகாந்தன். அவள் தயங்கவே சட்டென்று அவன் எதிர்பாராத விதமாக



அவளை உப்பு மூட்டை தூக்குவது போல தோளில் தூக்கிக் கொண்டான். 'அந்தப் பாறை கடந்தவுடனே இறக்கி விடறேன்' என்று தடதடவென்று இறங்கி வந்தான்.

கிட்டத்தட்ட நூறடி வந்ததுக்குப் பிறகுதான் அவளை இறக்கி விட்டான். பயத்திலும் அதிர்ச்சியிலும் அவள் என்ன நடக்கிறது என்றே கவனிக்கவில்லை.

முன்னாலே போனவர்கள் இவர்களைக் காண வில்லையே என்று நின்று பார்த்தவர்கள் அத்தனை பேரும் இவன் மூட்டை தூக்குவது போல அவளைத் தூக்கிக் கொண்டு வந்து இறக்குவதைப் பார்த்து வாயைப் பிளந்து கொண்டு நின்றார்கள்.

சந்திரகாந்தன் தன்னுடைய சட்டையை இழுத்து விட்டுக் கொண்டு நகர சம்யுக்தா சிவந்த முகத்துடன் பார்த்து லேசாக திகைத்துப்போனாள்.

'சம்யுக்தா!' என்றான் குழைந்து போன குரலில். அவள் ஒன்றும் பேச வில்லை.

வேகமாக நகர்ந்து விட்டாள். உள்ளுக்குள் எதுவோ அசைவது போல இருந்தது சந்திரகாந்தனுக்கு. விசிலடித்துக் குதிக்க வேண்டும் போல இருந்தது.

அவள் போன திசையை ஒரு விதமான சிரிப்புடன் பார்த்துக் கொண்டு நின்றான்.

## அத்தியாயம் - 5

குறுகுறு வென்று பார்த்துக் கொண்டிருந்தான் சந்திர காந்தன். சென்ற வாரம் மருதமலை போய் விட்டு வந்த வர்கள் அதற்குப் பிறகு இன்றைக்குத்தான் சந்தித்தார்கள்.

அவள் விடுமுறையில் ஊருக்கு வந்திருந்தாலும் தினமும் அந்த கிரவுண்டுக்கு வந்து கொண்டிருந்தாலும். அவர்களைக் காணவில்லை.

''சந்திரகாந்தனை எங்கேடி காணோம்?'' என்று கேட்டுக் கொண்டிருந்தாள் மாலினி.

''என்னை? ஏண்டி வறுத்தெடுக்கிறே? அவங்களுக்கு என்ன வேலையோ?'' என்று சொல்லி விட்டாள் சம்யுக்தா.

ஆனாலும், சம்யுக்தாவிற்கு உள்ளூர ஒரு வருத்தம் தான். 'ஏன் வரலை?' என்று எண்ணிக் கொண்டாள்.

அவள் ஒரிரு முறை வாய் விட்டுக் கேட்ட போது மாலினி அவளைக் கேலி செய்தாள். அதனால் இப்பொழுது அடக்கியே வாசித்துக் கொண்டிருந்தாள்.

ஒரு வாரம் கழித்து இன்றைக்குத்தான் அந்தக் குழு வந்திருந்தது. அவளைக் கண்டவுடனேயே மாலினி இங்கிருந்து உற்சாகமாகக் கையாட்டினாள். சந்திரகாந்தனும் அருணாசலமும் அவர்களை நோக்கி வந்தார்கள்.

''ஹலோ என்ன ஆச்சு? ஒரு வாரமா ஆளைக் காணோம்'' என்று கேட்டாள் மாலினி.

சம்யுக்தா அமைதியாக தலையசைத்து விட்டு நின்று கொண்டாள்.

''இல்லைங்க. முக்கியமான ஒரு வேலையா நான் வெளியூரு போயிட்டேன். இந்தப் பயலுகளும் வரலையா?'' என்று அவர்களைத் திரும்பிப் பார்த்தான்.

''ஆமாடா! டீம்ல ஒரு ஆள் குறைஞ்சது. சரி எனக்கும் வேற வேலை இருக்குன்னு நான் வரலைன்னேன். அதனால இவனுங்க ரெண்டு பேரும் வரலை'' என்றான் முருகவேல்.



''அப்படியா! பார்த்தீங்களா நம்ம பசங்க எனக்காக எவ்வளவு தியாகம் பண்றாங்கன்னு?! நான் இல்லைன்னா அவங்களுக்கு இங்க வரவே பிடிக்கலையாம்!'' என்றான் சந்திரகாந்தன்.

'நினைப்புத்தான்' என்று பழித்துக் காட்டினான் கோவிந்த்.

''அப்புறம்?'' என்று திரும்பி சம்யுக்தாவைப் பார்த்தான்.

''அப்புறம்னா என்ன? நீங்க போய் விளையாடுங்க. நாங்க போய் ரவுண்டு அடிக்கிறோம்'' என்றாள் மாலினி.

சந்திரகாந்தன் சம்யுக்தாவைப் பார்த்து புன்னகைத்து விட்டு ''என்ன மேடம்? ரொம்ப அமைதியாக இருக்கீங்க?'' என்றான்.

''அதான் எனக்கும் சேர்த்து இவளே பேசறாளே'' என்றாள் சம்யுக்தா.

மாலினி அவளை வியப்பாக பார்த்தாள். ''சார் எப்பவும் எனக்கும் சேர்த்தி இவ பேசிடுவா. ஃபார் எ சேஞ்ச் இன்னிக்கு அவளுக்கும் சேர்த்து நான் பேசறேன் என்று வச்சுக்கங்களேன்'' என்றவள் வாட்சை பார்த்து ''டைம் ஆகுது. வீட்ல தேடுவாங்க நாங்க சீக்கிரம் ரவுண்ட் பண்ணிட்டு போகணும்!'' என்று கிளம்பினாள்.

சம்யுக்தாவும் அவர்களைப் பார்த்து பொதுவாக தலை அசைத்து விட்டு ஓட ஆரம்பித்தாள்.

முருகவேல் சந்திரகாந்தனின் விலாவில் இடித்தான். ''என்னடா, மேடம் உன்னைப் பார்த்து வெட்கப் படற மாதிரி இருக்கு!'' என்றான்.

சந்திரகாந்தன் தோளைக் குலுக்கி விட்டு "என்னைக் கேட்டா?" என்றான்.

"அப்ப அவங்களையே கேட்டுடுவோமா?" என்றான் முருகவேல்.

"டேய் பேசாம இருங்கடா. ஒரு நாள் என்னமோ அந்தப் பொண்ணு பாம்பைப் பார்த்து பயந்துடுச்சு. அதுக்கு நான் ஹெல்ப் பண்ணினேன். உடனே இது என்ன சினிமாவா. நான் என்ன எம்.ஜி.ஆரா? அந்த அம்மா என்ன சரோஜா தேவியா? ஒஹோய்ன்னு பாடறதுக்கு?" என்றான்.

"சேச்சே இவன் பழைய காலத்து ஆளுடா. லேட்டஸ்டா ஏதாவது சொல்லுடா" என்றான்.

"சரி இப்ப எனக்கு டைம் ஆகுது. வர்றீங்களா இல்லையா?" என்று அவன் பேச்சை மாற்றிவிட்டு பேட் மிட்டன் மட்டையை எடுத்துக் கொண்டு கிளம்பினான். இன்றைக்கு அவர்கள் பேட் மிட்டன் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

இரண்டாவது ரவுண்டு முடித்து விட்டு வந்த சம்யுக்தாவும் மாலினியும் ஒரு நிமிடம் அந்த சின்ன ஸ்டேடியத்தின் அருகிலே நின்றார்கள். மூச்சு வாங்கிக் கொண்டு நின்றார்கள்.

அப்போதுதான் அவர்கள் மறுபடியும் அவர்களை நோக்கி வந்தார்கள். மாலினி அருணாச்சலத்திடம் ஏதோ பேசிக் கொண்டே நகர்ந்தாள். முருகவேலும் கோவிந்தும் சற்று தொலைவிலே நின்று கொண்டார்கள்.

சந்திரகாந்தன் குறுகுறுவென்று அவளைப் பார்த்தபடி சிரித்துக் கொண்டு சம்யுக்தாவின் அருகிலே வந்தான்.



"என்ன மேடம், ரொம்ப சைலண்ட் ஆயிட்டீங்க." என்றான்.

"ஹலோ என்ன? உங்களைப் பார்த்து ரொம்ப வெட்கப் படறோம்னு நினைச்சுட்டீங்களா?. ஏதோ போன வாரம் ஏதோ பாம்பை பார்த்து பயந்தோம் அப்படிங்கறதுனால கொஞ்ச நேரம் தோள்ல தூக்கிட்டீங்கன்னா உடனே ரொமான்டிக் மூட் வந்துடுமா?" என்றாள் கோபமாக.

இதை எதிர்பாராத சந்திரகாந்தன் ஒரு நிமிடம் விழித்தான். பிறகு கடகடவென்று சிரித்தான். "ஹலோ நான் அப்படி ஏதாவது சொன்னேனா? அப்படியெல்லாம் ஒண்ணும் சொல்லலையே? நீங்களா எதுக்கு கற்பனை பண்ணிக்கறீங்க?" என்றான்.

"தெரியாதாக்கும். இப்படித்தான் முதல்ல குறுகுறுன்னு பார்ப்பீங்க. குறும்பா சிரிப்பீங்க, அப்புறம் மெதுவாக ஐ லவ் யூ சொல்வீங்க!" என்றாள் சம்யுக்தா.

சந்திரகாந்தன் உண்மையிலே கோபமானான். "மேடம்! என்ன நினைச்சுட்டீங்க? நாங்க என்ன எல்லார் பின்னாடியும் அலையறவங்கன்னு நினைச்சுட்டீங்களா? ஏதோ டீசன்டா பழகறீங்களேன்னுட்டு பழகினோம் அவ்வளவுதான். தேர் இஸ் நத்திங் மோர். தெரிஞ்சுகோங்க உலகத்துல கடைசிப் பொண்ணு நீங்களா இருந்தாலும் உங்ககிட்ட வந்து ஐ லவ் யூ சொல்ல மாட்டேன்.நீங்களா சொல்றவரைக்கும்" என்று சொல்லிவிட்டு நகர்ந்து விட்டான்.

சம்யுக்தா திகைத்து விட்டாள். தேவையில்லாமல் அவனைக் கோபப்படுத்தி விட்டோமோ என்று எண்ணிக் கொண்டாள். ஆனால் அது சட்டென்று அவனுக்கு

உறைத்தது. அத்தனை கோபத்திலும் 'நாங்களா வந்து சொல்ல மாட்டோம் என்று சொன்னவன். நீங்களாக சொல்ற வரைக்கும்' என்று கடைசியில் ஒரு வாய்ப்பையும் வைத்து விட்டுப் போயிருக்கிறான் என்றவுடன் அவளுக்கு சிரிப்பு வந்தது. விவரம் தான் என்று எண்ணிக் கொண்டாள்.

ஆனால், அடுத்த ரவுண்டு ஓடும்போது உறுத்தலாக இருந்தது. அவன் நல்ல குடும்பத்திலே இருந்து வந்திருக்கிற பையன். தங்களிடம் நாகரீகமாகத்தான் பழகினான். அப்படி இருக்கையில் தனக்குத்தான் உறுத்தலாக இருந்திருக்கிறது. அவன் தன்னைத் தோளிலே தூக்கிக் கொண்டு போனதை நினைத்து வெட்கமாக இருந்திருக்கிறது. அதை வேறு விதமாக வெளிப்படுத்தி விட்டோம் என்பதை புரிந்துகொண்டாள்.

இப்போது என்ன செய்வது என்று அவளுக்குப் புரிய வில்லை. ஒரு ரவுண்டு முடித்துவிட்டு மறுபடியும் அவர்கள் விளையாடுகிற இடத்துக்கு நேர் எதிரிலே நின்றார்கள். மாலினி அவர்களைப் பார்த்து கையசைத்தாள் அவர்கள் ஆடுவதை நிறுத்திவிட்டு வந்தார்கள்.

வந்தார்கள் என்றால் மூன்று பேர் மட்டும்தான் வந்தார்கள். சந்திர காந்தன் வரவில்லை. அவன் அந்தக் கோர்ட்டிலேயே இடுப்பின் மேல் கையை வைத்துக் கொண்டு நின்று விட்டான். சம்யுக்தாவிற்கு சற்றே ஏமாற்றமாகப் போய்விட்டது.

அவள் ஒரு காரியம் செய்தாள். இவர்கள் மூன்று பேரும் மாலினியிடம் பேசிக் கொண்டிருக்கையில் சரசரவென்று



இறங்கி அவனிடத்திலே போனாள். ''ஐ ஆம் சாரி!'' என்றாள்

''பரவாயில்லை பரவாயில்லை!'' என்றான் அவன்

ஆனாலும், முகம் கடுகடுவென்று இருந்தது. ''இல்லை, பொதுவா பசங்க!'' என்று அவள் ஆரம்பிக்க அவன் இடக்கையை உயர்த்தினான். ''போதும் மேடம். நீங்க எங்களைப் பத்தி என்ன நினைக்கிறீங்கன்னு காட்டிட்டீங்க. எதுக்கு வம்பு. நீங்க அங்க இருந்து கையை அசைச்சிங்க. நாங்க இங்கிருந்து கையசுச்சுட்டு போயிட்டே இருக்கிறோம். அதுவும் பிடிக்கலையா விட்டுடுங்க'' என்றான்.

அவளுக்கும் ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது. ''ஒகே! நான் ஏதோ சமாதானத்துக்கு வந்தேன். அதுக்கும் கூட உங்களுக்குப் பிடிக்கலைன்னா ஒகே பை'' என்று நகர்ந்தாள். அப்படி நகரும் போதே அவளுக்குள்ளே ஏதோ கழன்றாற் போலத் தோன்றியது. அவனுக்கும் கூட அப்படித் தோன்றியதோ என்னவோ? ஆனால் இரண்டு பேருமே தங்களுக்குள் என்ன நடந்தது என்பதைத் தங்கள் தோழர்களுக்குள் சொல்லிக் கொள்ள வில்லை. அதனால் மாலினிக்கும் அது தெரிந்திருக்க வில்லை.

அடுத்த நாள் சம்யுக்தா. ''நான் வரலைடி ஜாக்கிங்குக்கு'' என்றாள்.

''ஓங்கி ஒண்ணு விட்டேன்னா? இப்பதான் பத்து நாள் ஜாகிங்கெல்லாம் பண்ணி அம்மணி பளிச்சின்னு இருக்கீங்க. வாடி!'' என்று இழுத்துக் கொண்டு வந்தாள்.

அடுத்து இரண்டு மூன்று நாட்களும் சந்திரகாந்தன் வரவில்லை. அவளுக்கு மிகவும் ஏமாற்றமாகப் போய்

விட்டது. எப்படி மற்றவர்களிடம் கேட்பது என்று தெரியவில்லை. மற்ற மூன்று பேருமாக வேறு ஏதோ புதிய இளைஞனுமாக வந்தார்கள்.

மாலினி அந்த இளைஞனிடமும் பேசினாள். ஸ்ரீராமும் நன்றாகத்தான் பேசினான். சம்யுக்தாவிற்கு ஏன் சந்திரகாந்தன் வரவில்லை என்று எப்படிக் கேட்பது என்று தெரியவில்லை. அவள் மனதை அறிந்தவள் போலவோ என்னவோ "ஏன் முருகவேல் சார், சந்திரகாந்தன் சார் வரலையா?" என்று கேட்டாள் மாலினி.

முருகவேல் "இல்லை மேடம். அவனுக்கு ஒரு ரெண்டு மூணு நாளா உடம்பு சரியில்லை" என்றான்.

சம்யுக்தா இதை எதிர் பார்க்கவில்லை "ஓ! என்னாச்சு?" என்றாள்.

"ஃவைரல் பீவர் வந்துடுச்சு!" என்றான்.

"அப்படியா, என்ன காய்ச்சல்," என்று கேட்டாள் சம்யுக்தா.

"இல்லை மேடம். சாதாரண வைரல் பீவர்தான்!" என்றான் முருகவேல்.

"பயப்படறதுக்கு ஒண்ணும் இல்லையே. எல்லா செக்அப்பும் பண்ணீட்டீங்களா இல்லை அந்தக் காய்ச்சல் இந்தக் காய்ச்சல்னுட்டு ஒரே கலவரமா இருக்கு!" என்றாள்.

"இல்லை. எல்லாம் பார்த்தாச்சு. எல்லா ப்ளெட் டெஸ்ட்டும் பண்ணியாச்சு. சும்மா வைரல் ஃபீவர்தான். ஒரு த்ரீ ஃபோர் டேஸ் ரெஸ்ட் எடுத்தா போதும் அப்படின்னாங்க. அப்பகூட அவன் எங்க கேட்கறான். ஆபீஸ் டு அவர்ஸ் போயிட்டுத்தான் இருக்கான்" என்றான் முருகவேல்.



"அப்படியா?" என்றாள் சம்யுக்தா மேற்கொண்டு என்ன சொல்வது என்று தெரியாமல்.

மாலினிதான் சட்டென்று கேட்டாள் "அப்படின்னா நாங்க அவரைப் பார்க்க வரலாமா?" என்று.

"ஒய் நாட்?" என்றான் முருகவேல்.

"சரி அட்ரஸ் கொடுங்களேன்." என்று கேட்டாள் மாலினி.

விலாசத்தை வாங்கிக் கொண்டார்கள்.

மாலினி "நாங்கல்லாம் போய்ப் பார்த்தா அவங்க அம்மா அப்பா எதுவும் நினைச்சுக்க மாட்டாங்களா?" என்று கேட்டாள். "அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லை. அவன் காலேஜ் மேட்ஸ்லே நிறைய பேர் கேர்ள்ஸ் வருவாங்க. அவன் ஆபீஸ் லேடீஸ் வருவாங்க. ரிலேட்டிவ்ஸ்ல ரெண்டு மூணு பேரு கேர்ள்ஸ் நெருக்கமா இருக்காங்க" என்றான் முருகவேல்.

"சரி, முடிஞ்சா நாங்க இன்னைக்கு ஈவ்னிங் வந்து பார்க்கறோம்னு சொல்லுங்க!" என்றாள் மாலினி.

அவர்கள் கையை ஆட்டி விட்டுப் போய்ச் சேர்ந்தார்கள்.

சம்யுக்தா மாலினியை முறைத்தாள். "உன்னை யாருடி என்னை கேட்காமல் இதைச் சொல்லச் சொன்னா?" என்று.

"உனக்காகத் தான்டி சொன்னேன். பாவம் மனுஷன் உன்னைத் தோள்ல தூக்கினதுல பயந்து போய்த்தான் காய்ச்சலே வந்திருக்கு!" என்று சிரித்தாள் மாலினி.

"பேசவடி பேசுவே!" என்று முறைத்தாள் சம்யுக்தா.

"இங்கே பாரு உன்னை தூக்கின அதிர்ச்சியிலே அந்த மனுஷனுக்கு காய்ச்சல் வந்திருக்கு. அட்லீஸ்ட் போய் ஒரு ஆறுதலாவது சொல்ல வேண்டாமா?" என்றாள் மாலினி.

"உதை வாங்கப் போறே!" என்று அதட்டினாலும் சம்யுக்தாவும் மாலினியும் அவனது வீட்டுக்குச் சென்றார்கள்.

சந்திரகாந்தனுடைய தாயும் தந்தையும் ஒரு சகோதரியும் என்று அவர்கள் குடும்பம் அழகான குடும்பமாக இருந்தது. மிகச் சிறிய அளவிலே ஒரு கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி நடத்திக் கொண்டிருந்தார்கள்.

சம்யுக்தா தன்னுடைய தந்தை அரசுத் துறையிலே இருக்கிறார் என்று அறிமுகப்படுத்திக் கொண்டாள். மாலினி தன்னுடைய தந்தை வழக்கறிஞராக இருக்கிறார் என்று அறிமுகப்படுத்திக் கொண்டாள். இரண்டு பேருக்கும் அந்த வீட்டிலே நல்ல வரவேற்பு கிடைத்தது.

சம்யுக்தாவையும் மாலினியையும் அவன் இருந்த அறைக்கு அழைத்துப் போனார்கள். அவன் அப்பொழுது தான் உறங்கி எழுந்து அமர்ந்து கொண்டிருந்தான். இவர்களை எதிர்பார்க்க வில்லை.

"ஹலோ நீங்க எங்கே இங்கே?" என்றான் ஆச்சரியமாக.

"இல்லை பாம்புகிட்டே இருந்து காப்பாத்தறேன்னு இவளைத் தூக்கி பயமாப் போச்சாம். காய்ச்சல் வந்துடுச்சாம். உங்க ஃப்ரெண்ட்ஸ் சொன்னாங்க" என்றாள் மாலினி.

சம்யுக்தா முறைத்தாள்.

சந்திரகாந்தன் கலகலவென்று சிரித்தான். "இல்லைங்க. அது திங்கட்கிழமை, ஞாயிற்றுக்கிழமைன்னு கொஞ்சம்



வெளில அலைஞ்சேன் கூட்டத்துக்குள்ளே இருந்தேன். எங்கோ இருந்து வைரல் ஃபீவர் ஒட்டிக்கிடுச்சு" என்றான் சந்திரகாந்தன்.

அதற்குள் மாலினி அவனுடைய பெற்றோரிடம் பேசுவது போல் வெளியே நகர்ந்தாள். சந்திரகாந்தன் அவளை ஆவலாகப் பார்த்தான். "தாங்க் யூ. வந்ததுக்கு ரொம்பத் தாங்க்ஸ்" என்றான்.

அவள் என்ன சொல்வது என்று தெரியாமல் விழித்தாள்.

"இல்லை. நான் தேவையில்லாமல் உங்ககிட்ட கோபப் பட்டுட்டேன்னு எனக்கு ஒரு வருத்தம்!" என்றாள்.

"அதனால் காய்ச்சல் வந்துடுச்சோன்னு பயந்துட்டீங்களோ?" என்றான் சந்திரகாந்தன்.

அவள் அதற்கும் என்ன சொல்வது என்று விழிக்க...

"நோயும் நீயே! மருந்தும் நீயே!" என்று ஒரு பழமொழி கேள்விப்பட்டிருக்கீங்களா?' என்றான்.

அவள் அவனை புரியாதவள் போல் பார்க்க "ஒரு தலைவனுக்கு தலைவி அவளே நோயாக இருந்தாளாம் அப்புறம் அவதான் மருந்தாம்!" என்றான்.

அவள் புரிந்தும் புரியாதவளைப் போல அவனைப் பார்த்தாள்.

"ஜஸ்ட் இது ஒரு பாட்டுங்க. உங்களால எனக்கு காய்ச்சல் வந்துச்சுன்னெல்லாம் நான் சொல்லலை" என்று அவன் சொல்ல.

அவள் "இப்பத்தான் யோசிக்கிறேன்!" என்றாள் கவலையாக.

"ஏன்?" என்றான் அவன்.

"வந்தது தப்பாப் போச்சோ, காய்ச்சல்லே உளர்றீங்களோ?" என்றாள்.

அவன் கலகலவென்று சிரித்தான்.

அவனுடைய சிரிப்பை அவள் ஆர்வமாக பார்த்துக் கொண்டு நின்றாள்.

## அத்தியாயம் - 6

பீச் காற்று சுகமாக வந்து உடலைத் தழுவியது. சம்யுக்தா அதனை ரசித்தபடி கடல் ஓரமாக மெல்ல நடந்து கொண்டிருந்தாள். உடன் மாலினியும் இன்னும் இரண்டு தோழிகளும் நடந்து கொண்டிருந்தார்கள்.

"ச்சே, இந்த வாரம் ஊருக்குப் போக முடியாம போச்சுடி!" என்றாள் மாலினி. இரண்டு பேருக்குமே அந்த வாரம் ஏதோ ஒரு வேலை இருந்தது.

சம்யுக்தாவிற்கு செமினார் இருந்தது. சம்யுக்தா ஊருக்குப் போகவில்லை என்ற உடனே மாலினியும் 'நானும் போகலைடி. இந்த மாசத்துக்குண்டான ஷாப்பிங் எல்லாம் இந்த வாரம் பண்ணனும். அந்த வேலையே எனக்கு சரியா இருக்கும்' என்று சொல்லி விட்டாள்.

இரண்டு பேரும் காலார நடந்து கொண்டிருந்தார்கள். மாலினி மெல்லத் திரும்பி சம்யுக்தாவிடம் சொன்னாள். "என்னடி, கோயம்புத்தூர் போகலைன்னு அம்மணி மூட் அவுட்டா?" என்றாள்.

"அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லையே!" என்றாள் சம்யுக்தா.



"ம்... இந்தக் கதைதானே வேண்டாங்கறது. போயிருந்தேன்னா உன் ஃப்ரெண்ட பார்த்திருப்பே?!" என்றாள்.

"ஏன்? என் ஃப்ரெண்ட்டை இங்க தான் இருக்கியே?" என்றாள் சம்யுக்தா புரியாதவள் போல.

"நம்பிட்டோம். நம்பிட்டோம். அப்படியே தலை குளிர்ந்து போச்சு" என்றாள் மாலினி.

மற்ற இரண்டு பேரும் சிரித்தார்கள்.

"என்னடி? இன்னைக்கு நான்தான் உங்களுக்கு கிடைச்சேனா?" என்றாள் சம்யுக்தா மெலிதான கோபத்துடன்.

"ஐய்யய்யோ இல்லடி, நீ அங்கே போயிருந்தா நானும் உன் கூட விளையாட வந்திருப்பேன். நம்ம ப்ரெண்ட்ஸ் எல்லாம் பார்த்திருப்போம். இந்த வாரம் அவங்களைப் பார்க்க முடியலையில்லே? அதைத்தான் சொன்னேன்" என்றாள் மாலினி.

"ம்... இது பரவாயில்லை!" என்றாள் சம்யுக்தா.

"எது?" என்றார்கள் மற்ற மூன்று பேரும் கோரஸ்ஸாக.

"நம்ம ஃப்ரெண்ட்ஸ்னு சொன்னியே? தட்ஸ் ஓகே!" என்றாள்.

பேசிக் கொண்டே திரும்பியவள் பார்வை சற்றே சுருங்கி விரிந்தது. இவள் பார்த்த திசையிலே மாலினியும் திரும்பிப் பார்த்தாள்.

"ஏண்டி? அது சந்திரகாந்தன் மாதிரி இல்லை?" என்றாள் மாலினி.

"ஆமாடி எனக்கும் அப்படித்தான் தெரியுது!" என்றாள் சம்யுக்தா. இரண்டு பேரும் தயங்கி நின்றார்கள். "ம், இனி

வாக்கிங் போன மாதிரிதான்!'' என்று சொன்ன மற்ற இரண்டு தோழிகளும் ''சரிம்மா, நீங்க பேசிட்டு வாங்க. நாங்க அப்படியே கடைசி வரைக்கும் போயிட்டு வரோம்'' என்று சொல்லி விட்டுப் போனார்கள்.

''ஏய், கூட்டத்துல மாட்டிக்காதிங்கடி'' என்றாள் சம்யுக்தா.

''இல்லை, நம்ம வழக்கமான இடத்துக்கு வந்துடறோம்'' என்று சொல்லிவிட்டு நகர்ந்தார்கள் அந்தப் பெண்கள்

சந்திரகாந்தன் மெரினா பீச்சினுடைய அந்த கைப் பிடிச் சுவரின் ஒரு பக்கமாக அமர்ந்து கொண்டிருந்தான். பார்வை இவர்கள் திசையில் தான் இருந்தது.

மாலினி ''ஏய் யாருக்காக காத்திருக்காருன்னு தெரியலையே? ஆமாடி கோயம்புத்தூர்ல இருந்து வந்து நமக்காகத்தான் காத்திருக்கப் போறாரு'' என்றாள் சம்யுக்தா.

'இருந்தாலும் இருக்கும்' என்ற மாலினி கையை உயர்த்தி ஆட்டினாள்.

சந்திரகாந்தனின் முகமும் மலர அவனும் கையை ஆட்டினான். இவர்களை நோக்கி வந்தான். ''ஹலோ! என்ன பீச்ல வாக்கிங்கா? என்றான்.

''ஆமாம் சார், இன்னிக்குக் கோயமுத்தூருக்கு வரமுடியாமப் போச்சு'' என்றாள் மாலினி.

''ஆமா, ஆமா, தெரியும், தெரியும்.'' என்றான் அவன்.

''அதெப்படித் தெரியும்?'' என்றாள் சம்யுக்தா சந்தேகப் பார்வையுடன்.



''இல்லையில்லை, இன்னைக்கு நான் சென்னைக்குக் கிளம்பினேன். உங்க வீட்ல கேட்டேன். இன்னிக்கு நீங்க வரலைன்னு சொன்னாங்க'' என்றான் அவன் லேசாக சொல்வது போல.

மாலினி குறுகுறுவென்று அவனைப் பார்த்தாள்.

''ஆமாங்க மேடம், நான் ஒரு வேலையா சென்னைக்கு வந்தேன்'' என்றான்.

''என்ன உங்க கன்ஸ்ட்ரக்ஷன் சமாச்சாரமாவா, ஏதாவது அப்ரூவலுக்காக வந்திங்களா?'' என்றாள் மாலினி.

உடனே அதுதான் சரியான பாய்ண்ட் என்பது போல அவசர அவசரமாகத் தலையாட்டினான் சந்திரகாந்தன்.

மாலினி 'களுக்'கென்று சிரித்தாள்.

''ஏங்க,'' என்றான்.

''ஹலோ! இன்னிக்கு சாட்டர்டே. ஆஃபீஸ் லீவு'' என்றாள்.

அவன் உடனே திரும்பி ''உங்களுக்குத்தான் விஷயம் புரியலை. நாங்க போற ஆபீஸ்லயெல்லாம் சாட்டர்டே சண்டேவெல்லாம் கிடையாது. எப்ப வேண்ணாலும் இருப்பாங்க'' என்றான்.

''ஓ, அப்படியா?'' என்று சமாளித்தாள் மாலினி.

சம்யுக்தா ஏனோ அதிகமாக வாயைத் திறக்க வில்லை. அவன் தன்னைப் பார்ப்பதற்குத்தான் வந்திருக்கிறான் என்பது அவளுக்குப் புரிந்தது.

''போனவாரம் கூட வரலை போல இருக்கே,'' என்றான் சந்திரகாந்தன்.

"ஆமா, போன வாரமும் வரலை. அடுத்த வாரம் தான் ரெண்டு மூணு நாள் பண்டிகை லீவு வருது. வந்தா ஒரு ஃபைவ் டேஸ் இருந்துட்டு வரலாம்னு ப்ளான் பண்ணியிருக்கோம்" என்றாள் மாலினி.

"ஓஹோ!" என்றவன் திரும்பி "இங்க எங்காவது உட்காரலாமா?" என்றான்.

"ஓ எஸ், தாராளமா உட்காரலாம்!" என்றார்கள்.

அவன் போய் அமர்ந்தான்.

அவர்கள் இரண்டு பேரும் சற்று இடைவெளி விட்டு அமர்ந்தார்கள். அதற்குள்ளாக எழுந்த மாலினி "இருங்க, சுண்டல் வாங்கிட்டு வரேன்!" என்றாள்.

அவர்கள் ஒன்றும் பதில் சொல்வதற்கு முன்பாகவே நாலு எட்டு நகர்ந்தவள் திரும்பவும் வந்து "ஐஸ் கிரீமும் வாங்கிட்டு வரட்டுமா?" என்றாள். அவர்கள் அதற்குப் பதில் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை. வேகமாக விலகிப் போனாள்.

அவன் பார்வை அவள் மேல் தாபத்துடன் மோதியது. "ஏன் போன வாரம் வரலை?" என்றான்.

"அதான் சொல்றேனே? வேலை இருந்துச்சு" என்றாள் சம்யுக்தா.

அவர்கள் பழக ஆரம்பித்து கிட்டத்தட்ட ஓராண்டு நிறைவுறுகிற நிலையிலே இருந்தது. எப்படியும் வாரத்துக்கு ஒரு முறையாவது சந்தித்துக் கொண்டார்கள். இது வரையும் பொதுப்படையான சந்திப்பாகத்தான் அது இருந்தது.



ஒவ்வொரு முறையும் சந்திரகாந்தன் ஏதோ சொல்வதற்கு வருவதாகவும் சொல்லாமல் போவதாகவும் அவளுக்கு தோன்றியது. அப்படியே சந்திரகாந்தனுக்கும் தோன்றியது.

"நிஜமாவே வேலை இருக்குன்னு வந்தீங்களா," என்றாள் சம்யுக்தா.

"ஆமா, உன்னைப் பார்க்கறதுகூட ஒரு வேலைதானே," என்றான் சந்திரகாந்தன்.

"ஓஹோ?! என்னைப் பார்க்கறது வேலையா?" என்றாள் அவள்.

"அதுக்கும் மேலன்னு வச்சுக்கோ!" என்றான்.

இந்தக் கண்ணாமூச்சி அவளுக்கு சுவாரசியமாக இருந்தது. "இதுக்காக டிரெயின் பிடிச்சு சென்னைக்கு வரலைன்னா என்ன?" என்றாள்.

"வாரா வாரம் டிரெயின் பிடிச்சு கோயம்புத்தூருக்கு வர்றீங்கள்லே, அதனால இந்த வாரம் நான் டிரெயின் பிடிச்சு வந்தேன்னு வச்சுக்கோங்க"

"அதெப்படி காலையில வரலைன்னு தெரிஞ்ச உடனே இப்படி வந்து நிக்கறீங்க?" என்றாள்.

"அவசரமா ஒரு ஆளைப் பிடிச்சு ஃப்ளைட் புக் பண்ணி வந்தேன்!" என்றான்.

சம்யுக்தா நிஜமாவே அதிர்ந்து போனாள். "ப்ளைட்லையா," என்றாள்.

அவன் புன்னகைத்தான் "ஆமா, கம்பெனி சார்பா ஒரு வேலை இருந்துச்சு. அதை இதையும் க்ளப் பண்ணிட்டு வந்தேன்" என்றான்.

'ஓ!' என்றாள் அவள் சற்று சுவாரசியம் இழந்தவள் போல.

"ஹலோ! அப்படியெல்லாம் ராகம் போடாதீங்க. இங்க வர்றதுக்காக ஒரு வேலையை தேடிக் கண்டுபிடிக்கறது எவ்வளவு கஷ்டமா இருந்துச்சு தெரியுமா?" என்றான்.

அவள் சிரித்து விட்டாள். "அப்படி எதுக்கு என்னைப் பார்க்கணுமாம்?" என்றாள்.

"இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்லிடட்டுமா," என்றான் அவன். அப்படிக் கேட்கும் பொழுதே அவன் குரல் மாறியது. அந்தக் குரலில் வேறு ஏதோ ஒன்றும் கலந்தாற்போல இருந்தது.

"சொல்லிடுங்களேன்!" என்றாள அவள்.

அவன் மெல்ல சிரித்துக் கொண்டே சொன்னான். "பார்க்காம இருக்க முடியலைன்னு வச்சுக்கலாம்!" என்று.

"ஓஹோ!" என்றாள் அவள்.

"என்ன, குத்தகைக்கு எடுத்துருக்கீங்களா," என்றான் அவன் லேசான கோபத்துடன்.

அவள் திகைத்துப் போய் 'எதை?' என்றாள் அவள்.

"இந்த ஓஹோங்கற வார்த்தையைத்தான்!" என்றான் அவன்.

அவள் மறுபடியும் சிரித்தாள். "இல்லை என்ன சொல்றதுன்னு எனக்கு தெரியலை!" என்றாள் கைகளால் மணலை அளைந்து கெ.:ண்டு.

அவன் சுற்றும் முற்றும் பார்த்தான். காதல் நாடகம் நிறைய அங்கே அரங்கேறிக் கொண்டிருந்தது. "இங்கதான்



விதவிதமா சொல்லிக்கறாங்களே? அதுமாதிரி சொல்ல வேண்டியதுதான்!" என்றான்.

அவள் அவனை முறைத்தாள். "என்ன பேச்சு வேற விதமாக போகுது?" என்றாள்.

"அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லை. ஒரு கண்ணாமூச்சி நடந்துகிட்டிருக்கு இதை என்னத்துக்கு இலாஸ்டிக் மாதிரி போட்டு இழுத்துக்கிட்டுன்னுட்டுதான் நேரா வந்துட்டேன். எனக்கும் உன்னைப் பார்க்காம இருக்க முடியலைன்னு சொல்றதுல எந்த விதமான வெட்கமும் இல்லை. என் மனசுல இருக்கறதை சொல்றேன். இதுல என்ன இருக்கு?" என்றான்.

அவனுடைய நேரடியான இந்தப் பேச்சு அவளை ஒரு நிமிடம் திகைக்கச் செய்தது. அமைதியாக அமர்ந்து விட்டாள்.

"என்ன பதிலைக் காணோம்?" என்றான்.

"இல்லை ஐஸ்கிரீமும் கண்டலும் எப்ப வரப் போகுதுன்னு பார்க்கறேன்" என்றாள்.

அவன் முகத்தில் கடுப்பு ஏறுவதைக் கண்டு அவளுக்கு சிரிப்பு வந்தது.

"தலை போற விஷயம் சொல்லிட்டிருக்கேன்" என்றான்.

"யாருக்குத் தலை போறது," என்றாள் அவள்.

"ஏய், நீ வேணும்னே வம்பு பேசறே," என்றான் அவன்.

"பின்னே நான் உடனே உங்களுக்கு பதில் சொல்லணுமா, நானும்தான் உங்களைப் பார்க்காம கஷ்டப்பட்டிருக்கேன்னு சொல்லுவேன்னு எதிர்பார்த்தீங்களா?" என்றான்.

அவளுடைய இந்தப் பதிலைக் கேட்டவுடன் அவனும் சற்று திகைத்துத்தான் போனான்.

''சாரி, நான் ரொம்ப நேரடியாப் பேசிட்டேனோ,'' என்றான்.

''ஆமா! இல்லைன்னு சொன்னா ஏமாந்துதானே போவீங்க?'' என்றாள்.

அவன் அதற்கும் பதில் பேச முடியாமல் திகைத்தான்.

அவள் சற்று நேரம் ஒன்றும் பேச வில்லை. ''உன் ஃப்ரெண்டு இங்கிதமா நமக்கு டைம் கொடுத்திட்டு போயிருக்கா. பதில் சொல்ல மாட்டியா ப்ளீஸ்?''

''நீங்க தான் இப்பத்தானே சொல்லியிருக்கீங்க. நான் பதில் சொல்றதுக்கு கொஞ்சம் டைம் கொடுங்க'' என்றாள்.

அவன் ஒரு பெருமூச்சு விட்டான். ''தெரிஞ்ச பதிலை சொல்றதுக்கு டைம் வேணுமா?'' என்றான்.

லேசாக முகம் வாடி விட்டது.

அவன் முகம் வாடி விட்டதைப் பார்த்தவுடன் அவளுக்கும் கஷ்டமாக இருந்தது.

''இல்லையில்லை. கொஞ்சம் யோசிச்சுச் சொல்றனே,'' என்றாள்.

''உன் இஷ்டம்!'' என்றான்.

அவளுக்குத் தன்னைக் குறித்தே கோபமாக வந்தது. 'மனதுக்குள் இருக்கிற பதிலைச் சொல்லிவிட என்ன பெரிய தயக்கம்? சொல்லிவிட வேண்டியதுதானே என்று எண்ணிக் கொண்டாள்.



ஆனால் உடனே இன்னொரு மனது சொன்னது அப்படியெல்லாம் கேட்டவுடனே சரி என்று சொன்னால் மதிப்பே இருக்காது. கொஞ்ச காலம் எடுத்துக் கொண்டு சொல்லலாம் என்று.

''இதோ பாருங்க சந்திரகாந்தன். ஆஸ் எ ஃப்ரெண்டு உங்களை எனக்கு ரொம்பப் பிடிக்குது. உங்களோட டேஸ்டும் என்னோட டேஸ்டும் ஒத்துப் போகுது. ஆனா, இப்ப உடனே பதில் சொல்ல எனக்குத் தெரியலை'' என்றாள்.

''ஓகே டேக் யுவர் ஓன் டைம்.'' என்றான். அதற்குப் பிறகு எப்படியாவது ஒரு பத்து நாளைக்கு ஒரு முறை அவளைச் சந்திப்பதற்காகவே சென்னையிலே வேலைகளை வைத்துக் கொண்டு வந்து போகத் தொடங்கினான்.

அந்த வருட இறுதியிலே அவளுக்குப் புரிந்து விட்டது. அவன் வராத வாரங்கள் அவளுக்கும் வெறுமையாகத் தோன்றின. இத்தனைக்கும் அவர்கள் கோயம்புத்தூருக்குப் போய் விட்டு வரும்பொழுது அவனைச் சந்திப்பார்கள்.

இடையில் சற்று தாமதம் ஏற்பட்டால் தான் அவன் சென்னைக்கு வருவது. ஏதோ ஒரு முறை தவறிப்போனால் கூட அவள் முகம் வாடிப் போகும்.

மாலினி ஒரு நாள் அவளிடம் கேட்டாள். ''சொல்லித் தொலைக்கிறதுதானேடி!'' என்று ''அவருக்கும் தெரிஞ் சிருக்கும்டி. தெரிஞ்சு போனதுனாலத்தானே வர்றாரு'' என்றாள்.

''சரிடி பாவம்டி ரொம்ப மனுஷன் ஏங்கிப் போய் ஏங்கிப் போய் உன் முகத்தைப் பார்த்திட்டே இருக்காரு.

இருந்த வாரம் சொல்லிடு!'' என்றாள் மாலினி. அந்த வாரம் சம்யுக்தாவும் அவனிடத்திலே சொல்லத்தான் செய்தாள்.

அவனும் அதை மகிழ்வோடு கொண்டாடி தீர்த்தான்.

ஆனால், பின்னாலே என்ன நேரப் போகிறது என்று அவர்கள் இருவருக்குமே தெரிந்திருக்கவில்லை.

## அத்தியாயம் - 7

சந்திரகாந்தன் தன் அன்பைச் சொல்லி இரண்டு மாதங்களுக்குப் பிறகு தான் சம்யுக்தா தன் சம்மதத்தைக் கொடுத்திருந்தாள். ஆறு மாதங்கள் ஓடி விட்டது.

அந்த ஆறு மாதங்களும் இனிமை நிறைந்த கொண்டாட்ட நாட்களாகவே இருந்தன.

கல்லூரி படிப்புக்கு எவ்வளவுக்கெவ்வளவு முக்கியத் துவம் கொடுத்தாளோ அந்த அளவுக்கு தனது ஓய்வு நேரங் களை சந்திரகாந்தனுக்காகவே ஒதுக்கினாள் சம்யுக்தா.

நேரம் கிடைத்தால் அவன் செல்ஃபோன் பேசுவது என்ன? இவள் செல்போன் பேசுவது என்ன? என்று பேசிச் சிரித்து களித்து மகிழ்ந்தார்கள்.

அவள் வரமாட்டாள் என்று தெரிந்தால் இவன் வெள்ளிக்கிழமையே ஏதாவது ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு சென்னைக்குப் போய் விடுவான். அவர்கள் எப்படியும் அடுத்த வாரத்தில் கோவைக்கு வந்து விடுவார்கள்.

அப்படியும் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றால் இருக்கவே இருந்தது. வெப் கேமரா, ஸ்கைப் என்று



அதனால் அருகில் இல்லையே என்ற குறை தெரியாமல்தான் தொடர்பில் இருந்தார்கள்.

அத்தனையும் ஆறே மாதங்களுக்குத்தான். ஆறு மாதங்கள் முடிந்ததற்குப் பிறகு திடீரென்று சந்திர காந்தனிடம் இருந்து ஃபோன் வருவது நின்றது. இவள் தவித்துப் போனாள் என்னவோ ஏதோ என்று.

அந்த வாரம் அவளால் கோயமுத்தூருக்கு வர முடிய வில்லை. சந்திரகாந்தன் வரக்கூடும் என்று ஆவலாக எதிர்பார்த்தாள். அவனும் வரவில்லை.

''ஏண்டி, என்னவா இருக்கும்டி?'' என்று மாலினியைத் துளைத்து எடுத்தாள்.

''என்னைக் கேட்டா? நான் என்னடி பண்ணுவேன்?'' என்றாள் மாலினி.

''இல்லடி, ஃபோன் போட்டா டெட்டா இருக்கு. கேன் நாட் பி ரீச்சுட்ன்னு வருது. பிஸியா இருக்குது. எனக்கு ஒண்ணுமே புரியலைடி. எதுவும் ஆயிருக்காதே?'' என்று பதைபதைத்தாள். ''அப்படியெல்லாம் இருக்காதுடி அப்படி யெல்லாம் ஏதாவது ஆயிருந்தா கண்டிப்பா அம்மா அப்பாவுக்கு நியூஸ் தெரியும். நான் ஒண்ணு பண்றேன். என் பிரதரை விட்டு விசாரிக்கிறேன்'' என்றாள்.

''ச்சே, ச்சே, அப்படியெல்லாம் செய்யக்கூடாது. அப்புறம் நான் இப்படி விசாரிச்சேன்னு தெரிஞ்சா சந்திர காந்தன் ஏதாவது நினைச்சுக்குவாரு'' என்றாள் சம்யுக்தா. அதனால் இந்த முயற்சியை கைவிட்டாள்.

அடுத்த வாரம் வெள்ளிக்கிழமை இரவு எப்போதுடா கோவைக்கு வருவோம் என்று கிளம்பினார்கள். சனிக்

கிழமை காலையில் ப்ளு மவுண்டனில் வந்து இறங்கிய வுடன் மறுபடியும் சந்திரகாந்தனுக்கு ஃபோன் செய்தாள்.

அவன் எடுக்கவில்லை. பெரும்பாலான சமயங்களில் கோவை வரும்பொழுது அந்த அதிகாலை நேரத்தில்கூட அவன் வந்து அவர்களை எதிர்கொண்டு அழைத்துச் சென்றது உண்டு.

கேஷுவலான உடை என்பார்களே அது போல ஒரு டி ஷர்ட்டில் அவன் வந்து அழைத்துக் கொண்டு போகும் பொழுது அவனைப் பார்த்து மகிழ்வாள் சம்யுக்தா.

பத்து நாட்களில் ஒரு வார்த்தை பேசுவதற்கு கூடவா நேரம் கிடைக்கவில்லை என்று அவளுக்குக் கோபமாக வந்தது. இருந்தாலும் வீட்டில் யாரிடமும் சொல்ல முடியவில்லை.

இதுவரையிலும் தாய் தந்தையருக்கு அவன் வெறும் தோழன் என்றுதான் தெரியும். அதற்கு மேலே விஷயங்கள் ஒரு படி போயிருக்கிறது என்பது அவர்களுக்கு தெரியாது.

'நேரம் வரட்டும். அப்ப சொல்லிக்கலாம்' என்றே இவள்தான் சொல்லி வந்தாள். சந்திரகாந்தன் கூட 'அம்மா அப்பா கிட்ட சொல்லிவிடலாம்' என்றுதான் சொல்லிக் கொண்டிருந்தான்.

இவள்தான் 'இல்லை, இல்லை, டைம் வரட்டும்' என்று திரும்பத் திரும்ப சொல்லி அவனை அடக்கி வைத்திருந் தாள். சனிக்கிழமை மாலையில் ஃபோன் அடித்த பொழுது பதில் கிடைத்தது. அந்தப்பக்கம் சந்திரகாந்தன் 'ஹலோ!' என்றான். அந்த ஹலோவில் ஏதோ ஒரு வித்தியாசம் தெரிந்தது.



அந்த ஹலோவில் தெரிந்த வித்தியாசம் அவளைத் தொல்லைக்குள்ளாக்கியது. அவஸ்தைப் படுத்தியது. தொண்டையில் ஏதோ அடைக்கிறாற்போல இருந்தது. "நான்...நான் சம்யுக்தா பேசறேன்" என்று தடுமாறினாள்.

"தெரியுதும்மா சொல்லு" என்றான்.

"ஏன் பத்து நாளா?.."

"முக்கியமா ஒரு வேலையா இருந்துட்டேன். பிஸியாயிட்டேன். பேச முடியலை" என்றான்.

"இன்னைக்கு உங்களைப் பார்க்க முடியுமா?" என்றாள்.

"ஆமா, நானே நினைச்சுட்டிருந்தேன். சாயங்காலம் ஐந்து மணிக்குப் பார்த்துடலாம்" என்றான்.

"எங்கே?" என்றாள் அவள் ஆர்வமாக.

"வழக்கம்போல நம்ம காலேஜ் பக்கமே வந்துடு" என்றான்.

"சரி" என்று போனாள்.

அங்கே சந்திரகாந்தன் அந்த ஸ்டேடியத்தில் ஒரு பக்கமாக அமர்ந்து கொண்டிருந்தான். இவள் ஆர்வமாக அவனை நோக்கிப் போனாள்.

அவன் பார்வை இவளை ஆழமாகக் கவனித்துக் கொண்டிருந்தது. அதிலே ஒரு வெறுமை தெரிந்தாற்போல இவளுக்குத் தோன்றியது. ஏதோ ஒரு வித்தியாசம் இவள் மனதுக்குப் பட்டது.

அடி வயிறு ஜில்லென்றது. ஏதோ நடக்கப் போகிறது என்ற கவலையுடனேயே அவனை நோக்கிப் போனாள்.

"வா, சம்யுக்தா, உட்காரு" என்று பக்கத்திலே இடத்தைக் காட்டினான்.

அவள் அமர்ந்தாள்.

தன்னைக் கண்டவுடனே அவன் கண்களில் தெரிகின்ற குறும்பும், விட்டால் வாரி அணைத்துக் கொள்ளுவான் போல இருக்கும் படபடப்பும் இன்றைக்கு இருக்க வில்லை. ஏதோ அந்நியர்கள் பார்த்துக் கொள்வது போல அவர்கள் அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

இவள் போய் அவனுக்கு இடதுபுறமாக அமர்ந்தாள். 'சம்யுக்தா' என்றான்.

அவன் குரல் கரகரத்தது. ஏதோ ஒரு வேதனை அந்தக் குரலிலே இருந்தது. "ஐ ஆம் சாரி சம்யுக்தா.உன் கிட்ட நான் இந்த மாதிரி பேச வேண்டி வரும்னு நான் நினைச்சதே இல்லை" என்றான்.

அவள் வியப்புடன் அவனைப் பார்த்தாள்.

"ஆமா, சம்யுக்தா, ஐ ஆம் வெரி சாரி. நாம கல்யாணம் பண்றதுக்கு வாய்ப்பு இல்லை. இந்தக் கட்டத்துல நாம பிரிஞ்சுடலாம்" என்றான்.

அவள் கோபமாக அவனை பார்த்தாள். "ஹலோ, என்ன விளையாடறீங்களா?" என்றாள்.

அவன் திரும்பி வேதனையுடன் அவளைப் பார்த்தான். "இல்லை, சம்யுக்தா ஐ ஆம் வெரி சீரியஸ்" என்றான். அவள் எழுந்து குபீரென்று சிரித்து விட்டு அவன் இரண்டு காதுகளையும் பிடித்து ஒரு ஆட்டு ஆட்டினாள், 'போதும் விளையாட்டு.' என்றாள்.



அவன் மெல்ல அவள் இரண்டு கைகளையும் எடுத்து விட்டுவிட்டு சொன்னான். "ஐ ஆம் வெரி சீரியஸ்" என்றான்.

அவள் மறுபடியும் கோபமாக அவனைப் பார்த்தாள். "என்னங்க? ஒரு வருஷமா பின்னாலேயே அலைவீங்க? ப்ரோபோஸ் பண்ணுவீங்க. சம்மதம் வாங்குவீங்க. அதுக்கப்புறம் திடீர்னு நாம பிரிஞ்சுடலாம்பீங்களா? காரணம் சொல்ல மாட்டீங்களா?" என்றாள்.

"காரணம் எதுவும் என்னைக் கேட்காதே. உன்னை பிரியறது எனக்கு மட்டும் சந்தோஷம் இல்லை. இதை நான் வந்து ரொம்ப ஆர்வமாவோ ஆசையாவோ சொல்றேன்னு நினைக்காதே. நெஞ்சு நிறைய வேதனையோட தான் சொல்றேன். ஆனா ஒரு மனுஷனுக்கு வாழ்க்கையில வேற கடமைகளும் இருக்குது" என்றான்.

அவன் உண்மையாகவே சொல்கிறான் என்பது அவளுக்கு புரிந்தது. அதற்குப் பிறகு அவன் பத்து நிமிடங்கள் சொன்ன விளக்கம் எல்லாம் அவள் காதுக்கு ஏறவில்லை. 'விஷயம் முடிந்தது. அவ்வளவுதான்' என்பது போல் அவள் அமர்ந்திருந்தாள்.

"சரி, நான் வரேன்" என்று சொல்லி அவன் கிளம்பிப் போய் விட்டான். எப்படி வீடு வந்து சேர்ந்தோம் என்று தெரியாமலே வந்து சேர்ந்தாள். பழைய விஷயங்கள் எல்லாம் நினைவுக்கு வர புரண்டு படுத்தாள். இன்றைக்கு அவனைப் பார்த்தது நெஞ்சுக்குள் எல்லாவற்றையும் கிளப்பி விட்டது.

ஓராண்டு பழக்கம் நண்பர்களாக, ஆறு மாதப் பழக்கம் நேசித்தவர்களாக, எதற்காக அப்படி திடீரென்று தன்னை கைவிட்டான் என்பது அவளுக்கு புரியவே இல்லை.

அதற்குப் பிறகு அவளுக்கு கோயம்புத்தூரில் இருக்கப் பிடிக்கவேயில்லை. எப்படியோ அவன் அவள் கண்ணில் படாமல் தவிர்த்து விட்டான்.

அதற்குப் பிறகு ஆறு மாதங்கள்தான் அவர்கள் கோய முத்தூரில் இருந்தார்கள். அவர் அப்பாவுக்கு மாற்றலாகவும் அவளும் விரும்பி அப்பாவுடனேயே சென்னைக்கு சென்று விட்டாள். ஆறு ஆண்டுகள் கழித்து கோவைக்கு வந்து. இப்படி அவனைச் சந்திக்க நேரும் என்றே அவளுக்கு தோன்றவில்லை.

"என்னடி எழுந்திருக்கலையா?" என்று அம்மாவின் குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தாள். கடிகாரத்தில் ஐந்து மணி ஆகியிருந்தது. அவசரமாக எழுந்தாள். அதையும் இதையும் நினைத்துக் கொண்டு அவள் உறங்கும்போதே மணி இரண்டு மணி ஆகிவிட்டது. அதுவும் தன்னை மீறிய அசதியில்தான் உறங்கியிருந்தாள். அவள் எட்டு மணிக்கே அலுவலகத்துக்குக் கிளம்பியாக வேண்டும். அவசரமாகப் புறப்பட்டாள்.

"அம்மா லஞ்சக்கு வந்துடறேன்மா!" என்று சொல்லி விட்டுக் கிளம்பிப் போனாள். ஐந்து கிலோ மீட்டர் தூரத்தில்தான் அவளுடைய அலுவலகம் இருந்தது. அதனால் வீட்டுக்கு வரவேண்டும் என்பது அவளுக்குப் பெரிய கடினமான விஷயமாக இருக்க வில்லை.



இருந்தாலும் அன்றைக்கு அரை நாள் லீவு போட்டு விட்டு வந்து விட வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந் தாள். அப்படியே விடுமுறை எடுத்துக் கொண்டு வந்தாள்.

காலையில் புறப்படும்பொழுது அம்மா சொல்லியனுப் பியது நினைவுக்கு வந்தது. "ஏய், சம்யுக்தா அந்தக் கடையில ராகி மாவு நல்லா இருக்கும். வரும்பொழுது வாங்கிக் கொண்டு வந்துடு" என்றாள். தான் வழக்கமாக வரும் பொழுது வழியிலே இருக்கிற ஒரு கடையைக் குறிப்பிட்டு சொல்லியிருந்தாள்.

அது நினைவுக்கு வர அவள் உள்ளே போய் ராகி மாவு பாக்கெட்டை எடுத்துத் தள்ளு வண்டியிலே போட்டுக் கொண்டு மேலும் வீட்டுக்கு வேண்டிய இரண்டு மூன்று சாமான்களை வாங்கிக் கொண்டாள்.

இப்போதெல்லாம்தான் வாரத்துக்கு இரண்டு மூன்று முறை நாட்கள் சிறுதானியங்களை சேர்க்கும்படி சொல் கிறார்களே. அதற்கு ஏற்ப அவள் இரண்டு மூன்று ஐட்டங்களை வாங்கிக் கொண்டு பில் போட்டு விட்டுத் திரும்ப வெளியிலே வரும்பொழுது மீண்டும் அவனை சந்தித்தாள். இப்பொழுது நேருக்கு நேராக.

பில்லுக்கு பணத்தைக் கொடுத்து விட்டு திரும்பொழுது அவன் யாரிடமோ பேசிக்கொண்டு வந்தான். வந்தவன் இவளைக் கண்டவுடனேயே சட்டென்று நின்றான்.

"எக்ஸ்கியூஸ் மீ" என்று நண்பரிடம் சொல்லிவிட்டு அவளை நோக்கி வந்தான். 'ஓடிவிடலாம்' என்று அவளுக்குத் தோன்றியது. நாகரிகம் கருதி கால்களை ஊன்றிக் கொண்டு அங்கே நின்றாள்.

''சம்யுக்தாதானே?'' என்றான் அவன். இந்த ஆறு வருடங்களுக்குள்ளாக அவன் முகத்தில் சற்றே வயது ஏறிய தோற்றம் வந்திருந்தது. ஒரு களைப்பும் கூட இருந்தது. அவள் மேலும் கீழும் தலையாட்டிக் கொண்டு 'ம்' என்றாள்.

''நல்லாயிருக்கீங்களா?'' என்றான் அவன்.

''நல்லாயிருக்கேன்'' என்றாள் அவள் வேறெங்கோ பார்த்துக்கொண்டு.

''ஒரு நிமிஷம் பேசலாமா?'' என்றான்.

கவுண்டரில் நின்று கொண்டிருந்த பெண்மணி இவர்களை சுவாரசியமாகப் பார்க்கவே அதை தவிர்க்கிறாற் போல வெளியே வந்தார்கள். அந்தப் பெரிய கடையின் முன்னாலே கார் பார்க்கிங் போட நல்ல இடம் இருந்தது.

அவள் மெல்ல இரண்டு எட்டு எடுத்து வைத்தாள். சந்திரகாந்தன் அவள் அருகிலே வந்து நின்றான்.

''இளைச்சுட்டே போல இருக்கு'' என்றான்.

அவள் கண்களில் சீற்றம் பொங்க அவனைப் பார்த்தாள். ''ஹலோ, உங்களுக்கு என்ன வேணும்?'' என்றாள்.

அவன் லேசாக உதட்டைக் கடித்துக் கொண்டு ''ஐ ஆம் சாரி சம்யுக்தா. உங்ககிட்ட பேசணும்'' என்றான்.

''இனிமே பேசறதுக்கு என்ன இருக்கு? ஆறு வருஷத்துக்கு முன்னாடியே எல்லாம் முடிஞ்சது. இனிமே பேசணும் அப்படி இப்படின்னு சொல்லிட்டு என்னைப் பார்க்கற வேலை வேண்டாம்'' என்றாள் ஒரு விரலை உயர்த்தி.

''நீ என்னைப் புரிஞ்சுக்கலை'' என்றான் அவன்.



''இனிப் புரிஞ்சுக்கறதுக்கு என்ன இருக்கு. இனிமே நாம நண்பர்களாக இருக்கலாம்னு சொல்வீங்களா? நோ சான்ஸ் அட் ஆல். இனிமே என் எதிரிலே வந்து நின்னீங்கன்னா அவ்ளோதான். நல்லாயிருக்காது. புரியுதா? என்றாள்.

அவன் மேற்கொண்டு எதுவும் பேசுவதற்கு முன்பாக அவள் நகர்ந்தாள். ''சம்யுக்தா, ப்ளீஸ்'' என்றான் அவன். அவள் திரும்பிப் பார்க்கவே இல்லை.

அவள் அணிந்திருந்த சுடிதாரில் அவள் இளமையாகவே தான் தெரிந்தாள். வேகமாக போய் அவள் காரை எடுத்துக் கொண்டு போவதை அவன் அங்கேயே நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தான். முகத்தில் எல்லையற்ற வேதனை தெரிந்தது. காரை எடுக்கிற வேகத்தில் ஓரக்கண்ணால் அவனைப் பார்த்தாள். அந்த வேதனை அவள் மனத்தையும் தான் தாக்கியது. ஆனால் நிற்கவில்லை. கார் வேகமெடுத்தது.

## அத்தியாயம் - 8

தன்னுடைய காரை வேகமாகக் கொண்டு வந்து நிறுத்தினான் சந்திரகாந்தன். இறங்கிக் கதவை அடித்துச் சாத்தி விட்டு போர்ட்டிகோவுக்குப் போனான். போர்டிகோவில் இருந்த அந்த பெரிய சோஃபாவிலே அமர்ந்து கொண்டான்.

முகம் இறுக்கமாக இருந்தது. பழைய எண்ணங்கள் திடீரென்று அவனுக்குள்ளே பொங்கிக் கொண்டிருந்தன.

சம்யுக்தாவைப் பார்க்க வேண்டும் என்பதற்காகவே ஓடிய நாட்கள்!

மெரினா பீச்சிலும் அவள் கண்களில் படும் இடங்களிலும் ஏதோ அகஸ்மாத்தாக வந்தது போன்று நின்று நாடகம் போட்ட நாட்கள்!

ஊரில் உள்ள விஷயங்களையெல்லாம் பேசிக் கழித்த நாட்கள்! வெறும் கட்டிடங்களை மட்டும் அல்லாமல் பழைய கலை சார்ந்த கட்டிடங்கள் என்று பலவற்றையும் பற்றி பேசி ஆராய்ந்து மகிழ்ந்த அந்த நாட்கள்.

தாராசுரம் போக வேண்டும், எல்லோரா போக வேண்டும். தமிழ்நாட்டில் எந்தெந்தக் கோயில்களில் சிற்பக்கலை தோர்ந்து விளங்குகிறதோ அந்தக் கோயில்களுக்கெல்லாம் போக வேண்டும் என்று எத்தனை எத்தனை திட்டம் போட்டிருந்தார்கள்!

அத்தனை திட்டத்தையும் உடைத்து விட்டு ஒருநாள் அவளிடத்திலே உனக்கும் எனக்கும் திருமணமாவது நடவாத காரியம் என்று சொல்ல வேண்டி இருந்தது.

அந்த நாள்! அதை இப்போது நினைத்தாலும் அவனுக்கு வலித்தது.

ஆறு ஆண்டுகளாக அவள் கோவையில் இல்லை என்பது தெரிந்திருந்தது. ஆறு ஆண்டுகள் கழித்து இப்போது வந்திருக்கிறாள். ஏன் வந்தாள்? என் நிம்மதியை குலைப்பதற்காகவா? ஒரு வாய்ப்பு! விளக்கம் சொல்லுவதற்கு ஒரே ஒரு வாய்ப்பு! அதைக் கூட அவள் தரவில்லையே என்று வருத்தத்தோடு அமர்ந்து கொண்டிருந்தான்.

யாரோ நடந்து வரும் அரவம் கேட்டது. திரும்பிப் பார்த்தான். மகாலட்சுமி. "காபி கொண்டு வரட்டுமா?" என்றாள்.



"ம்..." என்றான்.

இரண்டு எட்டுப் போனவள் திரும்பி வந்து "ஏன் இப்படி இருக்கீங்க? இந்த வாரமாவே நான் பார்த்துட்டுத் தான் இருக்கேன் உங்க முகமே சரியில்லை" என்றாள்.

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை" என்றான் அவன் அவள் முகத்தைப் பார்க்காமல்.

"இல்லையில்லை. இத்தனை நாளா பார்க்கிறேனே? எனக்குத் தெரியாதா? இந்த அளவுக்கு டென்ஷன் நான் பார்த்ததே இல்லை" என்றாள்.

அவன் கோபமாகத் திரும்பி அவளைப் பார்த்தான். "அதுக்கென்னங்கறே இப்ப? இப்ப காபி கொண்டு வரதுன்னா கொண்டு வா. இல்லைன்னா நகரு பேசாம" என்றான்.

அவள் ஒரு நிமிடம் அதிர்ந்து போனாள். அவளிடத்திலே அவன் இப்படிக் கோபப் பட்டதே இல்லை.

"ஓ ஐ ஆம் சாரி!" என்று முணுமுணுத்துக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தாள்.

அவள் நகர்ந்ததற்குப் பின்பு அவள் முதுகைப் பார்த்தவுடன் அவனுக்கு ஒரு மாதிரியாகிப் போனது. தேவையில்லாமல் கோபத்தை இவளிடத்திலே காட்டி விட்டோமே என்று எண்ணிக் கொண்டவன் சுற்றும் முற்றும் பார்த்தான். அவன் உட்கார்ந்த இடத்திலே அலுவலகத்திலே.. வீட்டில் அவனது படுக்கை அறைக்குள்ளே... என்று எங்கு பார்த்தாலும் நல்ல சிந்தனைகளை ஊக்குவிக்கக் கூடிய புத்தகங்கள் இருக்கும். அது மாதிரி ஒன்று இப்பொழுது அந்த டீப்பாயின் மேல் இருந்தது.

எடுத்து விரித்து வைத்துக் கொண்டான். இலக்கில்லாமல் படித்துக் கொண்டிருந்த போது அதிலிருந்த சில வாசகங்கள் அவன் மனதுக்கு ஆறுதலைத் தோற்றுவித்தன.

அதற்குள்ளாக மகாலட்சுமியும் காபி கொண்டு வந்து கொடுத்தாள். ''ஐ ஆம் சாரி!'' என்றான் புத்தகத்தில் பார்வையைச் செலுத்திக் கொண்டு. அவள் விசித்திரமாக அவனைப் பார்த்தாள். ''பரவாயில்லை. பரவாயில்லை'' என்றாள்.

அவன் ஒரு வேளை உட்காரச் சொல்லுவானோ என்று எதிர்பார்த்தாள். ஆனால், சந்திரகாந்தன் அவளை உட்காரச் சொல்ல வில்லை. அமைதியாக காஃபியை குடிக்க ஆரம்பித்தான்.

அவள் நான் 'நிக்கட்டுமா போகட்டுமா' என்பது போல் நின்று கொண்டிருந்தாள். அவனும் ஏதோ பேச வேண்டும் என்பதற்காக நிமிர்ந்து ''அம்மா, அப்பாவெல்லாம் எங்கே?'' என்றான்.

''கோயிலுக்குப் போயிருக்காங்க'' என்றாள்.

''நீ போகலையா? இல்லை. கொஞ்சம் வேலை இருந்தது. அதனால இருந்துட்டேன்'' என்றாள்.

அவன் மறுபடியும் இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் பார்த்து விட்டு ''குழந்தைங்க?'' என்றான்.

''குழந்தைங்களைக் கொண்டு போய் இன்னிக்கு மியூசிக் கிளாசுக்கு விட்டுட்டு வந்திருக்கேன் என்றாள்.

''ஓஹோ, இன்னிக்கு ஃப்ரைடேவா?'' என்று சொல்லி விட்டு அவன் மறுபடியும் புத்தகத்தை எடுத்துக்கையிலே வைத்துக் கொண்டான்.



நீ போகலாம் என்பது போன்ற அந்த செய்கையைப் பார்த்தவுடனே அவள் பெருமூச்சு விட்டுவிட்டு ஒரு எட்டு எடுத்து வைத்தவள் திரும்பி நின்று ''இல்லை.. எங்கிட்ட ஷேர் பண்ணிக்கலாம் அப்படின்னா..'' என்று இழுத்தாள்.

அவன் ஒரு பெருமூச்சு விட்டு ''இது ஆஃபீஸ் மேட்டர். இதை எல்லாத்துக்கிட்டேயும் சொல்லிட்டு இருக்க முடியாது.''

அவள் அடிபட்டாற் போல அவனைப் பார்த்தாள். ''எங்கிட்ட கூடவா?'' என்பது போல இருந்தது.

''ப்ளீஸ் அன்டர் ஸ்டாண்ட்.மஹா'' என்றான் அவன் பொறுமையற்றவனாக. அவள் அந்த இடத்தை விட்டு நகர்ந்து விட்டாள்.

மறுபடியும் அவன் ஒரு பெருமூச்சு விட்டு விட்டு காஃபியைக் குடித்து முடித்தான்.

மனம் நிலைகொள்ளாமல் தவித்தது. வாழ்க்கையில் சில விஷயங்கள் இப்படி புரட்டிப் போடுமா என்ன? இத்தனை நாட்களுக்குப் பிறகு அந்தப் பெண்ணைப் பார்த்து தன் மனம் இப்படி அலை பாய்கிறதே. அவளுக்கு ஒரு வேளை திருமணமாகி இருக்கலாம்.

அவள் 'வெல்செட்டில்ட்' என்பார்களே அது போல வாழ்க்கையிலே ஒரு நிலையை அடைந்திருக்கலாம். இப்பொழுது போய் அவளிடத்திலே நான் பேச முயற்சித்தது தவறுதான் என்று எண்ணிக் கொண்டான்.

இருந்தாலும் ஒரு வாய்ப்புக் கிடைக்குமானால் விளக்கம் சொல்லி விட வேண்டும் என்று தோன்றியது.

இத்தனை நாட்களுக்குப் பிறகு என்ன விளக்கம் சொல்லப் போகிறாய் என்று அவன் இன்னொரு மனது கேட்க வைத்தது.

அதே நேரத்தில் அவனுடைய செல்ஃபோன் ஒலித்தது. எடுத்தான். அந்தப் பக்கம் முருகவேல். "சந்துரு, என்ன பண்ணிட்டிருக்கே?" என்றான் முருகவேல்.

"என்ன பண்ணிட்டிருக்கேன்?. காஃபி குடிச்சிட்டிருக்கேன்" என்றான் இவன்.

"எங்கே இருக்கே?" என்றான்.

"வீட்லடா" என்றான் சந்திரகாந்தன்.

"இந்த நேரத்துக்கு. வீட்லயா?"' என்றான் முருகவேல்.

"ஆமா இன்னிக்கு கொஞ்சம் மூட் அவுட் ஆயிடுச்சு. வந்துட்டேன்," என்றான்.

'ஓ!'

"அப்புறம் சொல்லுடா" என்றான் சந்திரகாந்தன்.

முருகவேல் அந்தப் பக்கம் தயங்கினாற்போல இருந்தது. "சந்துரு, உனக்கு விஷயம் தெரியுமா?" என்றான்.

"என்ன விஷயம்?" என்றான் சந்திரகாந்தன்.

"மேடம் இந்த ஊருக்கு வந்திருக்காங்கப்பா!" என்றான்.

"எந்த மேடம்?" என்றான் சந்திரகாந்தன்.

"நான் சொல்றது உனக்குப் புரியலையா? இல்லை புரியாத மாதிரி நடிக்கறியா?" என்றான்.

"நிஜமாவே புரியலைடா. சொல்லு?" என்றான்.



"சம்யுக்தா மேடம் கோயம்புத்தூருக்கு வந்திருக்காங்க. இங்கேயே பெரிய ஒரு கன்சர்ன்ல சேர்ந்திருக்காங்கடா" என்றான்.

"ஓஹோ!" என்றான் இவன்.

"என்னடா இவ்வளவு இன்ட்ரஸ்டா சொல்றேன். நீ காதுல வாங்கிக்க மாட்டேங்கறே?" என்றான் அவன்.

"இனிமே அவளைப் பார்த்து எனக்கு என்னடா ஆகுது?" என்றான் சந்திரகாந்தன்.

"டேய். நீ ஸ்டுப்பிட்ரா சந்துரு. நான் போய் அவங்களைப் பார்க்கட்டுமா?" என்றான்.

"எதுக்கு? பார்த்து தன்னிலை விளக்கம் சொல்றதுக்கா? நான் ஒரு தடவை ட்ரை பண்ணி கேவலப்பட்டாச்சு. நீ பேசாம இரு!" என்றான் சந்திரகாந்தன்.

"டேய், நான் சொல்றதைக் கேளுடா. நான் சும்மா உனக்கு ஃபோன் பண்ணலை. அவங்க இங்க வந்து ஒரு வாரம் ஆச்சு. விஷயம் தெரிஞ்சதுல இருந்து தேடிப் பிடிச்சு அவங்க செல் நம்பரை வாங்கிட்டுத்தான் இப்ப பேசறேன். நீ அவங்ககிட்ட பேசுடா!" என்றான் அவன்.

சந்திரகாந்தன் நீண்டதொரு பெருமூச்சுவிட்டான் பிறகு சொன்னான் "டேய் வேலு, புரிஞ்சுக்கோ. தி ரோட் நாட் டேக்கன் என்று ஒரு போயம் இருக்கு தெரியுமா? அது போகாத ஊருடா. அதைப் பத்தி பேசி என்ன பண்றது?."

"அவங்க லைஃப்ல இப்ப எப்படி இருக்காங்களோ என்னவோ. இந்த சமயத்துல நான் போய் என்ன விளக்கம் சொல்றது?" என்றான்.

முருகவேல் ''அது தெரியாதுடா. அதைப் பத்தி நான் இன்ஃபர்மேஷன் கேதர் பண்ணிட்டே இருக்கேன். இருந் தாலும் உனக்கு மனசுக்குள்ள ஒரு வருத்தம் இருந்துட்டே இருந்ததில்லே? என் கிட்டே எத்தனையோ தடவை சொல்லியிருக்கே. இப்ப உனக்கு ஒரு வாய்ப்பு கிடைச் சிருக்கு. எக்ஸ்ப்ளெயின் பண்ணிடு'' என்றான் முருகவேல்.

''என்னத்தடா எக்ஸ்ப்ளெயின் பண்றது? நம்ம ஃப்ரெண்ட்ஸே புரிஞ்சுக்கலை'' என்றான் சந்திரகாந்தன். முடிவிலே நீண்டதொரு பெருமூச்சு விட்டான்.

''இப்ப புரிஞ்சுக்கறானுங்களேடா? இப்ப வருத்தப் படறானுங்க!'' என்றான்.

''இப்ப வருத்தப்பட்டு என்ன பண்றது? அந்த நேரத்துல எனக்கு எப்படி இருந்திருக்கும்?'' என்றான் சந்திரகாந்தன்.

''ஆமா, அன்னைக்கு அவனுங்களும் தான் ஒரு மாதிரி பேசிட்டானுங்க. கேவலமா நினைச்சுட்டானுங்க. மனுஷன் புத்தி அப்படித்தான்டா இன்னிக்கு புரிஞ்சுக்கறாங்கள்ளே? என்னைக்கும் தோள் கொடுக்க நான் இருக்கேன்ல?'' என்றான் முருகவேல்.

''தாங்க்ஸ் டா'' என்றான் சந்திரகாந்தன் அசுவாரஸ்ய மாக.

''ஆமாண்டா. எதுவுமே போனதுக்கு அப்புறம் அதை இழந்ததுக்கு அப்புறம் தான் அதோட அருமை தெரியும்'' என்றான்.

''டேய், டேய் ஏன் அபசகுனம்மாதிரி பேசறே? உன்னையும் இழக்கச் சொல்றியா?'' என்றான் முருகவேல்.



''இல்லை. இல்லை நீ அவங்ககிட்ட பேசறே. நீ எனக்கு ப்ராமிஸ் பண்றே.'' என்றான் முருகவேல்.

''சரிடா பார்க்கறேன்'' என்றான்.

''டேய், நான் கேள்விப்பட்டது. இப்ப அவங்க வீட்டுக்குப் போயிருக்காங்க. ஃப்ரியா தான் இருப்பாங்க. நீ பேசு'' என்றான்.

''வீட்ல அவங்க அம்மா அப்பா இருப்பாங்கள்ல?'' என்றான் சந்திரகாந்தன்.

''இல்லைடா. அவங்களும் எங்கோ வெளியில போன மாதிரி கேள்விப்பட்டேன்'' என்றான்.

''எதுக்கு நீ இவ்வளவு தூரம் உளவு பார்த்துட்டிருக்கே?'' என்றான் சந்திரகாந்தன்.

''நான் ஒண்ணும் உளவு பார்க்கலை. எனக்கு அங்கங்கே ஃப்ரெண்ட்ஸ் இருக்காங்க. அது பாட்டுக்கும் தானா என் காதுல வந்து விழுது. காஷுவலா இந்த விஷயம் என் காதுக்கு வந்துச்சு. அவ்வளவு தான்.'' என்றான்.

''சரிடா, நான் பேசறேன்'' என்றான் சந்திரகாந்தன்.

முருகவேல் ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டவனாக ''அப்பாடா, கண்டிப்பாப் பேசறடா, எனக்காகப் பேசறடா, அவங்க இன்சல்டிங்கா பேசினாலும் நீ பொறுமையாப் பேசுடா'' என்று ஏகப்பட்ட உபதேசங்களை சொல்லி விட்டு ஃபோனை வைத்தான்.

சந்திரகாந்தனுக்கு மனம் நெகிழ்ந்து விட்டது.

தனக்காக இல்லா விட்டாலும் இந்த முருக வேலுக்காக வாவது ஒரு முறை பேசிவிடுவோம் என்று அந்த செல்

போன் எண்ணை தன்னுடைய செல் போனில் சேவ் செய்து கொண்டான்.

தயக்கத்துடன் எழுந்து மற்றவர் காதிலே விழாத வண்ணம் போர்டிகோவுக்கும் காம்பவுண்ட் சுவருக்கும் இருந்த அந்தப் பரந்த இடைவெளியிலே ஓரமாக போய் நின்று கொண்டான்.

அவளது செல்லுக்குத் தொடர்பு கொண்டான். அந்தப் பக்கம் இருந்து 'ஹலோ' என்ற கம்பீரமான குரல் கேட்டது.

அப்பொழுது விளையாட்டுத் தனமாக பேசிக் கொண்டிருந்த பெண்! இப்பொழுது நடை உடை பாவனைகளில்தான் எத்தனை மாற்றம். எவ்வளவு கம்பீரமாக பேசுகிறாள் என்று எண்ணிக் கொண்டு. "ஹலோ, நான் சந்திரகாந்தன் பேசறேன்" என்றான்.

அவள் ஒரு நிமிடம் உறைந்தாற்போல தெரிந்தது. "ப்ளீஸ், நான் உங்ககிட்ட பேசனும். ஒரு முக்கியமான எக்ஸ்ப்ளனேஷன் கொடுக்கனும்" என்றான்.

"இங்க பாருங்க, இப்ப நான் வெல் செட்டில்டா இருக்கேன். என் வாழ்க்கை நிம்மதியா போயிட்டி ருக்கு. நீங்க நிஜமா எனக்கு ஏதாவது உதவி செய்யணும்னு நினைச்சிங்கன்னா ப்ளீஸ் டோண்ட் டிஸ்டர்ப் மி. உங்க வாழ்க்கையை நீங்க பாருங்க, என் வாழ்க்கையை நான் பார்க்கறேன். இனிமே ஃப்ரெண்ட்ஸா இருக்கலாம் அப்படின்னு கூட ஆரம்பிக்காதீங்க. தட்ஸ் நாட் பாசிபிள். நீங்க வேற நேர் கோட்டுல போயாச்சு. நான் வேற நேர் கோட்டுல போயாச்சு. இனிமே ரெண்டும் இணை



கோடுதான் டு யு அண்டர்ஸ்டாண்ட்?" என்று படபட வென்று கொட்டினாள் சம்யுக்தா.

"இல்லை சம்யுக்தா" என்று அவன் ஆரம்பிக்க "ப்ளீஸ், ப்ளீஸ்." என்று இரண்டு மூன்று தடவை சொல்லி விட்டு அவள் துண்டித்துக் கொண்டாள்.

சந்திரகாந்தன் முகத்தில் அறைந்தாற் போல ஒரு பாவத்துடன் செல்ஃபோனை கையில் வைத்துக் கொண்டு நின்றான்.

இது அத்தனையையும் மகாலட்சுமி வீட்டின் உள்புறமாக நின்று கொண்டு கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

## அத்தியாயம் - 9

தட்டில் அம்மா வைத்துக் கொடுத்திருந்த சீடை உருண்டைகளை எடுத்து வாயிலே போட்டாள் சம்யுக்தா. மிருதுவாக கரைந்தது. அவ்வளவு ருசியாக இருந்தது. அம்மா கை பக்குவமே தனிதான் என்று எண்ணிக் கொண்டே இன்னும் இரண்டு மூன்று சீடை உருண்டைகளை எடுத்து வாயில் போட்டாள்.

டீப்பாயில் ஒரு பக்கத்தில் ஒரு தட்டில் சீடை உருண்டை களும் காராச்சேவும் அதன் அருகிலேயே ஒரு டம்ளரில் நுரை ததும்பும் காஃபியுமாக அமர்ந்து கொண்டிருந்தாள் சம்யுக்தா.

இன்றைக்கு அவள் வரும்பொழுதே தாமதமாகி விட்டது. வழியிலே ஷாப்பிங் வேறு. கூடவே சந்திரகாந்தனை நினைவூட்டும் நிகழ்வுகள் வேறு! அவனுக்கு எப்படித்

தன்னுடைய செல்போன் எண் தெரிந்தது என்று அவளுக்குத் தெரியவில்லை.

எப்படியோ கிடைத்து விட்டது. என்ன விளக்கம் விளக்கம் என்று சொல்கிறார். அது என்ன விளக்கம் என்று கேட்டு முடித்து விட்டால் கூட பரவாயில்லையோ என்று தோன்றியது.

இது நடந்து நான்கைந்து நாட்களாகிவிட்டன. அலுவல கத்தில் கூட விசாரித்து விட்டாள். தன்னுடைய செல்ஃ போன் நம்பரை யாருக்காவது கொடுத்தார்களா என்று மொட்டையாக விசாரித்தால் என்ன புலப்படும். சரி என்ன ஆகி விடப் போகிறது என்று அவளும் அந்த விஷயத்தை ஒரு ஓரத்தில் போட்டு விட்டாள்.

ஆனால், இரண்டு நாட்களுக்கு முன்பு ஒன்று நடந்தது. அன்றைக்கு திடீரென்று டவுன் பக்கத்திலே ஏதோ தகராறு ஏற்பட கடைகளை யெல்லாம் இழுத்து மூடி விட்டார்கள். பிரச்சினை பெரிதாகும் போல் இருக்கிறது என்று அவளுடைய அலுவகத்திலும் கூட எல்லோரையும் போகச் சொல்லி விட்டார்கள்.

தன்னுடைய காரை எடுத்துக் கொண்டு அவள் வழக்க மான பாதையில் இல்லாமல் வேறு வழியாக வந்தாள்.

அவர்களுக்கு நகருக்குள் வீடு இருந்தாலும் கூட அப்பா அமைதிக்காகவும், ஆரோக்கியமான காற்றுக்காகவும் வடவள்ளிப் பகுதியிலே உள்ள ஒரு நகரிலே ஒரு அழகான பெரிய பங்களா வாங்கிப் போட்டிருந்தார்.

அவர்கள் இப்பொழுது அங்கேதான் தங்கிக் கொண்டிருந் தார்கள் ஆர்.எஸ்.புரம் பகுதியில் அவள் வந்து



கொண்டிருந்தபொழுது திடீரென்று ஒரு பெண் லிஃப்ட் கேட்டு கையை நீட்டினாள்.

சம்யுக்தாவும் காரின் வேகத்தைக் குறைத்தாள். குறைத்த பிறகுதான் கவனித்தாள். அந்தப் பெண், அன்றைக்கு சந்திர காந்தனுடன் காரில் ஏறிப் போன பெண் என்பதை. சட்டென்று வேகம் எடுத்து விடலாமா? என்று நினைத்தாள்.

"வேண்டாம். எதற்காக பயப்பட வேண்டும்?" என்று எண்ணிக் கொண்டவளாக எட்டிப் பார்த்தாள். "மேடம், நீங்க எந்த வழியில போறீங்க?" என்று கேட்டாள் அந்தப் பெண்.

"உங்களுக்கு என்ன வேணும்?" என்றாள்.

"இல்லைங்க. இந்த பால் கம்பெனியில இறக்கி விட்டால் போதும். ஒருவேளை நீங்க வடவள்ளிப் பக்கமாக போனா..!" என்று இழுத்தாள்.

"ம்" என்று கதவைத் திறந்து விட்டாள்.

அவள் பாவம் கையிலே காய்கறிக் கூடையோடு நின்று கொண்டிருந்தாள் போலும். நிம்மதியாக காரில் ஏறி அமர்ந்தாள்.

ஓரிரு நிமிடங்கள் கார் அமைதியாக ஓடியது. "உங்களுக்கு எங்கே இறங்கணும்?" என்று கேட்டாள் சம்யுக்தா.

"இல்லை மேடம். நீங்க அந்தக் கார்னர்ல இறக்கி விட்டால் போதும்" என்று அவள் தயங்கினாள்.

"இல்லை, விலாசம் சொல்லுங்க!" என்றாள் சம்யுக்தா.

அந்தப் பெண் அட்ரஸ் சொன்னாள். சம்யுக்தாவுக்கு நெஞ்சிலே அம்பு குத்தினாற்போல அவளுடைய வார்த்

தைகள் தைத்தன. அவள் சொன்ன விலாசம் சந்திரகாந்தன் வீட்டு விலாசம்

"ஓ நீங்க அங்கதான் இருக்கிங்களா?" என்று கேட்டாள் சம்யுக்தா.

"ஆமாங்க!" என்று சிரித்தாள் அந்தப் பெண்.

அதற்கு மேலும் விசாரிக்க சம்யுக்தாவிற்கு தெம்பு இருக்க வில்லை. 'உங்க வீட்ல அவரு என்ன பண்றாருன்னு கேட்டு அவர் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி நடத்துறாருன்னு சொல்லி... எதற்கு... வேண்டாம்' என்று விட்டு விட்டாள்.

அமைதியாகவே காரை ஓட்டிக் கொண்டிருந்தாள். அவர்கள் வீட்டிற்குச் செல்ல வேண்டுமா? என்று ஒரு பயம் ஓரத்திலே எழுந்தது.

நல்ல வேளையாக அந்தப் பெண் "மேடம், இந்த சிக்னல் பக்கம் இறக்கி விட்டீங்கன்னா போதும். நான் இங்கிருந்து நடந்து போய் விடுவேன்" என்று மறுத்து விட்டாள்.

"அப்பாடா!" என்று பெருமூச்சு விட்டுவிட்டு அவள் காரை நிறுத்தி விட்டு அந்தப் பெண்ணை இறக்கி விட்டு விட்டு தன் பயணத்தைத் தொடர்ந்தாள்.

இப்படியொரு பெண்ணும் இரண்டு குழந்தைகளையும் தன்னுடைய காரிலே ஏற்றிக் கொண்டு சிரித்துக் கொண்டே போன அந்த மனிதனுக்கு தன்னிடத்திலே விளக்கம் சொல்லுவதற்கு என்ன தகுதி இருக்கிறது என்று அவள் கோபம் தலைக்கேறியது.

அன்றைக்கெல்லாம் உறக்கம் பிடிக்கவில்லை. கொஞ்சம் சிரமப்பட்டுத்தான் போனாள். பிறகு தன் மனத்துக்கு



தானே சொல்லிக் கொண்டாள். பல நாட்களுக்கு பிறகு இந்த ஊருக்கு வந்ததால் ஏற்பட்டிருக்கிற அதிர்ச்சி. பழகப் பழக பாலும் புளிக்கும் என்பது போல திரும்பத் திரும்ப இரண்டு மூன்று முறை அவனை சந்தித்தாலோ அல்லது அவனது தொடர்பான விஷயங்களைக் கேள்விப் பட்டாலோ பிறகு அது பழகி விடும் என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள்.

ஆனால் அப்படி முடியுமா? என்ற கேள்வியும் அவளுக்கு இன்னொரு புறத்திலே இருக்கத்தான் செய்தது.

டி.வி. ரிமோட்டை கையில் எடுத்துக் கொண்டு உள்ளூர் சேனல் ஒன்றை திறந்தாள்.

இந்த நேரத்தில் அவள் உள்ளூர் செய்திகளைப் பார்ப்பது வழக்கம். ஏனென்றால் உள்ளூரிலே என்ன நடக்கிறது என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்.

தலைப்புச் செய்திகள் மாதிரி ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார்கள். சற்று நேரம் அமைதியாக பார்த்துக் கொண்டிருந்தாள்.

திடீரென்று இன்றைக்கு 'கோயம்புத்தூரின் கௌரவம் பகுதி' என்று ஒன்றைப் போட்டார்கள். அந்த உள்ளூர் சேனலிலே தினம் கோவைக்கு நன்மை செய்யக் கூடிய ஒரு நிறுவனத்தைப் பற்றியோ அல்லது ஒரு நபரைப் பற்றியோ செய்தி போடுவார்கள்.

பல நாட்களாக ஊரின் தொடர்பு விட்டுப் போனதால் இந்தப் பகுதியைப் பார்ப்பதிலே சம்யுக்தாவிற்கு ஆர்வ மாகியது. அவளும் ஆர்வமாக பார்க்கலானாள். சட்டென்று

அவள் எதிர்பாராத விதமாக சந்திரகாந்தனை அதிலே காட்டினார்கள்.

கூடவே இன்னொருவரும்! அவர்கள் இருவரையும் பேட்டி காண்பதைப் போல ஒரு தொகுப்பாளர். "நீங்க மிஸ்டர் சந்திரகாந்தன், நீங்க கட்டிடத் தொழில்ல கோயம் புத்தூர்ல ரொம்ப ஃபேமஸ்னு எல்லாருக்கும் தெரியும். உங்களை சந்திக்கிறதுல ரொம்ப மகிழ்ச்சி" என்று ஆரம்பித் தார்கள்.

அவன் வணக்கம் சொல்லி விட்டு பேசாமல் நின்று கொண்டிருந்தான். அவனைப் பற்றி கூட இருப்பவர்தான் மிகவும் புகழ்ந்து சொன்னார்.

"நாங்க ஒரு அமைப்பு நடத்தறோம். அந்த அமைப்பு என்னன்னா? அரசாங்க ஆஸ்பத்திரியில நிறைய பிணங்கள் உறவினர்களால் வாங்கப்படாமலே இருக்கும். அப்ப எங்களுக்கு அதைப் பத்தித் தகவல் கொடுப்பாங்க. நாங்க எங்க அமைப்பில இருந்து போயி எங்களால முடிஞ்ச அளவுக்கு பணம் திரட்டி ஒரு நாகரீகமான சடங்கு செஞ்சு அவங்களுக்கு இறுதி மரியாதை செய்து அனுப்புவோம்" என்றார்.

"அப்படிச் செய்யும் போது பெரும்பாலான சமயங்களில் உதவி கிடைச்சுடும். ஆனால் உதவி கிடைக்காத நாட்களில் சந்திரகாந்தனுக்கு ஃபோன் பண்ணினா உடனடியா அவர் அந்த இறுதிச் சடங்குக்கு வேணுங்கற தொகையைக் கொடுத்துடுவாரு. குறைந்தது மாதத்தில் இரண்டு மூன்று முறையாவது அந்த மாதிரி அவர் செலவு செய்வார்!" என்றார்.



சந்திரகாந்தன் லேசாகப் புன்னகைத்த படி இருந்தான். "இதுல என்னங்க இருக்கு? எல்லா மனிதர்களுக்கும் சில உரிமைகள் இருக்கு. கௌரவமாய் இந்த உலகத்தை விட்டுப் போற உரிமையையாவது அவங்களுக்கு நாம கொடுக்கலாமே?" என்று மிகவும் அடக்கமாகவே சொன்னான். அடுத்ததாக அந்த உடன் இருந்த ஆள் மாறி வேறு ஒரு சிஸ்டர் வந்தார்.

"நாங்க ஒரு எழுபது குழந்தைகளை வச்சு ஒரு அநாதை விடுதி நடத்தறோம். எங்க அநாதை விடுதிகளில் பெரும் பாலான நாட்கள் யாராபவது ஃபுட் ஸ்பான்சர் பண்ணிடு வாங்க. அப்படி ஏதாபவது ஒரு நாள் எங்களுக்கு உணவுக்கு கிடைக்கலைன்னா உடனே நாங்க சந்திரகாந்தன் சாருக்கு ஃபோன் பண்ணுவோம். அவர் ஒண்ணு தான் பணம் கொடுத்து அன்றைக்கு உணவுச் செலவை ஏத்துக்குவாரு. இல்லைன்னா அவங்க ஃப்ரெண்ட்ஸ் யாரையாவது ஏற்பாடு செஞ்சுடுவாரு. குறைஞ்சது மாசத்துக்கு நாலைந்து நாளாவது அவர் எங்களுக்கு ஹெல்ப் பண்ணிடறாரு" என்றாள்.

இப்படியே இரண்டு மூன்று தொண்டு நிறுவனங்கள் அவனைப் பற்றிச் சொன்னார்கள்.

சம்யுக்தாவிற்கு தன்னையும் மீறி ஒரு பெருமிதம் தோன்றியது. கொஞ்ச நாட்கள் என்றாலும் கூட தன் மனம் ஒன்று லேசு பாசான ஆளிடம் சென்று விடவில்லை. நெஞ்சில் ஈரம் படைத்த ஒரு மனிதரிடம் தான் சென்றிருக் கிறது. என்று அவள் பெருமையாக எண்ணிக் கொண்டாள்.

ஒரு பத்து நிமிடங்கள் அந்தப் பேட்டி தொடர்ந்தது. அதற்குப் பிறகு சந்திரகாந்தன் பேட்டியாளருக்கு நன்றி சொன்னான்.

''ஆக்சுவலா நீங்க இந்தப் பேட்டி கேட்டப்போ நான் ஒத்துக்கக் கூடாதுன்னுதான் நினைச்சேன். ஆனா நீங்க ஒரு கருத்து சொன்னீங்க. இது உங்களோட புகழைப் பரப்பறதுக்கான பேட்டி இல்லை. உங்களைப் பார்த்து நாலு பேர் மோட்டிவேட் ஆகி அவங்களும் தங்கள் பங்குக்கு ஏதாவது செய்யனும் அப்படிங்கற எண்ணத்தை உருவாக்கணுங்றதுக்காகத்தான்னு இந்தப் பேட்டியை நீங்க கேட்டீங்க. அதுக்காகத்தான் நான் ஒத்துக்கிட்டேன். நன்றி!'' என்று முடித்தான்.

அவனுடைய விளக்கம் சம்யுக்தாவிற்கு மிகவும் வித்தியாசமாக இருந்தது. இதெல்லாம் எதற்காக செய்கிறார். ஒரு வேளை தனக்குச் செய்த துரோகத்திற்காகவா? எங்கேயோ ஏதோ இடிக்கிறது.

இத்தனை நல்ல உள்ளம் படைத்த ஒரு மனிதன் எப்படி தனக்கு துரோகம் செய்திருக்க முடியும். தன் மனத்தை எப்படி குத்திக் குதறி கிழித்துப் போட்டிருக்க முடியும் என்று எண்ணும் போது பல நாட்களுக்கு பிறகு அவள் கண்களிலே கண்ணீர் பிறந்தது.

நல்ல வேளையாக அம்மாவும் அப்பாவும் இருக்க வில்லை. இருந்தாலும் தன்னுடைய அறைக்குப் போய் கதவைத் தாளிட்டு விட்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

''சந்திராகாந்தன் நீங்க என்ன செய்திருக்கீங்கன்னு உங்களுக்கு தெரியுதா? என் மனசைக் கசக்கிப் போட்டுட்டீங்க



அப்படீங்கறது அது மட்டுமில்ல அது வேறு யாருக்கும் உபயோகப்படாதமாதிரி அதை ஒண்ணுக்கும் இல்லாத மாதிரி ஆக்கிப் போட்டுட்டீங்களே?'' என்று எண்ணி எண்ணி அழுதாள். ஆனால் கூடவே இன்னொன்றும் அவளுக்கு உறுத்திக் கொண்டே இருந்தது.

தன்னைப் பார்த்த உடன் அவன் முகம் முழுக்க நிறைந்த வேதனை! முதலில் தன்னைப் பார்த்தவுடன் மகிழ்ச்சி. அதற்குப் பிறகு ஒரு தன்னிரக்கமான உணர்வு. ஒரு வேதனை, இதெல்லாம் அந்த முகத்தில் பிரதிபலித்தது. ஏதோ பேசணும்னு கேட்டாரே? பேசியிருக்கலாமோ?'' என்று தோன்றியது.

அவன் அன்றைக்கு பேசிய பொழுது உங்களோட பேச விரும்பவில்லை என்று சொல்லிவிட்டாலும் தன்னை மீறி ஒரு காரியம் செய்திருந்தாள். அவனுடைய எண்ணை தன்னுடைய செல்போனில் பதிந்து வைத்துக் கொண்டாள்.

செல்போனை எடுத்து அந்த எண்ணை மட்டுமே போட்டு பார்த்தாள்.

''ஏன்? என் வாழ்க்கை உங்களால் இப்படி புரட்டிப் போடப்பட்டது சந்திரகாந்தன்?'' என்று மனம் கேட்டது. இன்னும் என்னென்ன காத்திருக்கிறதோ என்ற கவலையும் அவளுக்குள்ளே எழுந்தது.

## அத்தியாயம் - 10

**மே**ஜையின் மேலே ஒரு பையை வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தாள் சம்யுக்தா. எதிரே தெரிந்த எண்களெல்லாம் அவள் கண்களுக்கு புலப்படவேயில்லை.

எண்ணம் வேறெங்கோ இருந்தது. இப்பொழுது கோயம்புத்தூருக்கு வந்து பழைய நினைவுகளையெல்லாம் நினைவிலேற்றிக் கொண்டோமோ என்ற ஒரு பயமும் ஒரு பக்கம் அவளுக்குத் தோன்றியது.

வந்த ஒரு வாரத்திற்குள்ளாக இரண்டு முறை அவனை சந்தித்தாகி விட்டது. திடீரென்று அந்த பழைய நினைவு அவளுக்கு வந்தது. இரண்டு பேரும் அதிகாலை நேரத்திலே மருதமலை பாதையிலே அதிலும் கார்கள் செல்லுகின்ற பாதையிலே ஒரு பக்கவாட்டு பாலம் ஒன்றின் மேல் அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

அங்கிருந்து பார்த்தால் மலை ஏறுகின்றவர்கள் படிகளிலே ஏறிக் கொண்டிருப்பது தெரிந்தது. சற்று நேரம் வேடிக்கை பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தார்கள். அவனோடு அந்த நேரத்திலே அங்கே அமர்ந்திருப்பது அவளுக்கு மிகவும் இன்பமாக இருந்தது. அவனுக்கும் அப்படித்தான் போல. அவன் அருகில் மவுனமாக அமரும் பொழுதே கிடைக்கிற அமைதி எல்லையற்றதாக இருந்ததை உணர்ந்து அப்படியே மவுனமாக அமர்ந்திருந்தாள்.

அவனுக்கும் அது தெரிந்தது போலும். சற்று நேரம் அமைதியாக அமர்ந்தவன், அவளை நோக்கித் திரும்பி சம்யுக்தா என்றான்.

'ம்' என்றாள் அவள்.

''எனக்கு நேத்து ஒரு கவிதை தோணுச்சு தெரியுமா?'' என்றான். அவள் களுக்கென்று சிரித்தாள். ''வேண்டாம். கவிதை பாவம். விட்டுடுங்க!'' என்றாள். அவன் செல்லமாக முறைத்தான்.



''ஏன்? எங்களுக்கெல்லாம் கவிதை வரக்கூடாதா?'' என்றான்.

''உங்களுக்குக் கட்டடம் வேண்ணா கட்ட வரலாம். கவிதை வருமான்னு தெரியலை?'' என்றாள் அவள்.

''சே! எவ்வளவு பெரிய அவமானம்?'' என்று அவன் வேடிக்கையாகக் கோபித்தான். அவள் அதற்கும் 'களுக்'கென்று சிரித்து விட்டு ''போனாப் போகுது. ரொம்ப ஏமாந்துடுவீங்க. சொல்லுங்க, கேட்கறேன்'' என்றாள்.

''சொல்லுவேன். ஆனா அடிக்கக் கூடாது'' என்றான் அவன்.

அவள் ஒருவிதமாக அவனைப் பார்த்தாள் ''அப்படின்னா கவிதை ஏதோ விவகாரமா இருக்கும் போல இருக்கே?'' என்றாள். அவன் தோளைக் குலுக்கினான்.

''தெரியாது. ஆனா எனக்கு இதுதான் கவிதையா வந்துச்சு சொல்லப் போறேன்.'' என்றான். அவளுக்குள் ஆர்வம் பொங்கியது ஆனாலும் முகத்தை ஏதோ போனால் போகிறது என்று கேட்பவர்கள் போல வைத்துக் கொண்டு ''சொல்லுங்க. காலங்காத்தால மாட்டியிருக்கேன். வேற வழி?'' என்றாள்.

அவன் அவளுடைய கிண்டலை கவனியாதவன் போல முகத்தை மிகவும் சீரியஸாக வைத்துக்கொண்டு தன் சட்டைப் பையில் இருந்து ஒரு காகிதத்தை எடுத்தான். ''இப்பவே சொல்லிடறேன். நேத்துத்தான் ஆரம்பிச்சேன். சின்னதா நாலு வரிதான் எழுதினேன். இன்னும் முடிக்கலை'' என்றான்.

"அப்பப் பரவாயில்லை. நாலு வரிதானா? சரி சரி" என்று இழுத்தாள் அவள்.

அவன் செல்லமாக அவள் காதை திருகி விட்டு தன்னுடைய கவிதையைப் படித்தான்.

'படமெடுத்தாடும் நாகம் - உன்
பரிச்சயம் தந்த ஸ்பரிசம்
நடனம் புரியும் மோகம் - தீர
பரிச்சயம் தரணும் தேகம்.

"எங்கே இன்னொரு தடவை சொல்லுங்க?" என்றாள் அவள். சொன்னான்.

அவள் அதில் சொல்லப்பட்டிருந்த செய்தியைப் புரிந்து கொண்டு முகம் சிவந்தாலும் "கொஞ்சம் ஓவர்தான்!" என்றாள்.

"நான்தான் சொல்லிட்டேனே. எனக்கு இதுதான் தோணுச்சு. எழுதினேன்" என்றான்.

ஆனால் குரல் கிறக்கமாக இருந்தது. அவள் ஒன்றும் பேசவில்லை. சற்று நேரம் தலையைக் குனிந்து கொண்டு விரலால் அந்தப் பாலத்தின் மேலே கோடு போட்டுக் கொண்டிருந்தாள்.

அவன் பார்வையில் கிறக்கம் ஏறியது. அவளை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே "என்ன ஒண்ணும் பதிலையே காணோம்?" என்றான்.

"இல்லை. யோசிச்சேன்" என்றாள்.

"எதை? கவிதையில நான் சொல்லியிருக்கிறதையா?" என்றான்.



அவள் வெட்கத்துடன் அவனை ஓரக்கண்ணால்பார்த்து விட்டு "அடி வாங்குவீங்க!" என்றாள்.பிறகு

"நான் ஒண்ணும் அதை யோசிக்கலை" என்றாள்.

"வேற என்னத்தம்மா யோசிச்சே?" என்றான் அவன்.

"இல்லை. இதிலே நிறைய சமஸ்கிருத சொற்கள் இருக்கு. அதைத் தமிழ்ல எழுதியிருக்கலாமில்லே? தமிழ் படுத்தியிருக்கலாம்" என்றாள்.

அவன் மலைத்துப் போனவனாக பார்த்து விட்டு லேசாக ஒரு சிரிப்பு சிந்தியபடி "படுத்தியிருக்கலாம் ஏற்கனவே நீ படுத்தறது பத்தாதா?" என்றான்.

அவள் மறுபடியும் அவனை வெட்கத்துடன் முறைத்தாள். "உங்களுக்கு முடியலைன்னு சொல்லுங்க. நான் வேண்ணா தமிழ் படுத்தட்டுமா?" என்றாள்.

அவன் மறுபடியும் குரலில் ஒரு விதமான கிறக்கம் இழையோட 'படுத்து! படுத்து!' என்றான்.

அவள் செல்லமாக அவன் தோளில் மறுபடியும் ஒரு அடி வைத்தாள். அவன் சிரிப்புடன் திரும்பி 'ஏய், நிஜமாதான் சொல்லு' என்றான்.

அவள் சொன்னாள்.

படமெடுத்தாடும் நாகம் - என்
பக்கம் நின்றவுன் தொடுகை
நடனம் புரியும் மோகம் - தீர
நட்சத்திரமே தாஉன் தொடுகை

என்றாள்.

அவன் கண்களை அகல விரித்து அவளைப் பார்த்தான். ''சூப்பர்!'' என்றான்.

''அதான். நீங்க கவிதையை அலங்கோலமாத் தந்தீங்க. நான் அதை அழகான கோலமா மாத்திட்டேன்.'' என்றாள.

''அதாவது தமிழ் படுத்தறேன்னுட்டு என்னைப் படுத்தறே!'' என்று சிரித்தான்.

அவன் பார்வை மாறியது. அந்தப் பார்வையை எதிர்கொள்ள முடியாமல் அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

''இன்னும் எத்தனை நாளைக்கு இந்தப் பாடோ தெரியலையே? இப்படியே பாட்டெழுதி பாட்டெழுதி நீ படுத்தறதையெல்லாம் தாங்கிட்டுப் படுத்தா தூக்கம் வரமாட்டேங்குது!'' என்றான்.

''இப்ப ரொம்ப சிலேடையாக பேசறீங்க!'' என்று சிரித்தாள் அவள்.

''என்ன பண்றது? பேச்சிலதான் எல்லாத்தையும் தீர்த்துக்கனும்!'' என்றான் அவன்.

''ஹலோ! சும்மா இருக்க மாட்டீங்களா?'' என்று அவள் எழுந்து நடக்க அவன் பின்னோடு ''ஏய்! ஏய்! நான் வேடிக்கைக்குத்தான் சொன்னேன்?'' என்று வர அவள் திரும்ப முறைத்துக் கொண்டு நின்றாள்.

டெலிபோன் மணி ரிங் ரிங் என்று ஒலித்த நேரத்தில் ஒரு நிமிடம் குலுங்கி அதிர்ந்தாள். அத்தனையும் பழைய நினைவு.

ரிஸிவரை எடுத்து காதுக்குக் கொடுத்தாள் அது இன்டர் காம். ''ஏம்மா சம்யுக்தா? கொஞ்சம் என் கேபினுக்கு



வர்றியாம்மா, ஒரு முக்கியமான கெஸ்ட் வந்திருக்காங்க'' என்றார் எம்.டி.

எம்.டி. சாமிநாதன் அவளுக்கு ஒரு தந்தையைப் போல அவளை மிகவும் அன்பாக வைத்துக் கொள்ளுவார்.

அவளைப் பற்றி ஏற்கெனவே இருந்த அலுவலகத்திலே கேட்ட விஷயங்களைக் கொண்டு அவளைப் பற்றி அனுமானித்திருந்தார். வந்த ஒரு வாரத்திலேயே அவளுடைய ஆக்கத்திறனை, கிரியேட்டிவிட்டியை புரிந்துகொண்ட வராக அவளை மிகவும் மதித்தார்.

''இதோ வர்றேன் சார்!'' என்று சொல்லி விட்டு அவள் எழுந்து அவருடைய அறைக்குப் போனாள்.

அவருடைய கேபினில் அவருடைய சுழல்நாற்காலிக்கு நேர் எதிராக யாரோ அமர்ந்திருந்தார்கள். அவளுக்கு சற்றே பரிச்சயமானாற்போல இருந்தது. அவள் எம்.டி.க்கு முன்னால் இருந்த பெரிய மேஜையினுடைய பக்கவாட்டில் போய் நின்றாள்.

''சம்யுக்தா, இப்படி வந்து உட்காரு!'' என்றார் அவர் டேபிளுக்கு அந்தப் புறமாக இருந்த சேரைக் காட்டி.

அவள் திரும்பியவுடன் ஒரு நிமிடம் அதிர்ந்து நின்றாள்!

அங்கே அமர்ந்திருந்தது சந்திரகாந்தன். அவள் அவனிடம் எந்த விதமான உணர்ச்சியைக் காட்டுவது என்று முடிவெடுக்கமுடியாமல் திணறும் அந்த இடைவெளிக்குள்ளாக சாமிநாதன் அவளுக்கு அவனை அறிமுகப்படுத்தினார்.

''அம்மா இவரு சந்திரகாந்தன். கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி வச்சிருக்காரு. பெரிய தொழில் அதிபரும்மா. ஒரு முக்கிய

மான விஷயத்திற்காக வந்திருக்காரு'' என்றவர் ''ஏம்மா நம்ம அந்த டிரஸ்ட்ல இருந்து டொனேஷனெல்லாம் கொடுக்கிறோமே அந்த ஃபைலெல்லாம் எடுத்துட்டுத் தானே வந்திருக்கே?'' என்றார். அவளை அழைத்த பொழுதே அதை எடுத்து வருமாறு சொல்லியிருந்தார்.

அவள் சந்திரகாந்தனுக்கு ஒரு வணக்கம் செய்தாள். அவனும் கையைக் குவித்தான். பலத்திற்கு ஒன்றுமே கிடைக்காதவள் போல அந்த பைலை இறுகத் தன் மார்போடு சேர்த்துப் பிடித்துக் கொண்டு அவன் அமர்ந்திருந்த இருக்கைக்கு இடது புறமாக போய் அமர்ந்தாள்.

''அம்மா இவரு நம்மகிட்ட ஒரு உதவி கேட்டு வந்திருக்காரு!'' என்றார்.

அவள் ''சொல்லுங்க சார்!'' என்பது போல அவரைப் பார்த்தார்.

''இவரும் நிறைய செய்யறார்மா. ஆனா ஏதோ பெரிய அநாதை விடுதிக்கு நம்ம டிரஸ்ட்ல இருந்து ஏதாவது செய்ய முடியுமான்னு கேட்கறாரு. இப்பதான் புதுசா அந்த அநாதை விடுதி கட்டிட்டு இருக்காங்க. நூறு குழந்தை களுக்கு மேல பராமரிக்கப் போறாங்களாம். அதுவும் பெண் குழந்தைங்களாம்!'' என்றார்.

''ஓ...!' என்றாள் அவள். ''அந்த அமைப்புக்காரங்க வந்து கேட்டா பெரிய ரெஸ்பான்ஸ் இருக்காதுன்னு கம்பெனி லன்னு இவரே வந்திருக்காரு. சந்திரகாந்தன் வந்து கேட்டா யாராவது இல்லைன்னு சொல்ல முடியுமாம்மா? என்று சிரித்தார்.



அவள் மரியாதைக்காக அவனைப் பார்த்து புன்னைகைத் தாள்.

அவனும் அவளைப் பார்த்து ஒரு புன்னகையை உதிர்த் தான்.

இவளுக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. தான் இங்கே வேலை செய்கிறோம் என்று தெரிந்து வந்திருக்கிறாரா என்ற சந்தேகம்.

ஆனால் அதை எப்படி கேட்பது என்று எண்ணியவளாக திரும்பி தன்னுடைய எம்.டி.யைப் பார்த்தாள். ''ஆமாம் சார். இவரு பண்ற சர்வீஸ் பத்தியெல்லாம் கேள்விப் பட்டிருக்கேன்'' என்றாள்.

''ம்ஹூம்?! எப்படி?'' என்றார் எம்.டி.

''நேத்து கூட டி.வி. நியூஸ்ல வச்சாங்க சார். பார்த்தேன்'' என்றாள்.

''ஆமாமா, ஃப்ரெண்ட்ஸ் கூட ரெண்டு மூணு பேர் சொன்னாங்க''

''அப்படியெல்லாம் இல்லை சார். அது ஒரு மோட்டி வேஷன்கறதாலதான் ஒத்துக்கிட்டேன். எனக்கு இந்த மாதிரி விளம்பரம் பிடிக்கறதில்லை'' என்றான் சந்திர காந்தன்.

''சார், உங்களை மாதிரி இருக்கறவங்க ஒரு பெரிய தொகையா கொடுத்தீங்கன்னா அதையே மத்த கம்பெனி களிலெல்லாம் சொல்லி இன்னும் கொஞ்சம் பெரிய தொகையா கறந்துடுவேன் சார்!'' என்றான் சந்திரகாந்தன்.

''கறந்துடுவீங்க. யூ ஆர் குட் அட் இட். உங்க கிட்ட பேசினா டொனேஷன் கொடுத்துத்தான் ஆகணும் தெரியாதா?'' என்றவர். ''ஏம்மா ஒரு டு லாக்ஸுக்கு செக் போட்டுட்டு வந்திடுங்க!'' என்றார்.

சம்யுக்தா அதிர்ந்து போனாள். 'சார்!' என்று இழுத்தாள்.

''சந்திரகாந்தன் வந்து ஒரு விஷயத்துக்காக நிக்கறார்னா அது பக்காவா இருக்கும்னு அர்த்தம்மா. நம்ம கொடுக்கிற ரெண்டு லட்சம் ரூபாய் சரியான இடத்துக்கு சரியான முறையில போய்ச் சேர்ந்து சொஸைட்டிக்கு பயன் படுங்கறதுல எனக்கு நம்பிக்கை இருக்கு. போம்மா போய் செக் எழுதிட்டு வா'' என்றார்.

அவள் செக் புக்கை எடுத்துக் கொண்டு வந்து அங்கேயே அமர்ந்து எழுத ஆரம்பித்தாள்.

''அப்புறம் சந்திரகாந்தன் எப்படிப் போயிட்டிருக்கு? நான் கூட இன்னொரு யூனிட் போடலாம்னு இருக்கேன். கன்ஸ்ட்ரக்ஷன் நீங்க தான் பண்ணித் தரணும்'' என்றார் எம்.டி. சாமிநாதன்.

''ஓ.கே.சார் கண்டிப்பா'' என்றான் அவன்.

திரும்பியவர் ''அடடா! இந்தப் பெண்ணை நான் உங்களுக்கு அறிமுகப்படுத்தலை இல்ல. இப்பதான் நம்ம கன்ஸர்னுக்கு வந்து ஒன் வீக் ஆச்சு. ஒன் வீக்லயே ரொம்ப கெட்டிக்கார பொண்ணுன்னு நிருபிச்சுட்டாப்ல. கிட்டத்தட்ட என்னோட பர்சனல் அசிஸ்டெண்ட் மாதிரி அப்பாய்ண்ட் பண்ணியிருக்கேன்னா பார்த்துக்கங்களேன்''

''அப்படியா சார்!'' என்றான். அவன் முகத்திலும் ஒரு பெருமிதம் தோன்றி மறைந்தாற் போல இருந்தது.



''சந்திரகாந்தனை என்னம்மா நினைச்சே? கோயம் புத்தூருடைய மோஸ்ட் எலிஜிபல் பேச்சுலர்'' என்று 'ஹஹஹா' என்று சிரித்தார் சாமிநாதன்.

'சார், ப்ளீஸ்!' என்று அவன் வெட்கப்பட அந்த செய்தி அவளுக்கு முழுமையாக இறங்க அவள் திகைத்துப் போய் ஒரு நிமிடம் அமர்ந்து விட்டாள்.

## அத்தியாயம் - 11

சம்யுக்தா எங்கோ கனவில் நடப்பது போலத்தான் நின்றுகொண்டிருந்தாள். சற்று நேரம் கலகலப்பாகப் பேசிக்கொண்டிருந்து விட்டு சந்திரகாந்தன் கிளம்பினான். அவனை வாயில் வரையிலும் சென்று வழியனுப்பினார் எம்.டி.சாமிநாதன்.

மரியாதைக்காக அவரோடு கூட அவளும் செல்ல வேண்டியிருந்தது. எப்படி அவனிடம் பேசினோம் என்றே அவளுக்குத் தெரியவில்லை.

எம்.டி.சாமிநாதனிடம் அவன் பேசிக் கொண்டிருந்த போது இடையிடையே திரும்பி அவளிடமும் ஏதோ கேள்விகள் கேட்டான்.அவளும் தகுந்த விதமாகத்தான் பதில் சொன்னாள். ஆனால் எப்படித்தான் சமாளித்தாளோ தெரியவில்லை. திரும்பவும், சாமிநாதனுடன் அவருடைய அறைக்குப் போனார்கள்.

''உட்காரும்மா!'' என்றார் சாமிநாதன். உட்கார்ந்தாள்.

''இப்படி ஒரு பையனை பார்க்கவே முடியாதும்மா. அவ்வளவு அருமையான பையன். ரொம்ப கெட்டிக்காரன்.

ரொம்ப இளகின மனசு. அதுவும் ப்ரெண்ட்சுக்குன்னா உயிரைக் கொடுத்துட்டு உதவி செய்வான். ஆனா பாரும்மா அவன் வாழ்க்கையில என்ன பிரச்சினையோ தெரியலை. கல்யாணத்துல இன்ட்ரஸ்ட் காட்டவே மாட்டேங்கறான்னு அவங்க அப்பா நேத்து கூட எனக்கு ஃபோன் பண்ணி ரொம்ப கம்ப்ளெயின்ட் பண்றாரு. "முப்பத்திரண்டு ஆச்சு.ஏதோ ஒரு பொண்ணை பார்த்து சரின்னாகூட போதும் கல்யாணம் பண்ணி வச்சுடலாம். அவ்வளவு ஏம்மா ஒரு தூணைக் காட்டி இதான் எனக்கு பிடிச்சிருக் குன்னா கூட நான் கல்யாணம் பண்ணி வச்சிடுவேன்னு அவங்க அப்பா புலம்பறாரு நேத்து கிளப்புல"

அவள் ஒரு அரைச் சிரிப்போடு அதையெல்லாம் கேட்டுக் கொண்டாள்.

எம்.டி. சாமிநாதன் திடீரென்று நினைவு வந்தாற்போல "நான் இதையெல்லாம் போய் உன்கிட்ட சொல்லி கிட்டிருக்கேன்பாரு. போர் அடிக்கிறேனாம்மா?" என்றார்.

"இல்லை சார்!" என்றாள் அவள் மறுபடியும் அசடு வழிந்தபடி.

"சரிம்மா, நீ போய் உன் வேலையைப் பாரு!" என்றார்.

விட்டால் போதும் என்று தன்னுடைய கேபினுக்கு ஓடி வந்தாள் சம்யுக்தா. மனம் பெரும் குழப்பத்தில் ஆழ்ந்தது.

'மோஸ்ட் எலிஜிபல் பேச்சுலர்' என்ற வார்த்தைகள் அவள் காதில் தேனாய் வந்து விழுந்தன என்றால் அதே பேச்சலர் தானே தம் கல்யாணம் சாத்தியமில்லை என்று சொல்லி விட்டான் என்ற வேதனையும் அவளுக்குள் எழுந்தது.



'இது என்ன? சுத்தமாகப் புரியவேயில்லை. இரண்டு நாட்களுக்கு முன்புதான் அந்தப் பெண் தன்னுடைய காரிலே ஏறி அவனுடைய வீட்டு விலாசத்தையே தன்னிடம் சொல்லி அவர்கள் வீட்டு தெருமுனையிலே இறங்கிப் போகிறாள். ஒரு வேளை இவர்கள் வீட்டில் குடியிருப்ப வளாக இருக்குமோ? ச்சே ச்சே குடியிருப்பவளாக இருந் தால் அது எப்படி முடியும்? ஷாப்பிங் சென்டரிலே அவனோடு வந்தாளே? கூட இரண்டு குழந்தைகள் வேறு!" வெறுமையாகத் தன் இருக்கையிலே அமர்ந்து கொண்டாள்.

என்னவோ புரியவில்லை என்று அவளுக்கு வேதனை பொங்கியது.மனதை அடக்குவதற்குள் பெரும் பாடாகப் போய் விட்டது. சட்டென்று முந்தைய நாள் முடிக்க வேண்டியிருந்த ஒரு ப்ளானை எடுத்து கையிலே வைத்துக் கொண்டாள்.

தான் போய் விட்டிருந்த அந்த வீட்டை மனதிலே வைத்துக் கொண்டு அதற்கான இன்டிரீயர் டிசைனிங் எப்படி இருக்க வேண்டும் என்பதிலே மனதை செலுத்த ஆரம்பித்தாள்.

ஒரு அரை மணி நேரம் போயிருக்கும். மீண்டும் எம்.டி. சாமிநாதன் அவளை இன்டர்காமிலே அழைத்தாள்.

'சார்!' என்றார். 'அம்மா, மறுபடியும் ஒரு வேலை வந்திருக்கும்மா. கொஞ்சம் வர்றியா?' என்றார் அவர்.

இந்தப் பத்து நாட்களுக்குள்ளாகவே அவன் அவரிடம் ஒரு தந்தையைப் போன்ற ஒரு மதிப்பு, பிரியம் வைத்திருந்தாள். அவரும் அதைப் புரிந்து கொண்டாரோ

என்னவோ அவளை உரிமையாகப் பெயர் சொல்லியே அழைப்பார்.

ஆரம்ப காலத்தில் 'வாங்க, போங்க' என்று பேசும் பொழுது அவளுக்கு கூச்சமாக இருந்தது. ''சார்! நீங்க என்னை வா போன்னே சொல்லலாம்'' என்றே சொல்லி விட்டாள்.

உடனே அவர் ''எப்படா இப்படி செல்லுவேன்னு ஆசையா இருந்தது. நமக்குப் பெண் குழந்தை இல்லம்மா. அதனால உன்னை மாதிரி ஸ்மார்ட்டான பெண் குழந்தையைப் பார்த்தா ஒரு பிரியம்'' என்றார் அவர்.

அவள் நெகிழ்ந்து போய் அவரை அன்புடன் பார்த்தாள். ''அப்பா!'' என்று அழைக்காத குறைதான். என்ன இருந் தாலும் அவர் ஒரு எம்.டி. அட்வான்டேஜ் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று நினைத்துக் கொண்டாள்.

அவரும் அதை புரிந்து கொண்டவர் போல அவளை மட்டும் பேரைச் சொல்லி 'வா, போ' என்று பேசுவார்.

''என்னம்மா, மறுபடியும் பிரச்சினைம்மா, உள்ள வர்றியா?'' என்றவுடனே அவள் எழுந்து போனாள்.

''அம்மா, இந்த சந்திரகாந்தன் ஆஃபீஸ்ல ஏதோ பியூனோ யாரோ கூறு கெட்ட பசங்க அந்த செக் மேல இங்கைக் கொட்டிட்டாங்களாம் அந்த செக்கை யூஸ் பண்ண முடியாது போல இருக்குன்னு ஃபோன் பண்ணி னாரு. திருப்பி நான் வரட்டுமா? அப்படின்னாரு. ஆனா ஏதோ ஒரு மீட்டிங்ல வேற இருக்கேன்னாரு. ஏம்மா இஃப் யூ டோண்ட் மைன்ட் நீ கொண்டு போய் கொடுத்துட்டு வந்துடறியா?'' என்றார்.



சம்யுக்தாவிற்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. 'சார், அது வந்து.....!'' என்று இழுத்தாள்.

''என்னம்மா நீ? கார் கொடுக்கறேன். போயிட்டு வாம்மா. ஒரு பெரிய நல்ல காரியத்துக்கு பயன்படுத்தப் போற தொகை. நீ போயிட்டு வந்தேன்னு வச்சுக்கோயேன் அதுல எனக்கு நூறு சதவீதம் புண்ணியம் கிடைக்கும்னா உனக்கு ஒரு டென் பர்சன்ட் கொடுத்திடறேம்மா!'' என்றார் அவர்.

தன்னையும் மீறி அவள் சிரித்து விட்டாள். ''சார், ஒண்ணு சொல்லட்டா?'' என்றாள் அவள்.

''சொல்லும்மா'' என்றார் அவரும் கண்களில் சிரிப்புடன். ''எப்படியோ காரியத்தை சாதிச்சடறீங்க சார்!'' என்றாள் அவள். கலகலவென்று சிரித்தார்.

''சரிம்மா, நீ வேற ஒரு செக் போட்ரு. மறக்காம அந்த கேன்சல்ட் செக்கை வாங்கிட்டு வந்திடும்மா!'' என்றார்.

''சரிங்க சார்'' என்றவள், உடனே போய் டைப் செய்து எடுத்துக் கொண்டு வந்தாள்.

''நான் டிரைவர் இராமுகிட்ட சொல்லியிருக்கேன். போயிட்டு வந்துடு'' என்றவர் கைக் கெடிகாரத்தைத் திருப்பிப் பார்த்து விட்டு '' அட ஆமா! ஒன் அவர் தான் இருக்கு. நீ போயிட்டு வர்றதுக்கே சரியா இருக்கும். சரிம்மா நீ இதை குடுத்துட்டு அப்படியே கூட வீட்டுக்கு போய்க்கோ''என்றார்.

''இல்லை சார்... அந்த பைல் ஏதோ'' என்று இழுக்க 'நாளைக்கு பார்த்துக்கலாம்மா. அது ஒண்ணும் அவசரம் இல்லை'' என்றார்.

''சரி!'' என்றவள் அவளும் போய் தன்னுடைய தோள் பையை எடுத்துக் கொண்டு திரும்ப வந்து ''சார்!'' என்றாள்.

''என்னம்மா?'' என்றார்.

''புண்ணியத்துல பத்து பர்சண்ட். மறந்துடக்கூடாது!'' என்றாள்.

அவர் கலகலவென்று சிரித்தார். ''விடும்மா நூறு பிரசன்ட் புண்ணியத்தையும் உனக்கே கொடுத்துடறேன் என்றார்.

''அவ்வளவு பேராசையெல்லாம் எனக்கு இல்லை சார். பத்து பர்சண்ட் ஓகே'' என்று சொல்லிவிட்டு அவருடைய அறையை விட்டுப் போனாள்.

அவர் குறுகுறுவென்று அவளைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவள் அந்தப் பக்கம் போன உடனே டெலிபோனை எடுத்து காதுக்குக் கொடுத்து விட்டு ''சந்திரகாந்தன் நம்மாலே முடிஞ்ச சர்வீஸ். நான் பண்ணிட்டேன்பா, சம்யுக்தா செக் எடுத்துட்டு வர்றாப்ல'' என்றார்.

அவன் அந்தப் பக்கம் 'சார்!' என்றான். ''அட, அப்புறம், இவ்வளவு நேரம் எங்கிட்ட பேசினதுக்கு ஒரு பலன் இருக்கணுமில்லே'' என்று மேலும் ஐந்து நிமிடம் பேசிவிட்டு போனை வைத்தார்.

அந்தப் பக்கம் சந்திரகாந்தன் ஒரு நிமிடம் விதிர்த்துப் போய் விட்டான். பிறகு அவசர அவசரமாக தன் முன்னாலே இருந்த செக்கை எடுத்துப் பார்த்து விட்டுத் தன்னுடைய உதவியாளரை அழைத்து ''ஏம்பா, இங்க் பாட்டில் இருந்தா கொண்டா!''என்றான்.



அவன் இங்க் பாட்டிலைக் கொண்டு வந்து கொடுத்தவுடனேயே இவன் செய்த காரியத்தைப் பார்த்துவிட்டு அவனுக்கே ஆச்சரியமாகப் போய் விட்டது.

''இல்லப்பா, ஓரத்துல கொட்டிடுச்சு. அப்புறம் எதுக்கு? முழுக்க நனையட்டும்னு நனைச்சுட்டேன்'' என்று சிரித்து விட்டு அந்த செக் லீஃபை எடுத்து ஃபேனுக்கு கீழே வைத்து விட்டு ஒரு பேப்பர் வெயிட்டையும் எடுத்து அதன் மேல் வைத்தான்.

''நீ போகலாம்'' என்பது போல பியூனைப் பார்க்க அவன் அந்தப் பக்கம் நகர்ந்தான். சந்திரகாந்தன் முகத்தில் குறும்பும் எதிர்பார்ப்பும் குமிழியிட்டுக் கொண்டிருந்தது.

சற்று நேரத்தில் சம்யுக்தாவும் வந்து சேர்ந்தாள்.

ஏதோ ஒரு யோசனையில் மும்முரமாக ஆழ்ந்திருப்பவனை போல பாவனை செய்து கொண்டு அவன் அமர்ந்திருப்பது அறியாமல் அவள் தயக்கத்துடன் வந்து நின்று ''நான்உள்ளே வரலாமா?'' என்றாள்.

அவன் நிமிர்ந்து பார்த்து விட்டு ''ஓய் நாட்? வரலாமே?'' என்றான்.

அவள் உள்ளே வந்தாள். வரும் வழியிலேயே அவனுடைய அலுவலகத்தைப் பார்த்து பிரமித்துத்தான் போயிருந்தாள்.

ஏழெட்டு ஆண்டுகளில் மிகவும் வளர்ச்சி அடைந்திருக்கிறான் என்பது புரிந்தது. சாமிநாதன் காலையில் புகழ்ந்த போதே பெரிய உயரத்தை எட்டி விட்டான் என்பது புரிந்தது. பெருமையாகவும் பெருமிதமாகவும் இருந்தது. ஆனால் அதில் பங்கெடுப்பதற்குத் தனக்கு என்ன உரிமை இருக்கிறது என்ற வருத்தமும் இருந்தது.

இளமஞ்சள் சுடிதாரில் அவள் அழகாக நின்று கொண்டிருந்தாள்.

''வா, சம்யுக்தா!'' என்றவன் சட்டென்று திருத்திக் கொண்டு ''வாங்க சம்யுக்தா. உட்காருங்க!'' என்றான்.

அவள் எதிரில் போய் அமர்ந்தாள். ஒரிரு நிமிடங்கள் சங்கடமானஅமைதி நிலவியது.

''அப்புறம், என்ன சாப்பிடறே?'' என்றுகேட்டான்.

''இல்லை. ஒன்றும் வேண்டாம்!'' என்றாள்.

''நோ, நோ, ஃபர்ஸ்ட் டைம் எங்க ஆபீஸுக்கு வந்திருக்கிங்க. ஏதாவதுசாப்பிடணும்'' என்றவன் பியூனை அழைத்து ''நல்லா ஸ்டிராங்கா ஒரு காஃபி கொண்டு வாப்பா!'' என்றான்.

ஸ்டிராங் காஃபி தனக்கு பிடிக்கும் என்பதை மறக்காமல் வைத்திருக்கிறான் என்பதை உணர்ந்தவளாய் ஒரு நிமிடம் படபடப்புடன் அவனைப் பார்த்து விட்டு தலை நிமிர்ந்து கொண்டாள்.

''இப்பவும் அப்படியே தானே? டேஸ்ட் எதுவும் மாறலையே?'' என்றான் அவன்.

அவள் 'இல்லை' என்று தலையசைத்தாள். மனம் உணர்வுகளால் கனத்துக் கிடந்தது. வார்த்தைகளே வரவில்லை.

''ம். சொல்லுங்க, சாமி நாதன் சார் செக் கொடுத்தனுப்பிச்சாரா?'' என்றான்.

''ஆமாம்,'' என்று அவள் செக்கை எடுத்து நீட்டினாள்.



''நீங்க அங்க வேலை செய்யறீங்கன்னு தெரியாது''

அவள் சட்டென்று அவனை நிமிர்ந்து பார்த்து ''தெரிஞ்சு தான் வந்திங்களான்னு நான் கேட்கலையே?''என்றாள்.

''கேட்கலை. ஆனாலும் அந்தக் கேள்வி கண்ணிலே தெரிஞ்சுது'' என்றான் அவன்.

அவள் ஒன்றும் பேசவில்லை. ''செக்கை வாங்கிட்டீங்கன்னா..!'' என்று இழுத்தாள்.

அவன் செக்கை வாங்கிக் கொண்டான். ''அந்த கேன்சல்ட் செக் கண்டிப்பாத் தரேன். மறக்க மாட்டேன்'' என்றவன் அந்த செக்கைக் காட்டினான்.

அதில் உண்மையாகவே பேனா மை படிந்து கிடந்ததைப் பார்த்தாள். அதற்குள்ளாக காஃபி வந்தது.

''காஃபி சாப்பிடுங்க!'' என்றான். அவனுக்கும் ஒரு கப் வந்திருந்தது. அவனும் வாங்கிக் கொண்டான். அந்தக் காஃபியை குடிப்பதற்குள்ளாக அவளுக்குப் போதும் போதும் என்றிருந்தது.

''ஆஃபீஸ் நல்லா இருக்கா?'' என்றான் அவன்.

''நல்ல க்ரோத் தெரியுது!'' என்றாள் அவள்.

''அப்பா முழு சுதந்திரம் கொடுத்திட்டாங்க. அதனால என் இஷ்டத்துக்கு கொண்டு வர முடிந்தது'' என்றான் அவன்.

''ஒஹோ!'' என்று கேட்டுக் கொண்டாள் அவள்.

''தாங்க்ஸ் ஃபார் த காஃபி. காபி டேஸ்டா இருந்தது'' என்றாள் அவள்.

"நம்ம கேன்டீன்ல போடறது!" என்றான் அவன்.

அந்த நம்ம என்ற வார்த்தை ஒரு நிமிடம் அவளுக்குள் சிலிர்ப்பை ஓட்டியது. அப்படியெல்லாம் சிலிர்ப்புக்கு அவசியமில்லை என்பதுபோல் அவளை நடத்தியவனும் அவன் தானே என்று ஒரு வேதனையும் அவள் முகத்தில் ஒரு கணம் மின்னி மறைந்தது. இரண்டையுமே அவன் கவனித்தான்போலும். "இனிமேல் ஆஃபீஸ் போயிட்டு போகணுமா?" என்று கேட்டான் அவன்.

"இல்லையில்லை. சார் இப்படியே வீட்டுக்கு போகச் சொல்லிட்டார்" என்றாள்.

"அப்ப ஒரு இரண்டு நிமிஷம் பேசலாமா?!" என்றான்.

"ரொம்ப அவசியம்னா பேசலாம்" என்றாள் அவள்.

"ரொம்ப டென்ஷன்ல இருக்காதே சம்யுக்தா. ப்ளீஸ் பி ஃப்ரீ" என்றான்.

அவளுக்குள் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. "உன் பக்கத்தில் நான் ஃப்ரீயாக இருக்க முடியாத நிலையை ஏற்படுத்தியவனே நீதானே?" என்று கேட்க வேண்டும் போல இருந்தது.

"என்ன விஷயம் சொல்லுங்க?" என்றாள்.

அவன் அவள் முகத்தில் ஆழ்ந்து பார்த்து விட்டு "ம்ஹூம், இது உதவாது!" என்றான்.

உதட்டைப் பிதுக்கினான். அவள் வியப்பாக அவனைப் பார்த்தாள். "இப்படி முகத்தைக் கல்லு மாதிரி வச்சுட்டா நான் எப்படி சொல்றது?" அவன் கண்களில் குறும்பு கூத்தாடியது.



அவள் சட்டென்று எழுந்து கொண்டாள். "விளை யாடறதுக்கு எனக்கு நேரம் இல்லை" என்று அந்த கேபின் கதவை நோக்கிப் போனாள்.

அவன் சட்டென்று எழுந்து வந்து அந்த கேபினுக்கு முன்னால் அவளைத் தடுக்கிறாற்போல நின்றான்.

"ஒரே ஒரு விஷயம் சொல்றேன். கேட்டுக்கோ!" என்றான்.

அவள் நின்று அவனைப் பார்த்தாள். "எல்லா விஷயத்துக்கும் இன்னொரு பக்கம் இருக்கு!" என்றான்.

"ம்ஹூம், அப்படியா?" என்று அவள் கிண்டலாகக் கேட்டு விட்டு கதவை கோபமாகத் திறந்து கொண்டு வேகமாக வெளியே போனாள்.

அவள் அப்படிப் போவதை அவன் ஒரு வேதனையுடன் பார்த்துக்கொண்டு நின்றான்.

## அத்தியாயம் - 12

"எங்கடி கவனம் வச்சுகிட்டு இருக்கே?" என்று கடிந்து கொண்டாள் அம்மா.

சம்யுக்தா சடக்கென்று பூவுலகுக்கு வந்தாள். எதிரே அடுப்பில் தோசை தீய்ந்து கொண்டிருந்தது. அசடு வழிய அம்மாவைத் திரும்பிப் பார்த்தாள். "சாரிம்மா, ஏதோ ஆஃபீஸ் யோசனை"

"இதுக்குத்தாண்டி உன்னை அடுப்புகிட்டே வரவேண்டாம்னு சொல்றது!" என்றாள் சம்யுக்தாவின் அம்மா அன்னபூரணி.

"சரிம்மா, இனிமே கனமா ஊத்தறேன்!" என்று அவள் அந்த தோசையை கல்லில் இருந்து எடுப்பதற்கு முயற்சி செய்யும் பொழுது அவள் அம்மா அவள் கையைப் பிடித்துக் கொண்டாள். "வேண்டாண்டி. நீ தான் ஆஃபீஸ்லே ஒர்க் பண்ணிட்டு டயர்டா வர்றே. லீவ் அண்ணைக்கு நல்லா செய். இப்பப் போய் ரெஸ்ட் எடு. போ!" என்றாள்.

அவள் "சரிம்மா!" என்று முகத்தை ஒரு விதமாக வைத்துக் கொண்டு வெளியிலே வந்தாள்.

அன்றைக்கெல்லாம் அவளுக்கு ஒரே குழப்பமாக இருந்தது. "எல்லாவற்றிற்கும் இன்னொரு பக்கம் உண்டு!" என்று சொன்ன சந்திரகாந்தனின் வார்த்தைகளே காதில் ஒலித்துக் கொண்டிருந்தது.

"எதற்காக அப்படிச் சொன்னான்? அவன் தானே தன்னிடத்தில் வந்து இந்தத் திருமணம் நடைபெறாது" என்று சொன்னான். இப்பொழுதும் அவனே வந்து இன்னொரு விளக்கம் இருக்கிறது என்கிறானே.

அவளுக்குக் கோபமாக வந்தது. தன் கோபத்தை எல்லாம் டீபாயின் மேல் இருந்த ஒரு புத்தகத்தை எடுத்துப் பார்த்து விட்டு திரும்பவும் வீசி விட்டு சோஃபாவில் தொப்பென்று அமர்வதன் மூலமாக தீர்த்துக் கொண்டாள். அதே நேரத்தில் அவள் செல்ஃபோன் ஒலித்தது.

ஒரு வேளை சந்திரகாந்தனாக இருக்குமோ? என்று ஒரு பதட்டத்தோடுதான் செல்ஃபோனை காதுக்குக் கொடுத்தாள்.

"ஏண்டி, நான் மாலினி பேசறேன். இப்ப வீட்ல தான் இருக்கியா? நான் வரட்டுமா?" என்றாள்.



சம்யுக்தாவிற்கு மாலினி வந்தால் நன்றாக இருக்கும் போலத் தோன்றியது. "கண்டிப்பாக வாடி. எனக்குக் கூட உன் கூட பேசணும் போலத் தோணுது" என்றாள்.

"அப்ப சரி. இப்பவே வந்துட்டேன். இதோ வந்துட்டேன்" என்று உள்ளே நுழைந்தாள்.

"வெளியிலே நின்னுகிட்டுத்தான் ஃபோன் பண்ணி னியா," என்றாள் சம்யுக்தா.

"ஆமா! இங்கே வர்றதுக்கு நான் ஃபோன் பண்ணிட்டுத் தான் வரணுமா? எப்ப வேண்ணா வருவேன். நீ இருந்தாலும் வருவேன். நீ இல்லாட்டியும் வருவேன்" என்றாள்.

"சரிடிம்மா சரி!" என்று சிரித்தாள் சம்யுக்தா. ஆனாலும் அந்தச் சிரிப்பு அவள் கண்களுக்கு எட்ட வில்லை என்பதை கவனித்த மாலினி "என்ன?" என்பது போல் அபிநயம் செய்தாள்.

"ப்ச்சு" என்று உச்சுக் கொட்டினாள் சம்யுக்தா. மாலினி அவள் அருகிலே அமர்ந்து கொண்டு "அம்மா இங்கே ஒரு காஃபி கொடுங்க!" என்று அங்கே இருந்தே கத்தினாள்.

"லொள்ளுதானே?" என்றாள் சம்யுக்தா.

"யாரு மாலினியா? பேசிக்கிட்டிரு. வந்துடறேன்" என்ற அம்மா ஒரு நிமிடம் வெளியே வந்து "உன் ஃப்ரெண்டுக்கு என்னாச்சுன்னு கேளு? தோசையை ஊத்திட்டு என்னத்தையோ கனவு கண்டு தோசை பூராவும் தீஞ்சு போச்சு" என்று சொல்லி விட்டு உள்ளே போனாள்.

மாலினி அவளைத் திரும்பிப் பார்த்து "என்னடி ஆச்சு?" என்றாள்.

''அதை ஏன் கேட்கறே. நான் உன் கிட்ட பேசலாம்னு நினைச்சேன். சரி அம்மா காஃபி கொண்டு வருவாங்கல்ல, குடிச்சுட்டு வா! நாம வெளியில போகலாம் பேசலாம்'' என்றாள். அப்படியே செய்தார்கள்.

அவர்கள் வீட்டுக்கு அருகிலேயே ஒரு பார்க் இருந்தது. ஒரு ஐநூறு அடி தூரத்தில். ''அங்கே போகலாம்டி!'' என்றாள் சம்யுக்தா.

''சரி, வா!'' என்றாள் மாலினி.

அவர்கள் போய் ஒதுக்குப்புறமாக அமர்ந்தவுடனே தன் மனதில் இருப்பதைப் பூராவும் அவளிடம் கொட்டி விட்டாள்.

''ஏண்டி, ஆறு வருஷத்துக்கு முன்னாடி நானாடி இவருகிட்ட வந்து பிரியறேன்னு சொன்னேன். அப்ப வந்து கல்யாணம் பாசிபிலிட்டி இல்லைன்னு சொல்லிட்டு இப்ப வந்து துரத்தி துரத்தி வம்பு பண்றாருடி'' என்றாள்.

மாலினி நடந்தது முழுமையும் கேட்டுக் கொண்டு அமைதியாக அமர்ந்து விட்டாள். ''இல்லடி, எனக்கென்னமோ வம்பு பண்ற மாதிரி தெரியலை. எதையோ எக்ஸ்ப்ளெயின் பண்ண வர்றாருன்னு தோணுது'' என்றாள்.

ஒருவிதமான சங்கடத்துடன் சொன்னாள். ''இனிமே எக்ஸ்பிளெயின் பண்ணி என்னடி ஆகப்போகுது?'' என்று.

''என்னமோ ஆகணும்னு இருக்குடி? இல்லாட்டி இப்படி நடக்காது. உங்க எம்டி என்ன சொன்னாரு, மோஸ்ட் எலிஜிபல் பேச்சலர்னா?''

'ஆமா' என்றாள் சம்யுக்தா.



மாலினி சம்யுக்தாவின் கண்களை ஊடுருவிப் பார்த்தாள். ''சம்யுக்தா உன் நெஞ்சைத் தொட்டுச் சொல்லு. இன்னும் சந்திரகாந்தன் உன் மனசுல இருக்கார்தானே? அவரை அழிக்க முடியலைதானே?'' என்றாள்.

சம்யுக்தா வேதனை படிந்த முகத்தை திருப்பிக் கொண்டு சற்று நேரம் வேறு பக்கம் பார்த்தாள்.

பிறகு திரும்பி தோழியைப் பார்த்தாள். எப்பொழுதும் அவளிடம்தான் தன் மனத்தில் இருப்பதைக் கொட்டுவாள். ''உண்மையைச் சொல்லணும்னா?'' என்றாள்.

இழுத்து நிறுத்தினாள்.

மாலினி வாயைத் திறக்க வில்லை. ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்னால மறக்க முடியலைதாண்டி. அதுமட்டுமில்ல சந்திரகாந்தனைத் தவிர வேற யாரையுமே அந்த இடத்துல வச்சு என்னால பார்க்க முடியலைதான்'' என்றாள்.

மாலினி நீண்டதொரு பெருமூச்சு விட்டாள். ''உன்னுடைய காத்திருப்புக்குத்தான் பலன் கிடைச்சிருக்கும்னு நான் நினைக்கிறேன்'' என்றாள்.

சம்யுக்தா முறைத்தாள். ''என்னடி? திடீரென்று ஒரு நாளைக்கு ஏதோ நடக்காது நமக்குள்ளேன்னுட்டுப் போவாரு. ஆறு வருஷம் கழிச்சு நான் வந்ததுக்கு அப்புறம் தேடிக் கிட்டு வந்து மறுபடியும் விளக்கம் சொல்லுவாரு. உடனே ஐயா சாமி நான் உனக்காகத் தான் ஏங்கித் தவிச்சுட்டு இருந்தேன்னுட்டு கால்ல விழணுமா?'' என்றாள்.

மாலினி மெல்ல புன்னகைத்தாள். "அப்படியெல்லாம் சொல்லாதடி. இன்னொரு விளக்கம் இருக்குன்னு சொல்றாரில்லே அது என்னன்னு கேளேன். ஒரு வாய்ப்பு கொடுடி?" என்றாள்.

"என்னடி பெருசா? மறுபடியும் வந்து அவரு புரொபோஸ் பண்ற மாதிரியும் நீ வாய்ப்பு கொடுடின்னு சொல்லிட்டு இருக்கே?" என்றாள் சம்யுக்தா.

"தெரியலைடி. என்ன வேண்ணா நடக்கலாம். வாய்ப்புக் கொடு!" என்றாள்.

"அப்போ அந்தப் பொண்ணு?! என் கார்ல ஏறின பொண்ணு. அதே வீட்டு அட்ரஸ் சொல்லிட்டு இறங்கறா. அவளைக் கூட்டிட்டு அன்னைக்கு ஷாப்பிங் பண்ணிட்டு இரண்டு குழந்தைகளை வேற கூட்டிட்டுப் போனாரேடி. அது வேற விதமா இருந்துச்சேடி?" என்றாள் சம்யுக்தா.

சொல்லும் போதே அவளுக்கே கேவலமாக தோன்றியது.

மாலினி மறுபடியும் அவளை ஆழ்ந்து பார்த்தாள். "ஏன் சம்யுக்தா, நாம பழகின வரைக்கும் சந்திரகாந்தன் அப்படி நடந்துக்கறவர்ன்னு நினைக்கிறியா? அப்படியே இருந் தாலும் அந்தப் பொண்ணை தன் வீட்ல கொண்டு வந்து வைப்பாரா? என்னமோ இருக்குடி ஏதோ வேல்யுபிளான ரீசன் அவருகிட்ட இருக்குன்னு எனக்கு தோணுது"

சம்யுக்தா நீண்ட தொரு பெருமூச்சு விட்டாள். "சரி, என்னால முடிவெடுக்க முடியலை. என் கதையெல்லாம் உனக்குத் தெரியும். எப்பவுமே அறிவுரை சொல்லுவியே? நான் என்ன செய்யட்டும்?" என்றாள்.



மாலினி ஒரு நிமிடம் ஆழ்ந்து யோசித்து விட்டு "இரண்டு மூணு தடவை அவரா முயற்சி பண்ணிட்டாரு. இனிமே அவரு முயற்சி பண்ண மாட்டாருன்னு நினைக்கிறேன். நீ நாகரீகமா அவருக்கு ஒரு வாய்ப்புக் கொடு. அவரு சொல்ற விளக்கங்களை உன்னால ஏத்துக்க முடியுதான்னு பாரு. அப்புறமா முடிவு செஞ்சுக்கலாம்" என்றாள்.

சம்யுக்தா சற்று நேர யோசனைக்குப் பிறகு "சரிடி அப்படித் தான் பண்ணனும். வேற வழியில்லை" என்றாள்.

இரண்டு பேரும் எழுந்தார்கள். ஒரு நிமிடம் சம்யுக் தாவை ஆழ்ந்து பார்த்த மாலினி அவளுடைய இரண்டு கைகளையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டு "உனக்கு நல்லது நடக்கணும். நான் பார்த்த வரைக்கும் எல்லா ருடைய லைஃப்லயும் பொயட்டிக் ஜஸ்டிஸ்ன்னு ஒண்ணு இருக்குடி. இந்த ஆறு வருஷம் பட்ட வேதனைக்கு கண்டிப்பா பலன் இருக்கும்னு நினைக்கிறேன்"

"அது சரி, ஒரு வேளை கோயம்புத்தூர் வரலைன்னா. அப்ப என்ன பண்ணியிருப்பாராம்?"

"இந்தக் கேள்விக்கெல்லாம் அவருகிட்டதான் விடை கேட்கணும். ஆனா எனக்குத் தோணுது ஒரு வேளை இப்படி இருக்கலாம். நீ ஏதாவது செட்டில் ஆயிருந்தா எப்படி டிஸ்டர்ப் பண்றதுன்னு அவரு நினைச்சிருக்கலாம்"

சம்யுக்தா மாலினியை முறைத்தாள். "ஏண்டி அந்த மாதிரி காலை வாரி விட்டுட்டுப் போன மனுஷனுக்கு நீ இவ்வளவு சப்போர்ட் பண்றே? நீ ஏன் ஹை ரேன்ஜ்லே வச்சே அவரைப் பேசறே?" என்றாள்.

மாலினி சம்யுக்தாவை ஒரு விதமாகப் பார்த்து விட்டுச் சொன்னாள். "எனக்கு அதுதாண்டி புரியவே மாட்டேங்குது. இன்ஸ்பெக்ட் உனக்காக நான் கோபப்படணும். இன்பேக்ட் உனக்காக நான் அவருகிட்ட சண்டை கூட போடணும். ஆனா ஏனோ சந்திரகாந்தன் அந்த மாதிரி ஆளு இல்லைன்னு என் உள் மனசு சொல்லுதுடி. எனக்கே சொல்லும்பொழுது உனக்கு சொல்லாதா?"

சம்யுக்தா பதில் ஒன்றும் பேச வில்லை. "உனக்குக் கோபம் இருக்கு. அதனால அதுக்கு முன்னால எல்லாம் மறைஞ்சுடுதுன்னு நினைக்கிறேன். ஆனால் யாராக இருந்தாலும் ஒரு வாய்ப்புக் கேட்கும் பொழுது கொடுக்கணும்னுடி" என்றாள்.

"சரிடி, இதையே நூறு தடவை சொல்லிட்டே. கண்டிப்பா வாய்ப்புக் கொடுக்கறேன்" என்றாள்.

ஆனால், அதைச் சொன்னதற்குப் பிறகு சம்யுக்தாவின் மனத்தில் இருந்து ஒரு பெரிய பாரம் இறங்கினாற்போல இருந்தது. புதிதாக உற்சாகம் பொங்கியது.

"ஏண்டி?" என்று வார்த்தையுடன் இழுத்து நிறுத்தினாள்.

'சொல்லு' என்றாள் மாலினி.

"இவ்வளவு பில்டப் கொடுத்துட்டு கடைசியில அதே பொஸிஷன்லதான் இருக்கேன். என்னை நினைச்சுட்டு இருக்காதே. வேற யாரையாவது கல்யாணம் பண்ணுன்னு சொல்லுவாரோ?" என்றாள்.

மாலினி அதிர்ந்தாற்போல அவளைப் பார்த்தாள்.

"அப்படி இருக்குமோ?" என்றாள்.



"அப்புறம் எதுக்குடி அவருகிட்ட பேசணும்," என்றாள் சம்யுக்தா.

மாலினி நின்று அவளை முறைத்தாள். "இதோ பாருடி இதுவா இருக்குமா? அதுவா இருக்குமா? அப்படி இருக்குமா? இப்படி இருக்குமான்னு யோசிச்சு மண்டையைப் போட்டுக் குழப்பிக்கறதை விட பேசறது நல்லது"

"ஆமா அந்த ஒரு காரணத்துக்காகத்தான் ஒத்துக்கணும்" என்று பெருமூச்சு விட்டாள் சம்யுக்தா.

ஆனாலும், முடிவெடுத்ததற்குப் பிறகு மனம் அமைதி அடைந்திருந்தது. இரண்டு பேரும் சம்யுக்தாவின் வீட்டிற்கு வந்தார்கள்.

அம்மா அவளை விடவே இல்லை. "சாப்பிட்டுட்டுத் தான் போகணும்!" என்று வற்புறுத்தினாள்.

"நீங்களே அன்னபூரணி தாயாச்சே. நீங்க எங்களை சாப்பிடாம விடுவீங்களா?" என்று சிரித்துக் கொண்டே அம்மா வார்த்துக் கொடுத்த தோசையையும் சாப்பிட்டு விட்டுக் கிளம்பினாள்.

வாசல் வரை வந்து வழியனுப்பிய சம்யுக்தாவிடம் சொன்னாள் 'இன்னைக்கே பேசிடு' என்று.

"இப்பவா?, இந்த நேரத்திலா?" என்றாள்.

"ஆமாடி, பேசிடு. இல்லைன்னா உனக்கும் தூக்கம் வராது. எனக்கும் தூக்கம் வராது. பேசிட்டேன்னா எனக்கு கூப்பிட்டுச் சொல்லு" என்றாள்.

சம்யுக்தா தன்னையும் மறந்து நெகிழ்ந்து போனவளாக இருந்தாள். "தாங்க்ஸ்டி!" என்றாள்.

மாலினி கிளம்பிப் போனதற்குப் பிறகு எட்டரை மணி வரை என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தாள். எட்டரை மணிக்கு மேல் அவளுக்கு இருப்பு கொள்ள வில்லை. மொட்டை மாடிக்குப் போனாள். சந்திரகாந் தனுடைய எண்ணுக்கு அழைப்புக் கொடுத்தாள்.

அந்தப் பக்கம் சந்திரகாந்தனுடைய அழுத்தமான குரல் கேட்டது. "ஹலோ, நான் சந்திரகாந்தன் பேசறேன்!" என்று.

"நான்... நான் சம்யுக்தா பேசறேன்!" என்று தடுமாறினாள்.

"ஓ! சொல்லுங்க" என்றான்.

"உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்" என்றாள் இவள்.

"நான் இப்ப பிஸியா இருக்கேன். நானே உங்களை காண்டாக்ட் பண்றேன்," என்று பட்டென்று போனை வைத்து விட்டான்.

சம்யுக்தாவிற்கு கோபம் கோபமாக வந்தது. கிராமத்து பக்கம் ஒரு பழமொழி சொல்லுவார்கள். 'சிங்காரித்து மூக்கறுப்பது' என்று.

தன்னிடம் இரண்டு மூன்று முறைக்கு மேல் தொடர்பு கொண்டு விட்டு இப்பொழுது ரொம்ப பிஸியோ என்று கோபத்துடன் செல் போனை ஆப் செய்து விட்டு அமர்ந்து விட்டாள். மாலினி ஒன்பது மணிக்கு போன் செய்த பொழுது அவளிடம் கடுப்புடன் இதையே சொன்னாள். "சரிடி, கூப்பிடுவாராயிருக்கும்" என்று அவள் ஆறுதல் படுத்தி விட்டு ஃபோனை வைத்தாள்.

இரவு பத்தரை மணி வரை ஃபோன் வரவேயில்லை. பொறுத்துப் பார்த்து விட்டு படுக்கைக்குப் போனாள்.



## அத்தியாயம் - 13

பதினோரு மணி இருக்கும். அப்போதுதான் மெதுவாக கண் அயரப் போனாள்.

செல்ஃபோன் ஒலித்தது!

தூக்கக் கலக்கத்துடன் எடுத்துப் பார்த்தாள். சந்திரகாந் தனுடைய எண் வந்தது. என்ன செய்வது என்று யோசித்த வளாக எழுந்து தன்னுடைய அறைக் கதவை சாத்தி விட்டு ஃபோனைத் தன் காதுக்கு கொடுத்தாள்.

"ஐ ஆம் சாரி சம்யுக்தா. நான் ஒரு மீட்டிங்ல இருந்தேன். இப்பத்தான் முடிஞ்சது. இப்பப் பேசலாமா? என்றான்.

"ம்..." என்றாள்.

"சரி, சம்யுக்தா, நீங்க தான் சொல்லணும்" என்றான்.

சொல்லு என்று ஆரம்பித்தவன் நீங்க என்று மாறிக் கொண்டதை ஒரு கசப்பான புன்னகையுடன் கவனித்துக் கொண்டாள். பிறகு சொன்னாள் "இல்லை, நீங்க தான் என்னமோ இன்னொரு பக்கம் இருக்குன்னு சொன்னீங் களே?" என்றாள்.

"தாங்க்ஸ்" என்றான் அவன்.

"எதுக்கு?" என்றாள் அவள்.

"இல்லை. இன்னொரு பக்கமும் இருக்கக் கூடுமோ அப்படிங்கற நம்பிக்கையிலே கூப்பிட்டிருக்கியே? அதுக்கு" என்றான் அவன்.

மறுபடியும் அவன் ஒருமைக்குத் தாவி விட்டதை கவனித்துக் கொண்டாள்.

"பேசணும் சம்யுக்தா. நிறையப் பேசணும்" என்றான்.

"ஓஹோ, எப்போ?" என்றாள்.

"நீ எப்ப சொல்றியோ அப்ப. எங்க வரச் சொல்றியோ அங்க வச்சுப் பேசலாம்." என்றான்.

"பழையபடி மருதமலை...." என்று அவள் இழுத்தாள்.

"நோ நோ அங்கேயெல்லாம் வேண்டாம். ஏன்னா இப்ப உனக்குத் தெரியும். நானும் ஒரு கம்பெனி ஓனர் ஆயிட்டேன். நீயும் நல்ல பொசிஷன்ல இருக்கே. பழைய விளையாட்டுப் பிள்ளைங்க இல்லை. அதனால அங்க வச்சு வேண்டாம்" என்றவன் "எங்க கம்பெனி கெஸ்ட் ஹவுஸுக்கு வர முடியுமா?" என்றான்.

அவள் யோசித்தாள் "உங்க கெஸ்ட் ஹவுஸுக்கா?" என்று.

அவன் அந்தப் பக்கம் கசப்பாக சிரித்தான். "ஓ! அங்க வர்றதுக்கு விருப்பம் இல்லையோ?" என்றான்.

"இல்லையில்லை!" என்று அவள் இழுத்தாள்.

"ஓகே, வேண்டாம். நான் உங்க கம்பெனி கெஸ்ட் ஹவுஸுக்கே வரேன்" என்றான்.

"ஐய்யய்யோ, நீங்க எம்டி சார்கிட்டயெல்லாம்....." என்று பதட்டமாகச் சொன்னாள்.

அவன் அந்தப் பக்கம் ஒரு விதமாக சிரித்துக் கொண்டான்.

"இல்லையில்லை, நான் வேற மாதிரி சொல்லிக்கறேன். உன்னுடைய டைம் சொல்லு. வி வில் மீட்" என்றான்.



அவள் ஒத்துக் கொண்டாள். "சரி நாளைக்கு ஈவ்னிங்" என்றாள்.

அடுத்த நாள் சந்தித்துப் பேசுவதாக ஏற்பாடு செய்து கொண்டார்கள். அவளுக்கு அன்றிரவெல்லாம் உறக்கமே வரவில்லை.

மாலதிக்கு மெசேஜ் செய்தாள் "மாலை இரண்டு பேரும் சந்தித்துப் பேசுகிறோம்" என்று.

"குட்" என்று அவளும் திருப்பி அனுப்பியிருந்தாள்.

மறுநாள் மாலையும் வந்தது.

அவள் அலுவலகத்தை விட்டு புறப்படுகிற நேரம் எம்டி சுவாமிநாதன் அவளை அழைத்தார். "அம்மா, ஏதோ சோஷியல் சர்வீஸ் விஷயமா உன்னோட கோ ஆபரேஷன் கிடைக்குமா அப்படின்னு உங்கிட்ட பேசணும் அப்படின்னாரு சந்திர காந்தன். பெரிய ஸ்கீமாம் அது. அதைப் பத்தி பேசணுமாம். நம்ம கெஸ்ட் ஹவுஸ்லே வச்சே பேசச் சொல்லி பர்மிஷன் கொடுத்திருக்கேன்" என்றார்.

சம்யுக்தா சந்திரகாந்தனுடைய சாமர்த்தியத்தை மெச்சிக் கொண்டாள். "ஆமா சார், எங்கிட்ட கூட கேட்டாரு" என்று இழுத்தாள்.

"சொன்னான். சொன்னான். நீ வேண்ணா இன்னைக்கு நாலரை மணிக்கு அங்க போயிடறியா அம்மா?" என்றார்.

"சரிங்க சார்!" என்று அவள் கிளம்பினாள்.

பெருத்த எதிர்பார்ப்புடன் அவன் வருகைக்காகக் காத்திருந்தாள். சம்யுக்தா தான் முதலில் போயிருந்தாள். அதனால் காத்திருக்க வேண்டி வந்தது.

அவள் போய் அந்த ஹாலில் அமர்ந்த வுடனேயே போன் வந்தது. ''சம்யுக்தா, நான் ஆன் த வே. ஒரு சின்ன வேலை வந்திடுச்சு. அதனால ஒரு டென் மினிட்ஸ் ஹெல்ட் அப்'' என்றான். அதற்குள்ளாக அந்த கெஸ்ட் ஹவுசில் இருந்த பணி ஆட்கள் அவளுக்கு காபி, டீ எதுவும் வேண்டுமா என்று உபசரித்தார்கள்.

''இல்லை, ஒரு கெஸ்ட் வராங்க. வந்ததுக்கு அப்புறம் பார்த்துக்கலாம்'' என்றாள்.

சந்திரகாந்தனும் வந்தான். இரண்டு பேரும் சற்று நேரம் அமைதியாக அமர்ந்து கொண்டிருந்தார்கள். என்ன பேசுவது என்று தெரியவில்லை. பிறகு மெதுவாக அவன் ஆரம்பித்தான்.

''ஆறு வருஷம். ஓடிடுச்சு. எப்படி இருக்கே?'' என்றான்.

''நல்லாதான் இருக்கேன். சென்னையில நல்ல கம்பெனியில வேலை செஞ்சேன். நல்ல அனுபவம் கிடைச்சது. நல்லாதான் இருக்கேன்'' என்றாள்.

''ஐ ஆம் சாரி சம்யுக்தா ஃபார் ஆல் தட் ஹேப்பண்ட்'' என்றான்.

''நேரா விஷயத்துக்கு வர்றீங்களா?'' என்றாள் சம்யுக்தா.

அவன் கண்களில் குறும்பான ஒரு சிரிப்பு தோன்றியது. ''விஷயம் சொல்றதுக்காகத்தானே வந்திருக்கேன்?'' என்றவன் ஆரம்பித்தான்.

அவன் பேசப்பேச அவள் அதிலே ஆழ்ந்து போய் விட்டாள். அப்படி ஒரு கதையை சந்திரகாந்தன் அவளிடத்திலே சொல்லிக் கொண்டிருந்தான்.

* * *



அருணாச்சலம் தன்னுடைய காரை ஓட்டிக் கொண்டு வந்து அந்தக் காட்டுப் பாதையின் ஓரத்தில் நிறுத்தினான்.

''ச்சே, இந்தப் பார்ட்டி காரை வாங்கிக்குவாருன்னு நம்பி இவ்வளவு தூரம் காரை தூக்கிட்டு வந்தோம் பாரு'' என்று தன்னுடன் வந்த நண்பனிடத்திலே சொன்னான்.

''ஏன்யா நீ அங்க வந்து பார்க்கச் சொல்லியிருக்க வேண்டியதுதானே?'' என்றான் அவன்.

''இல்லைய்யா. பெரிய பார்ட்டி. இதுக்கு முன்னாடி எங்கிட்ட டீல் பண்ணியிருக்காப்ல. அவங்க கம்பெனிக்கு அவங்க ஒர்க்கர்ஸுக்குன்னு நிறைய டீல் பண்ணி யிருக்கேன். ஏன் அவருக்கே கூட பர்சனலா ஒரு காரு, செகண்ட் ஹாண்டுன்னு சொல்ல முடியாது, அப்படி ஒரு காரு நல்ல சீப்பான விலையில வாங்கிக்கொடுத்தேன்'' என்றான் அருணாச்சலம்.

''சரி விடு, ஒரு டீலிங் இப்படியும் ஆகறதுதான்''

''தெரியலை. என்னன்னு தெரியலை. அவருக்கு இந்த கார் பிடிச்சுத் தான் இருந்தது. ஏன் வேண்டாம்னு சொன்னாருன்னு தெரியலை'' என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

''அது சரி, இப்ப இந்த அத்துவான காட்ல மாட்டிக் கிட்டமே, என்ன பண்றது?'' என்றான்.

''பயப்படறதுக்கெல்லாம் ஒண்ணும் இல்லைடா. அவருக்கு ஒரு ஃபோன் அடிச்சா போதும். ஆஃப் அன் அவர் தூரம் தானே? பெட்ரோல் அனுப்பிடுவாரு'' என்றவன் தான் தொடர்பு கொண்டிருந்த அந்தப் பார்ட்டிக்கே போன்

செய்தான். அவரும் "சாரிப்பா. என்னால தொந்தரவா போயிடுச்சா? நான் இப்ப கார்ல பெட்ரோல் அனுப்பறேன்" என்றார்.

பெட்ரோல் வரும் வரை அங்கே அமர்ந்து கொண்டிருந்தார்கள். "என்னடா இது எங்க போனாலும் ஒரு நாயர் டீக்கடை வச்சிருப்பாருன்னு ஒரு ஜோக் இருக்குது. இங்க அதையும் கூட இங்க காணோம். இப்படி காட்டுக்குள்ள மாட்டிகிட்டு இருக்கோம். ஒண்ணுமே கிடைக்கலையே?" என்றான் அருணாச்சலத்தின் கூட வந்த நண்பன் சேகரன்.

"சரி, பாட்டைப் போட்டு விடு. கையைக் காலை நீட்டிட்டுக் கேட்டுட்டாவது இருப்போம்" என்றான். "வாட்டர் பாட்டிலாவது வச்சிருக்கியாடா?" என்றான் சேகரன்.

"பாரு, அந்தப் பாக்சுக்குள்ளே. தின்பண்டம் கூட இருக்கு" என்று எடுத்துக் கொடுத்தான். அவனுக்கு எப்போதுமே காரா சேவ் பிடிக்கும் அதனால் கொஞ்சம் வைத்திருப்பான். அதை எடுத்துக் கொடுக்க இரண்டு பேரும் கொரித்துக் கொண்டு அமர்ந்திருந்தார்கள். தாகத்துக்கு தண்ணீரைக் குடித்துக் கொண்டு அமர்ந்திருந்தார்கள்.

ஒரு இருபது நிமிடங்கள் போயிருக்கும் திடீரென்று அந்தக் காட்டு இலைகளின் மேலே யாரோ ஓடி வருகிறாற்போல சத்தம் கேட்டது.

காய்ந்த சிறகுகளின் மேலே யாரோ திகுதிகுவென்று ஓடி வந்தார்கள்.



"டேய், யானையா இருக்கப் போகுது!" என்றான் சேகரன்.

"யானையோட சத்தமெல்லாம் இப்படி இருக்காதுடா, யாரோ மனுஷங்களா இருக்கும், இல்லைன்னா செந்நாய், கின்னாய்னு ஏதாவது இருக்கும்" என்றான் அருணாசலம்.

"என்னடா ரொம்ப பழக்கமானவனாட்டம் பேசறே!" என்றான் சேகரன்.

"அட, எத்தனைப் பார்ட்டிங்களை இந்த மாதிரி காட்டுப் பகுதியில கூட்டிட்டுப் போறோமில்லே. தெரியும். இந்தப் பக்கமெல்லாம் ஒண்ணும் பயப்படறமாதிரி எந்த மிருக நடமாட்டம் இல்லை. கொஞ்சம் ஒரு நாலைஞ்சு மைல் தூரத்துல வேண்ணா டிரைபல்ஸ் இருக்காங்க" என்றான்.

"டிரைபல்ஸா? இதுக்குள்ளயா?" என்றான் சேகரன்.

"ஆமடா, நீ உள்ள போய் பார்க்கணும். இப்படி ஜனங்களா... இருக்காங்களான்னு ஆச்சரியப்பட்டுடணும். வெளி உலகத்துக்கு அவங்களுக்கும் சம்பந்தமே இல்லாத மாதிரி இருப்பாங்க" என்றான் அருணாசலம்.

"எப்படிடா?" என்றான் சேகரன்.

"எப்படின்னா, அப்படித்தான். அவங்கவங்க வாழ்க்கை முறைகளை விட்டு வெளிய வர்றது இல்லை. இன்னொரு விஷயம் தெரியுமாடா? இந்தப் பர்ட்டிகுலர் டிரைபல் ஏரியாவுல ஒரு விசேஷம் இருக்கு!" என்றான்.

"என்னடா?" என்றான் மற்றொருவன்.

''இங்கே சுகப் பிரசவம்தான்டா. வேற ஆபரேஷன் அந்த மாதிரி பிரச்சினைகளே கிடையாது'' என்றான். பிறகு ''இன்னொண்ணு தெரியுமா? நம்ம ஊர்ல இருக்கிற ஒரு ஹாஸ்பிட்டல்ல ரொம்ப டெலிவரி கஷ்டமா இருந்தா கார் அனுப்பி இவங்கள்ள ஒருத்தவங்களைக் கூட்டிட்டு வந்து டெலிவரி பார்க்கச் சொல்லுவாங்க. வயித்தை அப்படி இப்படி அமுக்கி குழந்தையைத் திருப்பி டெலிவரியை நார்மலா பண்ணிடுவாங்களாம்'' என்றான்.

''அப்படின்னா எல்லா நர்சுகளையும் அனுப்பிட்டு இவங்களைக் கூட்டிட்டு வந்து வச்சுக்கலாமேடா?!'' என்று சிரித்தான் சேகரன்.

''அப்படி இல்லைடா, அவங்க அனுபவத்துல சில முறைகளெல்லாம் தெரிஞ்சு வச்சிருக்காங்க. சில சுளுக்கு எடுக்கறது சில வலிகளுக்கு வயித்தியம் பண்றதுன்னெல்லாம் இருக்கு'' என்று சொன்னான். சேகரன் சிரித்தான்.

''அது சரி, டிரைபல் ஏரியாவுல அழகா கொத்திட்டுப் போறமாதிரி ஏதாவது பொண்ணு இருந்தா பரவாயில்லை'' என்றான் சேகரன்.

''என்னடா, சினிமாவுல வர்ற மாதிரி நினைச்சுட்டியா? பின்னிடுவாங்க தெரியுமா?'' என்றான் அருணாசலம் ''ஆமா, அதை வேற யோசிக்கணும்!'' என்று சலித்துக் கொண்டான் சேகரன்.

அருணாசலம் கலகலவென சிரித்தான். ''ஏண்டா உங்க அம்மா ஊர்ல பொண்ணு பார்க்கறதுக்கே ஏகப்பட்ட கண்டிஷன் போட்டு பொண்ணு அப்படி வேணும் இப்படி வேணும்னுட்டு இருக்கு. இவன் டிரைபல் ஏரியா



பொண்ணை கொண்டு போய் நிறுத்தறானாம். உனக்கு எதுக்குடா இந்த ஆசையெல்லாம்? என்னைச் சொல்லு. எனக்கு அப்பா இல்லை. அம்மா நான் என்ன சொன்னாலும் கேட்டுக்குவாங்க''

''ஆமா ஒரு இளிச்சவாய் அம்மா!''

''இளிச்சவாய் அம்மா இல்லைடா. பிரியமான அம்மா. உனக்கு எது சந்தோஷமா அதைச் செய்ன்னு சொல்ற அம்மாடா!'' என்றான்.

அவர்கள் பேசிக் கொண்டே காரை விட்டு இறங்கி நின்றார்கள்.

''எங்கே சலசலவென்று சத்தம் வருகிறது'' என்று பார்த்தார்கள்.

இப்பொழுது அருகிலே கொலுசு போல சத்தமும் கேட்டது. சேகரன் கொஞ்சம் கவலையுடன் அருணாசலத்தைப் பார்த்தான். ''ஏண்டா, சலங்கை சத்தம் மாதிரி கேட்குதுடா! ஏதாவது மோகினி கீகினி வர்றாளோ?'' என்றான்.

அருணாசலம் சேகரனை முறைத்தான். ''ஏண்டா பீதியைக் கிளப்பி விட்டுட்டே இருக்கே?'' என்றான்.

'பயலும் கொஞ்சம் பயந்துட்டான் போல இருக்கு!' என்று எண்ணிக் கொண்டான் சேகரன். அருணாசலம் சத்தம் வருகிற திசையை ஆர்வமாக பார்த்தான்.

உண்மையாகவே அங்கே ஒரு பெண் ஓடி வந்து கொண்டிருந்தாள். மலைசாதிப் பெண். வேகமாக ஓடி வந்து மூச்சிறைக்க அவர்கள் காருக்கு முன்னால் நின்றாள்.

"ப்ளீஸ், ப்ளீஸ், என்னைக் கூட கூட்டிட்டுப் போயிடுங்க!" என்றாள்.

சேகரன் 'இது என்னடா வம்பு!' என்பது போல அருணா சலத்தைப் பார்க்க அவன் திகைத்துப் போய் அந்தப் பெண்ணையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒரு துணிப்பை. அந்தத் துணிப்பையிலே ஏதேதோ பொருட்களை வைத்துக் கொண்டு அவள் நின்று கொண்டிருந்தாள்.

"ப்ளீஸ், என்னைக் காப்பாத்துங்க. என்னை இங்கிருந்து கூட்டிட்டுப் போங்க" என்று மறுபடியும் கெஞ்சினாள் அந்தப் பெண்.

அருணாசலம் திகைத்துப் போய் நின்று கொண்டிருந் தான்.

## அத்தியாயம் - 14

அது ஒரு ஒண்டிக் குடித்தன வரிசை. அருணாசலத்தின் அம்மா வழி சொத்து. ஒரு பெரிய அறையைத் தடுத்து ஒரு பக்கம் சமையல் அறை. ஒரு பக்கம் சின்ன அறை என்ற வரிசையில் அமைந்திருந்த வீடுகள் அவை.

ஓட்டு வில்லைகள் வேய்ந்த வீடுகள். அதிலே முதல் வீட்டிலே அருணாசலத்தின் அம்மா ராஜம்மாவும், முருகவேலும் கோவிந்தும் அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

அந்தப் பெண் ஒரு ஓரமாக நின்று கொண்டிருந்தாள்.

ராஜம்மா அருணாசலத்தை முறைத்துக் கொண்டிருந் தாள். "ஏண்டா, இது உனக்குத் தேவையா?" என்று கேட்டாள்.



முருகவேல்தான் சமாதானப்படுத்தினான். "அம்மா ஆனது ஆச்சு. இதையே கேட்டுட்டு இருந்தா எப்படி? அடுத்து என்ன செய்யறதுன்னு பார்க்கலாம்" என்றான்.

ராஜம்மா இப்போது அவனை முறைத்தாள். "என்னடா கூறு கெட்டத்தனமா பேசறீங்க எல்லாரும். ஒரு வயசுப் பொண்ணைக் கொண்டு வந்து வீட்ல வச்சுக்க முடியுமா. அதுலயும் ஏதோ டிரைபல் பொண்ணுங்கறீங்க. மலை சாதிப் பொண்ணைக் கொண்டு வந்து வச்சுட்டு அவங்க ஏதாவது வம்புக்கு வந்தா யாரு பதில் சொல்றது?" என்றாள் ராஜம்மா.

அருணாசலம் முருகவேலை கெஞ்சலாக பார்த்தான். ஏனென்றால் அவர்கள் மூன்று பேரிலும் முருகவேல் சொல்வதைத்தான் ராஜம்மா கொஞ்சமாவது கேட்பாள்.

முருகவேலே இந்த நிலைமையை பார்த்து தலையைப் பிய்த்துக் கொண்டு உட்கார்ந்து கொண்டிருந்தான். அந்தப் பெண் வேறு அழகாக இருந்தாள்.

"உன்னோட பேரு என்னம்மா?" என்று கேட்டான் முருகவேல்.

"என்னோட பேரு ராக்கி!" என்றாள் அவள். முருக வேலுக்கு குபீரென்று சிரிப்பு வந்தது.

"இப்படிப் பேரெல்லாம் எங்கம்மா பிடிக்கறீங்க?" என்று கேட்டான்.

அவள் தலையைக் குனிந்து கொண்டு "அது எங்க கூட்டத் தலைவர் வச்ச பேரு" என்றாள்.

"ஏம்மா நீ பாட்டுக்கும் ஓடி வந்துட்டே. இப்ப எங்களை என்ன செய்யச் சொல்றே." என்று கேட்டான் அவன்.

முருகவேலைப் பார்த்து அந்தப் பெண் கையெடுத்துக் கும்பிட்டாள்.

"அண்ணா, உங்களுக்கு ஒரு தங்கச்சி இருந்தா காப்பாத்துவீங்க தானே, நான் இன்னம் இரண்டு நாள் அங்கே இருந்திருந்தேன்னா ஒரு முரடன்... ஒண்ணுத்துக்கும் ஆகாதவனுக்கு ஏதோ ஒண்ணைச் சொல்லி என்னைக் கல்யாணம் பண்ணி வச்சிருப்பாங்க. ஆயுசு பூரா அந்தக் குடிகாரன்கிட்ட அடிவாங்கி சாகணும்" என்றாள் அந்தப் பெண்.

மலைசாதிப் பெண் என்றாலும் நன்றாகவே தமிழ் பேசினாள்.

முருகவேல் "படிச்சிருக்கியாம்மா," என்று கேட்டான்.

"ப்ளஸ் டு படிச்சிருக்கேண்ணே. பக்கத்துலே ஸ்கூல் இருந்ததுனால ப்ளஸ் டு வரைக்கும் விட்டாங்க. காலேஜுக் கெல்லாம் அனுப்ப மாட்டோம்னு சொல்லிட்டாங்க" என்றாள்.

"ஏம்மா இவ்வளவு படிச்ச பொண்ணு கொஞ்சம் யோசிச்சு ஏதாவது பண்ண வேண்டாமா," என்று கேட்டான்.

"எப்படிங்க அண்ணா பண்ண முடியும்? இன்னம் ஆறு மாசத்துல எனக்கு பதினெட்டு வயசு ஆகுது. அதுக்கு அப்புறம் நான் ஏதாவது துணிஞ்சு பண்ண முடியும். அதுவும் கூட அங்கே எதுவும் புரிய வைக்க முடியாது" என்றாள் ராக்கி.

முருகவேல் அருணாசலத்தைப் பார்த்து சிரித்தான்.



"அப்படிப் போடு!" என்றான் ராக்கியைப் பார்த்து. ராக்கி வெட்கப்பட்டாள்.

ராஜம்மா முருகவேலைப் பார்த்து "ஏம்பா மைனர் பொண்ணுங்குது" என்று கவலையாய்க் கேட்டாள்.

"கொஞ்சம் சிரமந்தாம்மா. ஒரு ஆறு மாசம் அப்படி இப்படி மறைச்சு வச்சுட்டோம்னா அதுக்கு அப்புறம் பிரச்சினை இருக்காது" என்றான்.

ராஜம்மா அதிர்ச்சியாகப் பார்த்தாள்... "டேய், முருகவேல் என்னடா சொல்றே? நீ சொல்றதைப் பார்த்தா இங்க வச்சுக்கலாம்னு சொல்லுவே போலத் தெரியுது"

"வேற என்னம்மா செய்யறது. இவன் தைரியமா அந்தப் பொண்ணை கார்ல ஏத்திட்டு வந்துட்டான் திரும்பக் கொண்டு போய் விட்டா தரும அடி பின்னிடுவாங்க. மைனர் பொண்ணை கடத்திட்டு வந்துட்டோம்னு கேஸ் கொடுத்துருவாங்க. எல்லாப் பக்கமும் நம்மளுக்கு இடைஞ்சல் தாம்மா" என்றான் முருகவேல்.

"சரி இப்ப என்ன பண்ணலாங்கறே." என்றாள் ராஜம்மா.

"இந்த ஒண்டுக் குடித்தன வரிசையிலே ஒரு வீட்டைக் காலி பண்ணிட்டு இந்தப் புள்ளைய வச்சுடுங்க. எங்கயும் வெளிய அனுப்பாதீங்க. பாதுகாப்பா ஒரு ஆறு மாசம் ஓட்டிடுங்க. அதுக்கப்புறம் என்ன பண்ணலாம்னு யோசிக்கலாம்" என்றான் முருகவேல்.

"எனக்கென்னமோ பயமாத்தான் இருக்கு!" என்றாள் ராஜம்மா. ஆனால் முடிவெடுத்த படியே ஆறு மாதம்

அந்தப் பெண்ணை அந்த ஒண்டிக் குடித்தன வரிசையிலே கொஞ்சம் பக்கத்திலேயே வைத்து விட்டார்கள்.

அந்தப் பெண்ணும் சும்மா இருக்க வில்லை. ''வீட்டில் இருந்தே ஏதாவது செய்கிறேன். அதற்கு ஏற்ற மாதிரி ஏதாவது வேலை வாங்கிக் கொடுங்கள்'' என்று ராஜம் மாவிடம் கேட்டாள்.

ராஜம்மா அங்கே அக்கம் பக்கத்துப் பெண்கள் எல்லாம் காகித மடிப்புக்கள் செய்து காகித கவர்கள் செய்கிற வேலை இருப்பதை அறிந்து கொண்டு அவளுக்கும் அந்த வேலைக்கு ஏற்பாடு செய்தாள்.

வீட்டில் இருந்தபடியே தன்னுடைய தேவைக்கும் ஏன் வீட்டு வாடகைக்கும் கூட அந்தப் பெண் சம்பாதித்துக் கொண்டாள். இந்தப் பாதுகாப்பு கிடைத்ததே போதும் என்பது போல அமைதியாக நடமாடுகிற அந்தப் பெண்ணை ராஜம்மாவுக்குக் கூட பிடித்து விட்டது. முருகவேலும் கோவிந்தும் கூட அவ்வப்போது வந்து பார்த்துப் போவார்கள்.

ஒரு நாள் முருகவேலிடம் ராஜம்மா சொன்னாள். ''புள்ளை நல்ல புள்ளைப்பா. பேசாம நம்மளுக்குள்ளே ஒரு பையனைப் பார்த்து கல்யாணம் பண்ணி வச்சுட்டா கூட ஆகும்'' என்றாள்.

முருகவேல் அவளைப் பார்த்து குறும்பாக சிரித்தான். ''என்னம்மா பிள்ளையவே வச்சுக்க மாட்டேன்னீங்க. இப்ப மாப்பிள்ளை தேடற அளவுக்குப் போயிட்டீங்க. வேண்ணா உங்க அருணாசலத்துக்குக் கட்டி வைங்க'' என்றான்.



''அப்படிங்கறே?'' என்றாள் ராஜம்மா.

''அம்மா அப்படி கிப்படி பண்ணிடாதிங்க. பதினெட்டு வயசு கல்யாண வயசு கிடையாது''

''அதெல்லாம் உங்க காலத்துலப்பா. உனக்குத் தெரியுமா எனக்கு பதினேழு வயசுலே கல்யாணம் ஆயிடுச்சு. அருணாசலம் எனக்கு மூணாவது பையன்'' என்றாள் ராஜம்மா.

முருகவேல் சிரித்துச் சமாளித்தான். ''விளையாட்டா வெல்லாம் பேசிட்டு இருக்காதிங்கம்மா,'' என்று சொல்லி விட்டு கிளம்பினான். ஆனால் ராஜம்மா விளையாட்டாகப் பேசவில்லை. உண்மையிலேயேதான் யோசித்திருக்கிறாள் என்பது அந்தப் பெண் மேஜரானதுக்கு பிறகு வந்த இரண்டு மூன்று மாதங்களிலே தெரிந்தது.

அம்மாவின் எண்ணத்தை புரிந்து கொண்டதனாலோ என்னவோ அருணாசலம் கூட ராக்கியிடம் நன்றாகவே பழகினான். ராக்கிக்கும் அவனை மிகவும் பிடித்திருந்தது போலத்தான் இருந்தது.

பதினெட்டு வயது முடிந்ததற்கு பிறகு ஒரு நான்கைந்து மாதங்கள் கழித்து ஒரு நாள் மறுபடியும் எல்லாம் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கையில் ராஜம்மா கேட்டாள் முருக வேலிடம் ''ஏம்பா அந்தப் பொண்ணு மேஜர் ஆயிடுச்சு. இனி என்ன பண்ணலாம். காலேஜ் கிலேஜ் அனுப்பலாமா,'' என்றாள்.

ராக்கி தலையைக் குனிந்து கொண்டு ''இல்லை, இனிமே நான் காலேஜுக்கெல்லாம் போய் படிக்கலை!'' என்றாள்.

"பின்ன என்னம்மா பண்ணப் போறே, கல்யாணம் பண்ணிக்கப் போறியா?" என்றான் முருகவேல். ராக்கி வெட்கத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள். "இதோ பார்றா!" என்று முருகவேல் சிரித்தான்.

"சிரிக்காதீங்க அண்ணா!" என்றாள்.

"நம்மளை அண்ணா பண்ணிட்டா. அப்ப நான் இல்லை. வேற ஏதாவது மாப்பிள்ளை பார்த்து வச்சிருக் கியா?" என்றான் முருகவேல்.

அவள் மறுபடியும் வெட்கத்துடன் சிரித்து விட்டு "எனக்கு இந்தக் குடும்பமே ரொம்ப பிடிச்சிருக்கு!" என்றபடி ராஜம்மாவைப் பார்த்தாள்.

ராஜம்மாவுக்கு உச்சி குளிர்ந்து விட்டது. "சரி, நீ ஊட்ல போய் நாலு பேருக்கும் டீ போட்டு எடுத்துட்டு வா!" என்றாள்.

ஏதோ பேசுவதற்காகத்தான் தன்னை அனுப்புகிறார்கள் என்று தெரிந்து கொண்ட ராக்கி வேகமாக நகர்ந்தாள். ராஜம்மா திரும்பி அருணாசலத்தைப் பார்த்தாள்.

"ஏன்டா அருண், என்ன சொல்றே?" என்றாள்.

அருணாசலத்திற்கும் அந்த நோக்கம் இருந்ததாலோ என்னவோ அம்மாவை வெட்கத்துடன் பார்த்து "ரொம்ப சின்னப் பொண்ணுல்ல?" என்றான்.

"நீயும் சின்னப் பையன் தான்டா. உனக்கு என்ன இருபத்திரெண்டுதான் ஆகுது!" என்றாள்.

"சரிம்மா. உன் இஷ்டம்!" என்று சொல்லி விட்டான் அருணாசலம்.



அப்போதுதான் முருகவேல் அந்த யோசனையைச் சொன்னான். "இதோ பாருங்கம்மா இனிமே இந்தப் பொண்ணுக்கு ராக்கி கீக்கியெல்லாம் வேண்டாம். நமக்கு ஏத்த மாதிரி ஒரு பேர் வச்சுப்போம் மகாலட்சுமின்னு வச்சுப்போம்" என்றார்கள்.

அப்படியே ஏற்றுக் கொண்டார்கள். ராக்கியும் அதற்கு ஒத்துக் கொண்டாள். ஒரே மாதத்திற்குள்ளாக அருணாசலத் திற்கும் மகாலட்சுமிக்கும் திருமணம் நடந்தது.

அதற்கு அடுத்த ஆண்டிலேயே குழந்தையும் பிறந்து விட்டது. அந்தக் குழந்தைக்கு மூன்று வயது இருக்கும் பொழுதே இன்னொரு குழந்தைக்கும் வழி செய்து விட்டார்கள் கணவனும் மனைவியும். இரண்டாவது குழந்தை கருவிலே இருந்தது.

அந்தக் கால கட்டத்தில் தான் முருகவேலும் அருணா சலமும் கோவிந்தும் விளையாட வருவது. அருணா சலத்திற்கு பெரிய படிப்பு இல்லை என்றாலும் இளம் வயதில் இருந்து முருகவேலுடன் பழகியவன் என்பதால் முருகவேல் அவனை அரவணைத்துத்தான் செல்வான். கோவிந்தும் முருகவேலும் சந்திரகாந்தனையும் போல இல்லாவிட்டாலும் ஒரு பட்டப் படிப்பாவது முடித்திருந் தான்.

கோவிந்துக்கு ஆரம்பத்திலே இருந்து இதெல்லாம் பிடிக்கவில்லை. 'தேவையில்லாத வேலைடா, தேவையில்லாத வேலைடா!' என்று சொல்லிக்கொண்டே இருப்பான்.

"ஏன்டா குழந்தை ஆகி மூணு வருஷம் ஆச்சு. அதுக்கு அப்புறம் ஒரு குழந்தை ஆச்சு. இன்னும் ஏன்டா இதைப்

பத்திப் புலம்பிட்டு இருக்கே!'' என்று முருகவேல்தான் சொல்லுவான்.

அருணாசலத்தின் திருமணம் முடிந்து இரண்டு மாதங்கள் முடிந்துதான் இந்த விஷயத்தையெல்லாம் சொன்னார்கள். சந்திரகாந்தன் இதை மிகவும் சுவாரசியமாகக் கேட்டுக் கொண்டான். ''சினிமாக் கதை மாதிரி இருக்கில்லடா,'' என்றான்.

''அது என்னமோ தெரியலைடா! ஹீரோவும், ஹீரோயினும் சுகமா இருக்காங்க. மேல படிம்மான்னு சொன்வான் இவன். அந்தப் பொண்ணு வேண்டாம். நான் இப்படியே நிம்மதியா இருக்கேன்னு சொல்லிடுச்சு. நல்லா ரெண்டு குழந்தையும் வளர்ந்ததுக்கு அப்புறம் பார்த்துக்கலாம்னு சொல்லிடுச்சு''

சந்திரகாந்தன் சிரித்தான். ''பரவாயில்லைடா அவன் அவன் காட்டுக்கு போய் முயல் பிடிப்பானுங்க மானுங்கூட பிடிக்கறானுங்க. நீ அழகா ஒரு மங்கையைப் பிடிச்சு வந்துட்டடா!'' என்றான் சந்திரகாந்தன்.

அருணாசலம் ஒரு நாள் அவர்கள் வீட்டிற்கு சந்திரகாந்தனை அழைத்தான். முருகவேல் ''வேண்டாம்டா. அவன் வளர்ப்பே வேற. இந்த ஏரியாவெல்லாம் அவனுக்குப் பிடிக்காதுடா'' என்றான். சந்திரகாந்தன் முருகவேலைப் பார்த்து முறைத்தான். ''ஏன் அப்படிச் சொல்றே, ஏன் நான் அங்கயெல்லாம் வரமாட்டேனா என்ன?'' என்று கோபித்துக் கொண்டான்.

ஒரு நாள் முருகவேலுக்கும், அருணாசலத்துக்கும், கோவிந்துக்கும் என்று மகாலட்சுமி ஒரு விருந்தே தயார் செய்து அவர்களை உபசரித்தாள்.



சந்திரகாந்தனுக்கு அந்தப் பெண்ணை மிகவும் பிடித்துப் போய் விட்டது. ''ரொம்ப அருமையான பொண்ணுப்பா! நல்லா வச்சுக்க!'' என்று அருணாசலத்திடம் சொன்னான்.

''சந்துரு, அதைப் பத்தியெல்லாம் கவலையேபடாதே. நம்ம உயிர் இருக்கற வரைக்கும் அந்தப் பொண்ணுக்கு ஒரு குறையும் வராது!'' என்றான் அருணாசலம்.

எந்த நேரத்தில் உயிர் இருக்கிற வரைக்கும் என்று சொன்னானோ தெரியவில்லை.திடீரென்று ஒரு நாள் விபத்திலே அருணாசலம் மறைந்து போனான்.

முருகவேலும், கோவிந்தும் சந்திரகாந்தனும்தான் முன்னால் நின்று எல்லா ஏற்பாடுகளையும் செய்தார்கள்.

அவர்கள் எதிர் பாராத விஷயம் என்னவென்றால் மகாலட்சுமியின் ராஜம்மா தன் வருத்தம் முழுவதையும் மேல் காட்டியதுதான். ''இந்தத் துக்கிரி வந்துதான் என் பொழப்பே கெட்டது!'' என்று அவள் பேச ஆரம்பித்தவுடன் கோவிந்தனும், சந்திரகாந்தனும், முருகவேலும் திகைத்துப் போனார்கள். முருகவேல் சந்திரகாந்தனிடம் ''இப்ப என்னடா பண்றது.'' என்று கேட்டான்.

கோவிந்த் அப்போது ''இங்க பாருங்கடா, மரியாதையா ஒதுங்கிக்குங்க! இப்ப அந்தப் பொண்ணு ஏரியாவுல பழகிடுச்சு. ஏதோ ஒரு வீடு பிடிச்சு இருந்துக்கும். காகித கவர் செஞ்சு எப்படியோ பிழைச்சுக்கும் இந்தக் கட்டத்துல நாம ஒதுங்கிக்கலாம்டா. அதான் மரியாதை!'' என்றான்.

ஆனால் சந்திரகாந்தன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. வேறு ஒரு முடிவை எடுத்தான்.

## அத்தியாயம் - 15

**போ**ர்ட்டிகோவில் அமர்ந்து நியூஸ் பேப்பர் படித்துக் கொண்டு அமர்ந்திருந்தார் சந்திரகாந்தனின் அப்பா சகாயம். சந்திரகாந்தனுடைய கார் உள்ளே நுழைந்தது.

கூர்க்கா சல்யூட் அடித்து கேட்டை திறந்து விட கார் உள்ளே நுழைந்து போர்டிகோவில் வந்து நின்றது.

வழக்கம் போல் வருகிற மகன் தானே என்று ஆசுவாசமாக பார்த்துக் கொண்டிருந்தார் சகாயம். மகன் டிரைவிங் சீட்டில் இருந்து இறங்கினான். பின் கதவைத் திறந்து விட அதிலே ஒரு பெண்ணும் குழந்தையும் காரிலே இருந்து இறங்குவதை பார்த்தார்.

அவரது ஒற்றைப் புருவம் லேசாக உயர்ந்து இறங்கியது.

'அப்பா!' என்று வந்தான் மகன். 'வாப்பா!' என்றவர் அந்தப் பெண்ணையும் பார்த்து 'வாங்க' என்று சம்பிரதாயமாக வரவேற்றார்.

''அப்பா, எனக்கு இவங்க ரொம்ப வேண்டியவங்க. இங்கே கொஞ்ச நாள் தங்கியிருக்கப் போறாங்க'' என்றான்.அவனோடு வந்திருந்த அந்தப் பெண் பேந்தப் பேந்த விழித்துக் கொண்டு நின்றாள்.

சகாயம் ''எதையும் இப்போது கேட்பது இப்போது உசிதமில்லை'' என்று எண்ணியவராக ''சரிப்பா, அதனால் என்ன? தாராளமா தங்கட்டும். போம்மா உள்ளே போ'' என்றார்.

அவள் தயங்கி தன் கையிலிருந்த ஒரே ஒரு ஹேண்ட் பேக்கை எடுத்துக் கொண்டு உள்ளே போனாள்.



அதற்குள்ளாக உள்ளே இருந்து சந்திரகாந்தனுடைய தாயார் விமலா வந்தாள். ''இந்தா, விமலா பையன் யாரோ கெஸ்டைக் கூட்டிட்டு வந்திருக்கான்'' என்று குரல் கொடுத்தார் அப்பா.

விமலாவும் ஒரு நிமிடம் திகைத்துப் போனாலும் மகனைப் பொறுத்த வரை இது போன்ற விஷயங்களெல்லாம் அடிக்கடி பார்த்தவள் என்பதால் அந்தப் பெண்ணைப் பார்த்து 'வாம்மா' என்று வரவேற்றாள். பக்கத்திலே அவள் கால்களைக் கட்டிக் கொண்டிருந்த அந்தக் குழந்தையையும் பார்த்தாள்.

''அம்மா, இந்தப் பொண்ணு நமக்கு ரொம்ப வேண்டியவங்க. இங்க கொஞ்ச நாள் இருப்பாங்க'' என்றான் சந்திரகாந்தன்.

''தாராளமா இருக்கட்டும்பா!'' என்று அம்மாவும் அப்பாவைப் போல அதே குரலில் சொல்ல சந்திரகாந்தன் சற்றே நிம்மதிப் பெருமூச்சு விடுவதைப் பார்த்து அந்தப் பெண் கவலையான ஒரு பார்வையுடன் தலையைக் குனிந்து கொண்டாள்.

''வாங்க மகா!'' என்று அவளை அழைத்துப் போய் தரைத்தளத்திலே ஒரு அறையைக் காட்டினான். ''நீங்க இங்கே ஸ்டே பண்ணிக்கலாம்!'' என்றான் அவன்.

அவள் மறுபடியும் ''சார்!'' என்று இழுத்தாள்.

''ஒன்னும் பேச வேண்டாம். நான் இருக்கேன். என்ன வேணுமோ எல்லாத்தையும் நான் பார்த்துக்கறேன். நீ கவலைப்படாம இரும்மா. இப்போதைக்கு குளிச்ச முடிச்சிட்டு வா. டிஃபன் சாப்பிடலாம்'' என்றான்.

அவன் தன்னுடைய ஹேண்ட் பேக்கை அங்கே இருந்த ஒரு ஷெல்ஃபில் வைத்து விட்டு அவனைப் பார்க்க. ''உட்காரும்மா உட்காரு!'' என்று அவளை அந்த அறையிலே இருந்த ஒரு நாற்காலியிலே அமரச் செய்தான்.

''இல்லை, நீங்க பாட்டுக்கும் கூட்டிட்டு வந்துட்டீங்க. உங்க வீட்டிலே!'' என்றாள்.

''அதெல்லாம் என்னோட கவலைம்மா. என் பேரண்ட்ஸைப் பார்த்தியில்லே? ஏதாவது கேள்வி கேட்டாங்களா? அவங்களுக்கு என்னைப் பத்தி தெரியும்மா. நான் உட்கார்ந்து அவங்க கிட்ட பேசறேன். நீ எதைப் பத்தியும் கவலைப்படாதே. நிம்மதியா இரு!'' என்று சொல்லிவிட்டு ''இன்னொரு அரை மணி நேரத்துல குளிச்சு முடிச்சுட்டு சாப்பிட வாம்மா. அதுக்கப்புறம் ரெண்டு நாள் ரெஸ்ட் எடுத்துப்பியாம். அதுக்கப்புறம் என்ன பண்ண லாம்னு யோசிக்கலாம்'' என்று சொல்லி விட்டு வெளியே வந்தான்.

இவனிடம் இருந்து விளக்கம் வரும் என்ற காத்திருப்பில் அப்பா போர்டிகோவில் அமர்ந்திருந்தார். அதற்குள்ளாக வேலைக்காரப் பெண் மகாலட்சுமிக்கு காஃபி கொண்டு போய் கொடுத்து விட்டு ''குழந்தைக்கு என்ன கொடுக் கறது? பால் கொடுத்தனுப்பலாமான்னு அம்மா கேட்டாங்க'' என்றாள்.

அவன் தயங்கியபடி தலையாட்டினாள். மகன் முகத்தைப் பார்த்தான். 'அம்மா' என்று அவன் மறுபடியும் தாயிடம் நெருங்கிக் கொண்டான்.



''பேசாம இருடா கண்ணா, நம்ம மாமா வீடு கண்ணா, கவலைப்படாதே'' என்று அவள் தேற்றினாள்.

வேலைக்காரப் பெண்ணும் முகத்தில் எதையும் காட்டாமல் ''பால் கொண்டு வரேன், சர்க்கரை போடலாமில்லே'' என்று கேட்டாள். மகாலட்சுமி தலையை ஆட்டினாள்.

மகாலட்சுமி குளித்து முடிக்கிற அந்த இடைவெளிக் குள்ளாக போர்டிகோவுக்கு சற்றுத்தள்ளி அம்மாவுக்கும் அப்பாவுக்கும் இரண்டு கூடைச் சேர்களைப் போட்டு அமர வைத்துவிட்டு எதிரே தானும் கூடைச் சேரைப் போட்டுக் கொண்டு அமர்ந்த சந்திரகாந்தன் விளக்கமாக சொல்லி முடித்தான். ஆனால் மெல்லிய குரலில்.

சகாயம் மனைவியைப் பார்த்தார். பிறகு ஒரு பெரு மூச்சு விட்டார். ''நல்லதுதான் செஞ்சிருக்கிறே தம்பி. ஆனா நாளைக்கு எதுவும் பிரச்சினை?!'' என்று இழுத்தார்.

''பிரச்சினைகள் இருக்கத்தாம்பா செய்யுது. ஆனால் சமாளிக்கத்தான் வேணும்'' என்றான்.

''இந்தப் பொண்ணு வெளியே எங்காவது போச்சன்னா அவங்க ஆளுங்க யாராவது பார்த்தா பிரச்சினை வருமா? வராதா?'' என்றார்.

''அப்பா, அதுக்கும் நான் ஒரு யோசனை வச்சிருக்கேன்'' என்றான் மகன்.

''சொல்லுப்பா!'' என்றார்.

அவன் வரும்பொழுதே எல்லாத் திட்டங்களையும் போட்டுக் கொண்டு வந்திருந்தான். மனதிற்குள் ஒரு வழி வகுத்து விட்டான். அதனால் இப்பொழுது தெளிவாக சொன்னான்.

"இப்போதைக்கு அந்தப் பொண்ணு வெளிய போறது அவ்வளவு ஸேஃப் இல்லை. அந்தக் குழந்தையை மட்டும் இப்போதைக்கு எங்காவது ஸ்கூல்ல சேர்த்து விட்டுடலாம். நம்ம அவுட் ஹவுஸ் காலியாதானே இருக்கு. அதுல அந்தப் பொண்ணை குடி வச்சிடலாம். அம்மாவும் ரொம்ப நாளா சொல்லிட்டு இருக்காங்க நம்பிக்கையான ஒரு ஆள் வீட்ல உதவிக்கு வேணும்னு. அவ படிச்சிருக்காப்பா. பி.காம் வரைக்கும் படிச்சிருக்கா. எனக்கு ஒரு தங்கை மாதிரி இருந்துட்டுப் போகட்டுமே. ஹவுஸ் கீப்பர் என்று ஆங்கிலத்தில் வெளிநாட்டில சொல்லுவாங்க அதுமாதிரி வீட்டு வேலை ஒண்ணு ரெண்டு பார்த்துட்டு நம்ம வீட்ல இருக்கட்டும்பா. அதுக்கு ஒரு சம்பளம் போட்டுக் கொடுத்திடுவோம்" என்றான்.

விமலா வாயைத் திறக்கவே இல்லை.

எப்போதுமே அவள் கணவன் என்ன முடிவெடுத்தாலும் சரி என்பது போல விச்ராந்தியாக இருப்பாள். மகனும் இதுவரையில் பொறுப்பற்றவனாக எந்தக் காரியமும் செய்ய வில்லை என்பதால் அதிலும் அவர் தெளிவாகவே இருந்தார்.

சகாயம் மறுபடியும் ஒரு பெருமூச்சு விட்டார். "நல்லாத்தான் யோசிச்சிருக்கே. பார்த்துக்கப்பா" என்றார்.

"அப்பா, இன்னொரு காரணமும் இருக்குப்பா!" என்றான் அவன்.

சகாயம் என்ன என்பது போல பார்த்தார். "அந்தப் பொண்ணு இப்ப கேரியிங்கா இருக்குப்பா!" என்றான்.

சகாயம் லேசாக அதிர்ந்து போனார். 'ஓஹோ!' என்றார்.



"அதனால ஒரு குழந்தை பொறக்கற வரைக்குமாவது ஒரு ஆதரவு தேவைப்பா!" என்றான்.

"சரிப்பா இருக்கட்டும். அதனால ஒண்ணும் பிரச்சினை இல்லை" என்று அப்பாவும் ஏற்றுக் கொண்டார்.

ஒன்றிரண்டு நாட்களுக்குப் பிறகு மகாலட்சுமியை உட்கார வைத்து அவர்கள் குடும்பமே விளக்கியபோது அவளும் எல்லையற்ற நிம்மதியை உணர்ந்தாள். "வீட்டை நீ ஜஸ்ட் மேற்பார்வை பார்த்துக்கம்மா. இந்த வேலைக்கார வங்க கிட்ட வேலை வாங்கி இதெல்லாம் எனக்கு சடைஞ்சு போச்சு" என்றார் விமலாம்மா.

"கவலைப்படாதீங்க அம்மா. எல்லாத்தையும் நான் பார்த்துக்கறேன்" என்றாள் அவள்.

அதற்கான பயிற்சிகளையும் கொடுக்க ஆரம்பித்தாள் விமலாம்மா. இந்தக் கால கட்டத்தில் தான் அவன் தன் மனதுக்கினியவளிடம் கூட பேசவில்லை. ஆழ்ந்த யோசனையிலேயே இருந்தான்.

ஏதாவது ஒரு நாள் சம்யுக்தாவை அழைத்து அவளிடம் பேசி விட வேண்டும் என்று திட்டம் போட்டுக் கொண்டிருந்தான். அப்பொழுதுதான் அது நிகழ்ந்தது.

ஒரு நாள் முருகவேல், கோவிந்த் இவர்களோடு அமர்ந்து பேசிக் கொண்டிருந்தான்.

முருகவேல் ஒரு பொறுப்புள்ளவனாக, ஒரு நல்ல தோழனாக அவனுக்கு ஆலோசனை சொன்னான். "பார்த்துக்க சந்துரு. ஒரு பொண்ணைக் கொண்டு வந்து வீட்ல வக்கிறதுங்கறது ரொம்ப ரிஸ்கியான விஷயம். என்ன

தான் உங்க அம்மா அப்பா ஒத்துக்கிட்டா கூட நாளைக்கு எதுவும் பிரச்சினை வராமா பார்த்துக்கோ''

''பார்த்துக்கலாம்டா!'' என்றான் சந்திரகாந்தன்.

''மேற்கொண்டு என்ன உத்தேசம்?''

''போஸ்டல்ல படிக்க வச்சிடுவோம். ஒரு பி.ஜி. டிகிரி படிக்க வச்சிடுவோம். படிக்க வச்சுட்டு நம்ம கம்பெனியிலே ஏதாவது ஒரு வேலையைப் போட்டுக் கொடுத்திடலாம். இல்லைன்னா ஏதாவது தெரிஞ்ச கம்பெனில ஒரு வேலையை வாங்கிக் கொடுத்துடலாம்'' என்றான்.

''குடு குடு!'' என்று நக்கலாக சிரித்தான் கோவிந்தன்.

சந்திரகாந்தனும் முருகவேலும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பிறகு ''என்னடா? சிரிப்பு ஒரு மாதிரி இருக்கு!'' என்றான் முருகவேல்.

''நீ சேவை செய்றது எல்லாம் சரிதான். ஆனால் உன் வயசும் அந்தப் பொண்ணு வயசும்தான் விவகாரமா இருக்குது'' என்றான் கோவிந்த்.

சந்திரகாந்தன் முகம் சுருங்கியது. ''டேய் நல்ல மனசோட செய்யற ஒரு காரியத்தை கொச்சைப் படுத்தா தடா!'' என்றான் முருகவேல்.

''நான் கொச்சைப் படுத்த மாட்டேன்டா எனக்கு சந்திரகாந்தனைப் பத்தி தெரியும். மகாலட்சுமியைப் பத்தி அவ்வளவா தெரியாது. ஆனா சந்திரகாந்தனைப் பத்தி தெரியும். ஆனா ஊரு உலகத்துக்கு தெரியுமா?'' என்று இழுத்தான்.

''ஊரு உலகத்துக்கு எதுக்குத் தெரியணும்?'' என்றான் சந்திரகாந்தன்.



''எதுக்குத் தெரியணுமா? தம்பி... உங்களுக்கு இன்னும் கல்யாணம் ஆகலை.ஒண்ணும் இல்லை இந்த விஷயத்தைப் போய் நீங்க நாளைக்கு கல்யாணம் பண்ணப் போற பொண்ணுகிட்ட சொல்லிப் பாருங்க என்ன சொல்லு வான்னு தெரியும்'' என்றான் கோவிந்தன்.

''என்னடா சொல்லீருவா?'' என்றான் சந்திரகாந்தன்.

''அவ சொல்றது இருக்கட்டும்டா. ஊரு என்ன சொல்லும் தெரியுமா? சௌகரியமா ஒரு பொண்ணு வயசுப் பொண்ணு செலவில்லாம கிடைச்சிருக்கு. வசதியாப் போச்சு அப்படின்னு சொல்லும்'' என்றான் கோவிந்த்.

முருகவேல் சட்டென்று எழுந்து கோவிந்தினுடைய சட்டைக் காலரை இழுத்துப் பிடித்து நிறுத்தினான். ''என்னடா பேசற நீ?'' என்றான் கோபமாக.

''என்னடா? அறைஞ்சுடுவியா?என்னை வேண்ணா அறைஞ்சுடுவீங்க அடிச்சிடுவீங்க, ஊர் வாயை அடக்கிடு வீங்களா. சேலஞ்ச் வைக்கிறேன்டா. இந்த விஷயத்தை மட்டும் இவன் போய் அதான் அந்த சம்யுக்தாகிட்ட சொன்னா முகத்துல காரித் துப்புவா!'' என்றான் கோவிந்தன்.

சந்திரகாந்தனின் முகம் வாடி விட்டது. முருகவேலைப் பார்த்தான்.

''ஏண்டா அவள் என்னைப் புரிஞ்சுக்க மாட்டாளா?'' என்றான்.

''புரிஞ்சுக்கறது என்னத்தை? எல்லாப் பெண்களும் பொசஸிவ் தான். எல்லாப் பெண்களும் அவங்க அவங்க ஆளுக அவங்களத்தான் நினைக்கனும்னு நினைப்பாங்க'' என்றான்.

"இப்ப நான் என்னடா பண்ணப் போறேன். ஒரு பெண்ணுக்கு ஹெல்ப் பண்ணப் போறேன்" என்றான் சந்திரகாந்தன்.

"தாராளமா செய். ஒண்ணு இந்தப் பெண்ணுக்கு ஹெல்ப் பண்ணு இல்லைன்னா அந்தப் பெண்ணுக்கு காகிதம் கொடு. இது ரெண்டையும் போட்டு குழப்பினா நீ கேவலப் பட்டுருவே" என்றான்.

"டேய்!" என்று மறுபடியும் பாய்ந்தான் முருகவேல்.

"டேய், போங்கடா! நான் சொல்ல வேண்டியதை சொல்லீட்டேன். அதுக்கு மேல உங்களுக்கு இஷ்டம் என்னமோ அதைப் பண்ணுங்க. உங்களுக்குப் பிடிச்சதாவே பேச முடியுமா?" என்று கோபித்துக் கொண்டு வெளியே போய் விட்டான் கோவிந்த்.

அவன் எழுந்து போவதைப் பார்த்துக் கொண்டிருந்தான் முருகவேல். சந்திரகாந்தன் சற்று அமைதியாக அமர்ந்து இருந்தான்.

பிறகு முருகவேலிடம் திரும்பி "என்னடா இப்படி சொல்றான்?" என்றான்.

முருகவேல் நீண்டதொரு பெருமூச்சு விட்டான். "சந்துரு இந்த மாதிரி பேச்சு எங்கேயோ கிளம்பி வரும்னு நினைச்சேன். நம்ம சர்கிள்ளயே வந்துடுச்சு. இதுவும் வரத்தாம்பா செய்யும். இதை அந்தப் பொண்ணு ஏத்துக்கு மான்னு தெரியலை. பார்த்துக்கோ" என்றான்.

சந்திரகாந்தன் சற்று நேரம் இறுக்கமான அமைதியை ஆழ்ந்திருந்தான். பிறகு ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு சொன்னான் "இந்தப் பொண்ணுக்கு நான் பொறுப்பெடுத்



தாச்சுடா. இதுவா இல்லை அதுவான்னு வரும் பொழுது...!" என்றவன் எதுவும் பேசாமல் அங்கிருந்து நகர்ந்து விட்டான்.

முருகவேல் அவனைக் கவலையோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

## அத்தியாயம் - 16

அலுவலகத்தில் அமர்ந்திருந்தான் சந்திரகாந்தன். அவனுக்கு வேலையே ஓடவில்லை. கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் அமர்ந்து சம்யுக்தாவிடம் எல்லா விளக் கத்தையும் சொல்லி விட்டான்.

அவள் குறுக்கிடாமல் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தாள்.

சந்திரகாந்தனுக்கும் அவளுடைய முகத்தைப் பார்த்து சொல்வதற்கு தைரியம் இருக்க வில்லை. அதனால் வேறெங்கோ பார்த்துக் கொண்டுதான் மொத்தக் கதையும் சொல்லிமுடித்தான்.

சொல்லி முடித்து விட்டு அவளுடைய முகத்தைப் பார்த்தான். முகத்தில் இருந்து எதையுமே கண்டுபிடிக்க முடியவில்லை.

உணர்ச்சிகளை துடைத்துவிட்டு அமர்ந்து கொண்டிருந் தாள் சம்யுக்தா. கடைசியாக அவன் பொறுப்பா, நட்பா, காதலா என்று வரும் பொழுது நான் பொறுப்பைத் தான் எடுத்துக் கொள்வேன் என்று முருகவேலிடத்தில் சொன்னதை பூசி மெழுகித்தான் சம்யுக்தாவிடத்தில் சொன்னான்.

அதைச் சொல்லும் பொழுது மட்டும் ஒரு கலவரத்தோடு சம்யுக்தாவின் முகத்தை ஓரக்கண்ணால் பார்த்தான்.

அவள் ஒரு நிமிடம் கண்களை இறுக மூடி திறந்தாள். அவ்வளவு மட்டும்தான் அவனுடைய வார்த்தைகளுக்கான பிரதிபலிப்பு. சொல்லி முடித்ததற்கு பின்பு சற்று நேரம் ஒரு சங்கடமான அமைதி நிலவியது.

பிறகு அவன் சொன்னான் 'இதுதான் சம்யுக்தா நடந்தது' என்று.

அவள் மேற்கொண்டு ''இப்ப என்ன சொல்ல வர்றீங்க?'' என்று கேட்பாள் என்று அவன் ஆவலாக எதிர்பார்த்தான்.

அதற்கு மாறாக அவள் ஒன்றுமே பேசவில்லை. 'ஏதாவது சொல்லேன் சம்யுக்தா' என்றான் சந்திரகாந்தன்.

அவள் சட்டென்று எழுந்து நின்றாள். 'நான் கிளம்பணும். மறுபடியும் இதைப் பத்தி பேசலாம்' என்று சொல்லிவிட்டு கிளம்ப எத்தனித்தாள்.

'சம்யுக்தா!'' என்றான் அவன் ஆவலாக.

''ஆறு வருஷக் கதையை அரை மணி நேரத்துல முடிச்சுட்டீங்க. எனக்கு யோசிக்கறதுக்கும் டைம் வேணும். நான் என்ன பேசணும்னு முடிவெடுக்கறதுக்கும் எனக்கு டைம் வேணும்!'' என்றாள் அவள்.

அவனுக்கும் தோளைக் குலுக்கி விட்டு 'சரி' என்று சொல்லுவதைத் தவிர வேறு எந்த வழியும் இருக்க வில்லை.

''எப்படி போகப் போறே. நான் வேண்ணா டிரைவ் பண்ணி சாரி டிராப் பண்ணி...'' என்று உளறிக் கொட்டினான்.

''நோ ப்ராப்ளம். நான் என் கார்ல தான் வந்தேன். ஐ கேன் மேனேஜ்'' என்று சொல்லிவிட்டு நகர்ந்தாள்.

அவனும் வெளியே வந்தான்.



அந்தக் கட்டிடத்தின் வாட்ச் மேனை அழைத்து ''வாட்ச் மேன்! மீட்டிங் முடிஞ்சது நீங்க க்ளோஸ் பண்ணிக்குங்க'' என்று சொல்லி விட்டு அவள் அவனைப் பார்த்து புன்னகைத்தாள்.

இந்தப் புன்னகை வாட்ச்மேனை திருப்திபடுத்து வதற்காக என்பது சந்திரகாந்தனுக்கு புரிந்தது. அவனும் அதே போல உயிர் இல்லாமல் புன்னகைத்து வைத்தான்.

அவள் சரசரவென்று நடந்து தன் காரை எடுத்தாள். அவனுக்கும் வேறு வழி இருக்கவில்லை. சரசரவென்று நடந்து தன்னுடைய காருக்கு அவனும் போனான்.

'இவ்வளவுதானே நேற்று நடந்து முடிந்தது. நடந்ததை மட்டும் தான் நான் சொன்னேன். அதற்கு பிறகு ஒரு விளக்கம் கொடுப்பதற்கு அவள் ஒரு வாய்ப்பே கொடுக்க வில்லை. எந்த இடத்திலும் ஐய்யய்யோ, அப்படியா, ஓஹோ, அடடா என்று எந்த விதமான பிரதிபலிப்பும் அவளிடம் இருக்கவில்லை.

அழுத்தக்காரியாக மாறிவிட்டாள் என்று இப்பொழுது எண்ணிக் கொண்டான்.

அவனுடைய இன்னொரு மனது கேட்டது. தவறு முழுக்க உன்னுடையதுதான் சந்திரகாந்தன். அப்பொழுதும் இப்படித்தான் திடீர் என்று ஒரு வெடியைப் போட்டாற் போல போட்டு விட்டு அவ்வளவுதான் இனிமே நமக்கு கல்யாணம் நடக்காது என்று சொல்லி விட்டு வந்து விட்டாய். அவள் பாட்டுக்கும் படித்துக் கொண்டிருந்த பெண்ணை துரத்தித் துரத்திக் காதலித்தாய் சென்னைக்கும் கோவைக்கும் ஓடி ஓடி அவள் மனதில் கனவுகளை

விதைத்து விட்டு எல்லாவற்றையும் ஒரே நாளில் கலைத்து விட்டான்.

இப்பொழுது ஆறு வருடங்கள் கழித்து திடீர் என்று அவளிடத்திலே போய் 'இதான் நடந்துச்சு. நான் உனக்கு துரோகம் செய்யலை. நான் வேற ஒரு பொறுப்பு எடுத்துகிட்டேன் அதனால தான் இப்படி நடந்து போச்சு' என்று சொல்லுகிறாய்.

இது எந்த விதத்திலும் அவள் மனத்தைக் கரைக்கச் செய்கிற ஒரு கதை இல்லை. இடைப்பட்ட காலத்தில் நான் என்ன ஆனேன் என்று நீ கவலைப்பட்டாயா? என்னுடைய மனம் என்ன வேதனைப்பட்டிருக்கும் என்று எண்ணிப் பார்த்தாயா என்றெல்லாம் அவள் கேட்டால் நீ என்ன பதில் சொல்லியிருப்பாய்.

நீயும்தான் வேதனைப் பட்டாய் அந்த வேதனையை அவளிடத்திலே சொல்லியிருக்க முடியுமா? என்று பல்வேறு விதமாக அவன் மனம் அவனிடத்திலே கேள்விகளை கேட்டது.

கொஞ்சம் டைம் வேண்டும் என்று அவள் கேட்டதற்கு பிறகு தான் மறுபடியும் ஃபோன் செய்து பேசுவதில் எந்த வித லாபமும் இல்லை என்பது அவனுக்கு புரிந்தது.

ஆகாத விஷயங்களை சிலவற்றை ஆறப்போட்டு முடிப்பதும் சிலவற்றை வேகமாக முடிப்பதும் என்று பலவிதமான உத்திகளை அவன் கையாள்வதுண்டு.ஆனால், இது அவன் மனம் சம்பந்தப்பட்ட பிரச்சினை, வாழ்க்கை சம்பந்தப்பட்ட பிரச்சினை, இதிலே அப்படியெல்லாம் எந்த முடிவுக்கும் அவனால் வர முடியவில்லை.



அலுவலகத்தில் அவனுக்கு வேலையே ஓடவில்லை. பேசாமல் விடுமுறை எடுத்துக் கொள்வதுதான் மரியாதை என்று எண்ணிக் கொண்டவனாக தன்னுடைய தனிப்பட்ட உதவியாளரை அழைத்தான். 'மோகன் சார் எனக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லை. ஐ வாண்ட் டு டேக் ரெஸ்ட் நான் வீட்டுக்குப் போறேன். ஏதாவது முக்கியமான ஃபைலா இருந்தா வீட்டுக்கு அனுப்புங்க!'' என்று சொல்லிவிட்டு வீட்டுக்குக் கிளம்பி விட்டான்.ஆனால், பாதி தூரம் போனதும் அவன் மனம் மாறி விட்டது.

வீட்டுக்குப் போய் இப்படி முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டிருந்தால் கண்டிப்பாக அம்மாவும், அப்பாவும் மாற்றி மாற்றி விசாரிப்பார்கள். உடனே மகாலட்சுமிக்கு ஃபோன் போட்டு சொல்லுவார்கள். அவள் ஒரு பக்கம் வந்து 'என்ன ஆச்சு? என்ன ஆச்சு?' என்று துளைத்தெடுப்பாள்.'

'இத்தனை பிரச்சினையும் எதற்கு?' என்று அவன் எண்ணிக் கொண்டிருக்கையிலேயே அனிச்சையாக அவன் கார் மருதமலை நோக்கிப் போனது. கீழே அடிவாரத்திலே காரை நிறுத்தி விட்டு நடந்து செல்ல ஆரம்பித்தான். மணியைப் பார்த்தான். பத்தரை மணி ஆகியிருந்தது. 'கொஞ்சம் வெயில்தான். இருந்தாலும் பரவாயில்லை' என்று நடந்து செல்ல ஆரம்பித்தான்.

எப்பொழுதும் அவன் படிகளில் செல்லுவதில்லை. முன்பெல்லாம் எப்படி அவர்கள் ஜாக்கிங் செய்யும் பொழுது மலைப் பகுதியிலே ஓடுவார்களோ அதைப் போல அந்தப் பகுதியிலேயே ஓரமாக நடந்து சென்றான்.

மனம் சஞ்சலப்படும்போதெல்லாம் இப்படி ஏதாவது வாக்கிங் ரன்னிங் என்று அவன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு அதிலிருந்து விடுபட முயற்சிப்பதுண்டு. ஆனால், அன்றைக்கு அந்த இளம் வயதிலே நண்பர்களோடும் தோழிகளோடு ஓடிய சந்திரகாந்தன் வேறு. இன்றைக்கு இருக்கிற சந்திரகாந்தன் வேறு அல்லவா. எனவே இவனைப் பார்த்த உடனே அலுவலக ஊழியர்கள் ஒன்றிரண்டு பேர் நின்று 'என்ன சார் நடந்து போறீங்க?'' என்று விசாரித்தார்கள்.

''சும்மாதான். அப்படியே நடந்தா நல்லா இருக்கும் போல் தோன்றியது'' என்று சொல்லிக் கொண்டே ஏறினான்.

அந்த இடம்! பாம்பைக் கண்டு சம்யுக்தா பயந்து நின்ற இடம். அந்த இடம் வந்தஉடனே அவன் கால்கள் தன்னை அறியாமல் நின்றன. ஓர் ஐந்து நிமிடம் அந்த இடத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டு இருந்தான்.

பிறகு என்ன நினைத்தானோ என்னவோ அங்கிருந்து ஒரு ஒற்றையடிப் பாதையிலே இருந்து படிகளில் செல்லக் கூடிய வழி இணைந்தது. அதிலே போய் இணைந்து கொண்டான்.

வேகமாகப் படிகளில் ஏறி அவன் கோவிலை அடைந்த பொழுது அங்கே அவனுக்கு அமோக வரவேற்பு நடந்தது. அது எதிலும் மனம் லயிக்காதவனாக ஆனால் அதே சமயத்தில் கோவிலுக்குள் சென்று மனம் உருகி வழிபட்டு விட்டு வெளியே வந்தான்.

வெளியிலே வந்தவன் அங்கே இருந்த ஒரு மரத்தடியிலே அமரப்போனான். உடனே அலுவலகத்தில் இருந்து ஓடி



வந்து அவனுக்கு சேர் வசதி செய்து கொடுத்தார்கள். அந்த மரத்தடியிலே அவன் சேர் போட்டு அமர்ந்து கொண்டான். செயல் அலுவலர் வந்து 'என்ன சார் விசேஷம்' என்று சற்று நேரம் அளவளாவினார். பிறகு ''நீங்கல்லாம் பார்த்து கோயிலுக்கு ஏதாவது செய்யணும்'' என்றார்.

''கண்டிப்பா!'' என்றான் சந்திரகாந்தன்.

ஏற்கெனவே அவன் கோயில் கும்பாபிஷேகத்திற்காக சில உதவிகள் செய்துதான் இருந்தான். ''ஏதாவது முக்கியமானதா இருந்தா சொல்லுங்க. கண்டிப்பா செஞ்சு தரேன்'' என்று புன்னகைத்தான்.

''என்ன சார், படி ஏறி வந்திங்கன்னு சொன்னாங்க'' என்றார் செயலர்.

''ஆமா சார், சும்மா ஃபார் எ சேஞ்ச். அப்படின்னு வச்சுக்கங்களேன். காரை கீழே நிறுத்திட்டு படியில ஏறி வந்துட்டேன்'' என்றான்.

''ரொம்ப நல்லது சார்!'' என்று அவனுக்கு பிரசாதமெல்லாம் கொடுத்தார்கள். வாங்கிக் கொண்டான்.

அவர்களே எல்லாவற்றையும் ஒரு பையிலே போட்டுக் கொடுத்தார்கள். ''சரி, நான் கிளம்பட்டுமா?'' என்று எழுந்த போது ''இருங்க சார், நானும் கொஞ்சம் கீழே வரைக்கும் ஒரு வேலையா போக வேண்டி இருக்கு. என் ஸ்கூட்டர்லேயே கொண்டு போய் விட்டுடறேன்'' என்று ஸ்கூட்டரைக் கொண்டு வந்தார் செயல் அலுவலர்.

மறுபடியும் படி இறங்கி போக வேண்டுமே என்று அவனுக்குக் கொஞ்சம் யோசனையாகத்தான் இருந்தது. அதனால் செயல் அலுவலர் கேட்டவுடனேயே அவன்

மறுக்கவில்லை. 'தாங்க் யூ சார்' என்று ஏறி அமர்ந்து கொண்டான். அவன் கீழே சென்று ஓரிரு நிமிடங்கள் செயல் அலுவலரிடம் பேசிக் கொண்டிருந்துவிட்டு தன்னுடைய காரை எடுத்துக் கொண்டு அந்தப் பாதையின் வழியே வெளியே வரும் பொழுதுதான் கவனித்தான், சம்யுக்தாவின் கார் உள்ளே நுழைந்து கொண்டிருந்தது.

ஏதோ சிந்தனையிலே இருந்த அவள் இவனுடைய காரை கவனிக்கவில்லை. அவளுடைய கார் விரைந்து மேலே ஏறியது.

சந்திரகாந்தனுடைய பார்வையும் அந்தக் காரை தொடர்ந்தது.

ஒரே நேரத்தில் இரண்டு விதமான உணர்வுகள் அவனுக்கு தோன்றின. தன் காத்திருப்புக்கு பதில் எப்பொழுது கிடைக்கும் என்று காலையிலிருந்து யோசித்துக் கொண்டிருந்ததுக்கு மாறாக இப்போதே பதில் கிடைத்த மாதிரி உணர்ந்தான்.

## அத்தியாயம் - 17

அதே இடத்தில் அமர்ந்து கொண்டிருந்தாள் சம்யுக்தா. சந்திரகாந்தனும் அவளும் முதல் முதல் சந்தித்துக் கொண்டு மருதமலைக்கு வந்து அமர்ந்து கொண்டிருந்தார்களே அந்த இடத்திலேயே இப்பொழுது அமர்ந்து கொண்டிருந்தாள்.

மலையடிவாரப் பாதையில் இருந்து பேருந்து கார் இவைகளெல்லாம் போகும் கார் பாதையில் நுழையும் போது அவளுக்கு ஏனோ சந்திரகாந்தனுடைய கார் அங்கே நிற்கிறாற்போலத் தோன்றியது.



ஆனால் அவள் தன் காரை நிறுத்த வில்லை. தொடர்ந்து ஓட்டிக் கொண்டு சென்று விட்டாள். திரும்பிப் பார்த்து அது சந்திரகாந்தனாக இருந்து விட்டால் என்ன விளக்கம் சொல்லுவது என்பது ஒரு பக்கம். திரும்பிப் பார்த்து அது சந்திரகாந்தனாக இல்லாவிட்டால் ஏற்படும் ஏமாற்றத்தை சகித்துக் கொள்ள முடியாது என்பது இன்னொரு பக்கம்.

சந்திரகாந்தனாகவே இருக்கட்டும் என்று ஆழ் மனதில் தோன்றியது. பதினொன்றரை மணி வெயிலில் அந்தத் திட்டின் மேல் உட்கார்ந்து கொண்டிருக்கிறவளை அந்த வழியாக போகிறவர்களெல்லாம் விநோதமாகப் பார்த்து விட்டு சென்றார்கள்.

அதைப்பற்றி அவளுக்கு எந்தக் கவலையும் இருக்கவில்லை. அரை மணி நேரத்துக்கு மேல் அமர்ந்திருந்து விட்டுத் திரும்பவும் காரை எடுத்துக் கொண்டு கீழே வந்தாள்.

உள்ளமெல்லாம் பல கேள்விகள் நிறைந்திருந்தன. இந்த ஆறாண்டு காலம் எவ்வளவு துன்பப் பட்டிருந்தாள். மெரினா பீச்சில் அவளை சந்திப்பதற்காக அவன் காத்துக் கொண்டிருந்த இடங்களை சந்தர்ப்ப வசத்தால் பார்க்க நேரும் பொழுது அவள் நெஞ்சில் ஈட்டியால் குத்தியது போல ஒரு வலி பிறக்குமே. இந்த வலி அவனுக்குத் தெரியுமா?

இப்போது ஆறு வருடம் கழித்து இந்த நிராகரிப்புக் கெல்லாம் விளக்கம் சொல்லியிருக்கிறான். அதிலும் நட்பா, சம்யுக்தாவா என்று வந்த பொழுது நான் நட்பைத்தான் தேர்ந்தெடுத்தேன் என்று அவன் சொன்ன போது அவளுக்கு வலித்தது வெகுவாக வலித்தது.

தன்னிடத்தில் ஒரு விளக்கம் சொல்லியிருக்கலாம். என்ன, அப்படி அந்தப் பெண்ணை வாழ வைக்க வேண்டும் என்பதற்காக இப்படியெல்லாம் பைத்தியக்காரத்தனமாகத் தியாகம் செய்ய வேண்மா? அவளை அவுட் ஹவுஸிலே கொண்டு போய் வைத்து வாழ்வித்தால்தான் வாழ்விக்க முடியுமா என்ன? எத்தனை வழிகள் இருக்கிறது அந்தப் பெண்ணுக்கு ஆதரவு கொடுப்பதற்கு? இத்தனைக்கும் மீறி தன்னிடம் சொல்லி விட்டுச் செய்கிற துணிவு வரவில்லையா? இல்லை நம்பிக்கை வரவில்லையா? என்று ஏதேதோ எண்ணிக் குழம்பிப் போனாள் சம்யுக்தா.

காரை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வருகிற வழியிலே அவள் மாலினிக்கு ஃபோன் செய்தாள். மாலினியும் வந்து சேர்ந்து கொண்டாள். இரண்டு பேருமாக கல்லூரியின் அருகிலே இருக்கக் கூடிய அந்த பொட்டானிக்கல் கார்டனில் போய் அமர்ந்து கொண்டார்கள். வரும் பொழுதே மாலினி என்ன நினைத்தாளோ என்னவோ இரண்டு தயிர் சாதப் பொட்டலங்களையும் இரண்டு சாம்பார் சாதப் பொட்டலங்களையும் வாங்கிக் கொண்டு வந்து விட்டாள்.

முந்தின நாள் இரவு சந்திரகாந்தன் தன்னிடம் பேசியதன் கருத்தை மட்டும் மாலினியிடம் சொல்லியிருந்தாள்.

இப்போது மாலினி வந்தவுடன் அவளிடத்திலே எல்லா வற்றையும் கொட்டித் தீர்த்து விட்டாள். மாலினி அமைதி யாக கேட்டுக் கொண்டாள்.பிறகு மாலினி சொன்னாள், சம்யுக்தா "இப்படி யோசிச்சுப் பாரு அந்தப் பொண்ணுக்கு ஆதரவு கொடுக்கணும்னு முடிவு எடுத்து ஆதரவு கொடுத் தாரு. அப்பவும் அவுட் ஹவுசில தான் தங்க வச்சாரு. இந்தப்



பிரச்சினையெல்லாம் ஒண்ணு இரண்டு வருஷத்துல செட்டில் ஆகியிருக்கணும். அதுக்கப்புறம் அவங்க வீட்ல கல்யாணத்தைப் பத்தி பேசியிருக்க மாட்டாங்களா. இன்னிக்கு அவருக்கு கிட்டத்தட்ட முப்பது முப்பத் தொண்ணு இருக்கணும். அவரும் யோசிச்சு இருக்க மாட்டாரா? ஏன் பண்ணிக்கலை, ஆழ்மனசில உன்னை சுமந்துக்கிட்டிருந்தாருன்னுதான் நான் நினைக்கிறேன்" என்றாள்.

அந்தக் கணத்தில் சம்யுக்தா உடைந்து போனாள்.

தன்னை மறந்து தோழியினுடைய மடியிலே முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுது தீர்த்தாள். மாலினி அவசரமாக சுற்றும் முற்றும் பார்த்தாள். நல்ல வேளையாக அங்கே ஆட்கள் அதிகமாக இருக்க வில்லை. தோழி அழட்டும் என்று விட்டு விட்டாள். அழுது முடித்து நிமிர்ந்த சம்யுக்தா மாலினி யிடத்தில் கேட்டாள் "உனக்குத் தெரியுமில்லே மாலினி? நினைக்கவும் முடியாம மனசில் இருந்து எடுத்து வீசவும் முடியாம நான் எவ்வளவு அவஸ்தைப் பட்டேன். இத்தனைக்கும் காந்தன் என்னை அலட்சியமா ஒரே நாளில் விஷயத்தை முடிச்சிட்டு போனாரு"

"................................"

"ஒரு விளக்கம். இதுதான் நடந்ததுன்னு சொல்றதுக்கு ஒரு காரணம். இதெல்லாம் எங்கிட்ட சொல்லணுங்கற ஒரு அவசியம் இதெல்லாம் அவருக்கு இல்லாம போச்சில்லே," என்றாள்.

மாலினி நீண்டதொரு பெருமூச்சு விட்டாள். எழுந்து அமர்ந்த சம்யுக்தா முகத்தைத் துடைத்துக் கொண்டு சொன்னாள்.

''ஏண்டி நீ கோயம்புத்தூருக்கு அடிக்கடி வந்தேயில்ல. உனக்கு நிலவரம் தெரிஞ்சிருக்குமில்லே? நீயாவது சொல்லியிருக்கலாமில்லே?'' என்று கேட்டாள்.

இப்போது பெருமூச்சு விடுவது மாலினியினுடைய முறையாயிற்று. மாலினி சொன்னாள். ''அவருக்குக் கல்யாணம் ஆகலைன்னு கேள்விப் பட்டேன்டி. ஆனா இவர்கள் நண்பர்கள் வட்டத்திலே அந்த கோவிந்த் இருக்கார்ல அவரை ஒரு தடவை நான் சந்திச்சேன்'' என்றாள்.

அந்த சந்திப்பு அவளுக்கு இப்பொழுது மனதிற்குள்ளே மீண்டும் வந்து நிழலாடியது.

புத்தகக் கண்காட்சிக்குப் போயிருந்தாள் மாலினி. அப்போது எதிரே கோவிந்த் வந்திருந்தான். தனியாக வந்திருந்தான். மாலினிக்கு பேசலாமா? வேண்டாமா? என்று ஒரு சந்தேகம் தோன்றியது.

'சரி, பேசி விடுவோம்' என்று 'ஹலோ கோவிந்த், நல்லாயிருக்கீங்களா?' என்றாள்.

'நல்லாயிருக்கேன். நீங்க எப்படி இருக்கீங்க?' என்று கேட்டான் அவன்.

'நானும் நல்லாதான் இருக்கேன்' என்றாள் இவள்.

'வாங்க, கொஞ்சம் வெளிய பேசுவோம்' என்று அந்தப் பக்கமாக அழைத்துக் கொண்டு போனாள். 'உங்க ஃப்ரெண்டு சம்யுக்தா எப்படி இருக்காங்க?' என்று கேட்டான்.

'சென்னையில இருக்கா. வேலையில இருக்கா. நல்ல நிலைமையில இருக்கா' என்றாள் மாலினி. எதைச் சொல்லுவது எப்படிச் சொல்லுவது என்பது தெரியாதவளாக.



கோவிந்த் ஒரு விதமாக சிரித்தான். ''நல்ல வேளைங்க. உங்க தோழி தப்பிச்சாங்க'' என்றான். மாலினி நெற்றியைச் சுருக்கிக் கொண்டு ''ஏன் அப்படிச் சொல்றீங்க,'' என்றாள்.

''என் ஃப்ரெண்டு தான். சொல்லக் கூடாதுதான் ஆனாலும் .........''என்று இழுத்தான்.

'சொல்ல வந்து விட்டாயல்லவா, சொல்லு' என்பது போல மாலினி பார்த்துக் கொண்டு நின்றாள். ''உங்களுக்குத் தெரியுமில்லே, அவன் வீட்ல அவுட்டவுஸ்ல ஒரு பொண்ணை கொண்டு வந்து வச்சிருக்கான்'' என்றான்.

மாலினிக்கு நம்பவே முடியவில்லை ''என்ன சொல்றீங்க,'' என்று கேட்டாள்.

''ஆமாங்க நாங்க நாலு பேர் வருவோமில்லே. அதுல எங்க நண்பர்தான் அருணாசலம். அவன் ஒய்ஃப் அந்தப் பொண்ணைக் கொண்டு வந்து அவுட் ஹவுஸ்ல வச்சிருக்கான். ஊருக்கெல்லாம் சிஸ்டர்ன்னு சொல்லிக் கிட்டிருக்கான். இரண்டு குழந்தையோட ரெடி மேடா எல்லா வசதியும் கொடுக்கிற மாதிரி ஒரு பொண்ணு கிடைச்சா அப்புறம் எதுக்குங்க மேரேஜ்னு ஒரு கமிட்மெண்ட். இந்த மாதிரி வயசுப் பசங்க பணக்காரப் பசங்களுக்கெல்லாம் நல்ல பெரிய கோடீஸ்வர பொண்ணு கிடைக்கிற வரைக்கும் இப்படியே ஓட்டிருவானுங்க'' என்றான் கோவிந்த்.

''ப்ளீஸ். இதையெல்லாம் எங்கிட்ட ஏன் சொல்லிக் கிட்டிருக்கீங்க'' என்றாள்.

''ஏன்னா, எங்களுக்குத் தெரியும் சம்யுக்தாவுக்கும் சந்திரகாந்தனுக்கும் இடையில என்ன இருந்துச்சுன்னு?

இந்த மட்டும் சந்திரகாந்தனுடைய புத்தி தெரிஞ்சது பாருங்க. அதனால சம்யுக்தா தப்பிச்சுட்டாங்க. அதனால இதைப் பத்தி நினைக்காம நிம்மதியா ஒரு நல்ல பையனை கல்யாணம் பண்ணிக்க சொல்லுங்க உங்க தோழியை!'' என்றான் கோவிந்த்.

மாலினி ''ரொம்பத் தாங்க்ஸ். நான் வரேங்க!'' என்று சொல்லிக் கொண்டு அவனிடத்திலே இருந்து அவசரமாக விடைபெற்றுக் கொண்டு சென்று விட்டாள். அந்தக் காலகட்டத்தில் அந்த வாரம் முழுவதும் மாலினி இந்த செய்தியை சம்யுக்தாவிடம் சொல்லலாமா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருந்தாள்.

ஒரு கட்டத்தில் அவன் உனக்கும் எனக்கும் திருமணம் இல்லை என்று சம்யுக்தாவிடம் சொல்லி விட்டுப் போய் விட்டான். அதற்குப் பிறகு அவனுடைய அவலங்களைப் பற்றி சொல்லிக் கொண்டிருப்பதிலே என்ன பலன் என்று முடிவுகட்டிக் கொண்டவளாக இந்த விஷயத்தைச் சொல்லவே இல்லை. ஆனால் உள்ளூர அவளுக்கு ஒரு விடுதலை உணர்வு ஏற்பட்டது.

ஏதோ காரணத்திற்காகத்தான் கடவுள் சம்யுக்தாவையும், சந்திரகாந்தனையும் பிரித்திருக்கிறார் போலும் என்று தன்னளவிலே அவள் மகிழ்ச்சி அடைந்தாள்.

இப்பொழுது அதை நினைவில் கொண்டு தோழியிடம் பகிர்ந்து கொண்டாள். ''இப்படி ஒரு நியூஸ் நான் கேள்விப் பட்டேன்டி.. அதனால தான் நான் அதைப் பத்தி உன்கிட்ட சொல்லலை!'' என்றாள்.



பேசிப் பேசி தோழிகள் இருவருக்கும் என்ன முடிவெடுப்பது என்று தெரியவில்லை ''இப்ப நாம என்ன செய்யணும்டி?'' என்றாள் சம்யுக்தா.

''இத்தனையும் அவர் சொன்னாரு. அதுக்கு மேல நீங்க இணையறதைப் பத்தி ஏதாவது சொன்னாரா,'' என்று கேட்டாள் மாலினி.

''இல்லையே, அவரு மேற்கொண்டு பேசறதுக்குள்ள தான் நான் கொஞ்சம் டைம் வேணும்னு சொல்லிட்டு வந்துட்டேனே'' என்றாள்.

மாலினி சம்யுக்தாவிடம் சொன்னாள். ''இப்ப எனக்கென்னமோ நீங்க ரெண்டு பேருமா பேசித் தீர்க்க வேண்டிய விஷயம்னு எனக்கு தோணுது. அவரு அப்ப அப்படி சொல்லிட்டாலும் அவராலும் மறக்க முடியலைன்னு எனக்கு தோணுது. நீயும் மறக்க முடியாமத்தானே இத்தனை நாள் அப்பா அம்மா எடுத்த எந்த முடிவுக்கும் சிக்காம தப்பிச்சிட்டு இருந்தே. ஏதோ ஒரு உள்ளுணர்வு உங்க ரெண்டு பேரையும் வழி நடத்தியிருக்கு. அதே உள்ளுணர்வுகிட்டே நீ கேளு.

''---------''

''சந்திரகாந்தன் கிட்ட பேசின வரைக்கும் அவரு இடத்தில உண்மை இருக்கா அப்படின்னு யோசிச்சுப் பாரு. உண்மை இருக்கிற மாதிரி தெரிஞ்சதுன்னா மறுபடியும் ஒரு சிட்டிங் பேசு. இதை நீங்கதான் பேசித் தீர்த்துக்கணும். வேற யாரு தலையிட்டாலும் நல்லா இருக்காது சம்யுக்தா'' என்றாள் மாலினி.

சம்யுக்தா நீண்டதொரு பெருமூச்சு விட்டாள். ஆனால் தோழியிடம் அழுது முடித்ததற்குப் பின்பு மனத்திலே ஒரு அமைதி தோன்றியது. நிதானமாக சிந்திப்பதற்கான ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருந்தது.

இதற்கெல்லாம் முடிவு கட்ட வேண்டும் என்றால் ஒரே வழி மறுபடியும் சந்திரகாந்தனை சந்திப்பதுதான் என்றிருந் தாள். ஆனாலும் நட்பா, சம்யுக்தாவா என்று வந்த பிறகு நட்பு தான் என்று அவன் முடிவெடுத்து தன்னை இரண்டாம் பட்சமாக நினைத்தான் என்று கோபம் கோபமாக வந்தது. அந்தக் கோபத்தை எப்படி ஆற்றிக் கொள்ளுவது என்று அவளுக்கு தெரியில்லை.ஆனால் அது சந்திரகாந்தனுக்கு தெரிந்திருந்தது. அதை அவன் அடுத்த சந்திப்பில் நிரூபிக்கவும் செய்தான்.

## அத்தியாயம் - 18

புகைவண்டியின் சத்தம் ஒரு வகையில் சுகமாகத்தான் இருந்தது. அதன் ஆட்டம் தாலாட்டுப் போல் இருந்தது சம்யுக்தாவிற்கு. அதிலும் இந்தப் பயணம் அவள் எதிர்பாராத பயணம்.

சந்திரகாந்தனிடம் பேசி விட்டு வந்ததற்குப் பிறகு அன்று இரவு எட்டு மணிக்கு சுவாமிநாதன் அழைத்தார் ஃசெல் போனில். "அம்மா, நாளைக்கு அவசரமாக ஒரு மீட்டிங் இருக்கு. காலையில ஆறு மணிக்கு ஃப்ளைட். சென்னைக்கு நீங்களும் வர்றீங்க. ஜஸ்ட் ஒன் டேதான். அங்க போயிட்டு ரிட்டன் எப்படின்னு ப்ளான் பண்ணிக்கலாம்" என்றார்.

"ஓ... அப்படியா சார்!" என்றாள் அவள்.



"ஏம்மா, அந்த நேரத்துல வர்றதுல ஏதாவது அப்ஜெக்ஷன் இருக்குமா?" என்று கேட்டார்.

"இல்லை சார். அதெல்லாம் ஒண்ணும் இல்லை. நான் அப்பா அம்மாகிட்ட சொல்லிடறேன்" என்றாள். அலுவலக விஷயங்களை ஒன்றிரண்டு அவர் பேசியதற்கு பிறகு ஃபோனை வைத்தாள்.

அவர் அவசரமாகக் கூப்பிட்டதிலிருந்து மறுநாள் மீட்டிங் முக்கியமான மீட்டிங் என்று அவளுக்குப் புரிந்தது. எனவே அன்றிரவு முழுவதும் அந்த மீட்டிங் தொடர்பான விஷயங் களில் அவள் மனம் ஓடிக் கொண்டிருந்தது. அதனாலோ என்னவோ சந்திரகாந்தனுடைய அந்த அதி முக்கியமான சந்திப்பு கொஞ்சம் பின்னுக்கு தள்ளி வைக்கப்பட்டது.

இத்தனை நாளையும் அவள் வேலைக்கு முக்கியத்துவம் கொடுத்துத்தானே கழித்தாள்? தற்போதைய காலத்தில் இளைஞர்கள் தோல்வி என்றால் துவண்டு விடுகிறார்கள்.

அதிலும் அவளுடைய தோழி ஒருத்தி அவளுக்கு ஏற்பட்ட காதல் தோல்வியின் காரணமாக தற்கொலை செய்து கொண்டாள். அதைக் கேள்விப்பட்டவுடன் சம்யுக்தா அனுதாபப்படவில்லை. மாறாக கோபப்பட்டாள்.

வாழ்க்கையில் யாருக்கு இல்லை பிரச்சினைகள் திரும்பிப் பார்த்த பக்கமெல்லாம் பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கிறது. எத்தனையோ சாதாரண குடும்பங்களில் சர்சம மாக பிரச்சினைகளை சமாளித்துக் கொண்டு வாழ்கிற பெண்கள் இருக்கிறார்கள்.

அவளுடைய உறவினர் ஒருவர் அவளுக்கு நினைவுக்கு வந்தது. படிப்பறிவு இல்லாத பெண்மணி. ஆனால்

அவளுடைய குழந்தைகள் நான்கு பேருமே அவளுக்கு உபயோகம் இல்லாமல் போனார்கள். படிப்பிருந்தும் பண்பாடு கெட்டுப் போனாள் ஒருத்தி. இரண்டு மகன்களும் குடி, சூதாட்டம் என்று அதிலேயே மூழ்கிப் போனார்கள். ஓரளவுக்கு ஒத்து வரக்கூடிய இன்னொரு பெண் இளம் வயதிலேயே விதவையாகிப் போனாள். இத்தனையும் மீறி அந்தத் தாய் தன் வீட்டிலேயே ஏதோ வியாபாரம் செய்து கொண்டு புடவைகள் வியாபாரம் செய்து என்று வாழ்க்கையை நடத்திக் கொண்டு தான் இருந்தாள்.

சில நேரங்களில் சிரிக்கச் சிரிக்கப் பேசுவாள். அதெல்லாம் இப்பொழுது அவளுக்கு நினைவுக்கு வந்தது. தன் தோழியின் மீது கடுமையான கோபம் ஏற்பட்டது. இந்த வாழ்க்கை இறைவன் கொடுத்தது. இது தோல்வியோ வெற்றியோ வாழ்ந்து பார்க்க வேண்டியது நம் கடமை. உயிரை மாய்த்துக் கொள்வதற்கு யாருக்குமே உரிமை இல்லை என்று அவள் எண்ணினாள்.

இத்தனைக்கும் அந்த காலகட்டம் சந்திரகாந்தன் அவளை நிராகரித்த காலகட்டம். அப்போதுதான் அவள் முடிவெடுத்துக்கொண்டாள். காதல் என்பது வாழ்க்கையின் ஒரு பக்கம்தான். சந்திரகாந்தன் அவளுடைய வாழ்க்கையின் முக்கியமான ஒரு நபராகத்தான் வந்தான். ஆனால் விருப்பப் பட்டோ விருப்பப் படாமலோ அவளுடைய வாழ்க்கை நாடகத்திலிருந்து ஒதுங்கிக் கொண்டு விட்டான்.

கடந்து போன விஷயங்களை அலசி ஆராய்ந்து பார்த்து சோர்ந்து அமர்ந்து கொள்வது என்பது செத்துப் போனவனுக்கு ஜோசியம் பார்ப்பது போல என்று அப்போதே பலதும் யோசித்து ஒரு முடிவெடுத்துக் கொண்டாள். இது ஒரு பெரிய துக்கம்தான். நிறைய கனவுகள் இருக்கத்தான் செய்தன. ஆனால் இதை நான் கடப்பேன். நல்ல வேலையாக எனக்கு ஒரு தொழில் இருக்கிறது. படிப்பு இருக்கிறது. இதிலே ஆர்வமாகி சாதனைகள் செய்யாவிட்டாலும் நல்ல பெயர் எடுக்கவாவது முயற்சி செய்வேன் என்று அப்பொழுது அவள் உறுதி எடுத்துக் கொண்டாள். அதற்குப் பிறகு வந்த ஆறு மாதங்கள் அவள் கடுமையாக உழைக்க ஆரம்பித்தாள்.

அந்த உழைப்பு அவள் வேலை செய்த கம்பெனியில் அவளுக்கு மிக நல்ல பெயரைத் தேடித் தந்தது. ஒரு நாள் அவளுடைய மேலாளர் கூட அவளை அழைத்து அவளிடம் அறிவுரை சொன்னார். "நீ ஏதோ ரொம்ப ஓவரா உழைக்கிற மாதிரி தெரியுது. ஏம்மா அப்படி? இல்லை வேறு ஏதோ ஒரு பிரச்சினையில் இருந்து விடுபடுவதற்காக, தப்பிப்பதற்காகவும் நீ இப்படி கடுமையான உழைப்பை மேற்கொள்றியோன்னு எனக்கு சந்தேகமாக இருக்கு" என்றார்.

தன் எண்ணத்தை அவர் கண்டுபிடித்து விட்டதில் அவளுக்குக் கொஞ்சம் அதிர்ச்சியாக இருந்தது. அவர் எவ்வளவு அனுபவ சாலி. எத்தனை பேரை பார்த்திருப்பார் என்று எண்ணிக் கொண்டாள். மறுப்பதில் பிரயோசனமில்லை என்று எண்ணிக் கொண்டவளாக 'கொஞ்சம் அப்படித்தான் சார்!' என்றாள்.

"பொதுவா இந்த வயசா இருந்தா அது லவ் பெயிலியரா இருக்கலாம். அல்லது வேறு ஏதாவது இருக்கலாம். அது உன்னோட பர்சனல் ப்ராப்ளம். இப்படி ஓவரா ஒடினீன்னா ஒரு நாள் ஒடிஞ்சு விழுந்துடுவே. உழைக்கணும்தான். ஆனால் திட்டம் போட்டு ரொம்ப

நான் லாங் ரன்ல தாங்கற மாதிரி உழைக்கணும்மா. அதுதான் புத்திசாலித்தனம்'' என்றார்.

மேலும் சில அறிவுரைகள் கூறினார். ''தியானம் பண்ணும்மா. மனசு அமைதிப்படும். வாழ்க்கையைச் சந்திச் சத்தாம்மா ஆகணும். அதைச் சந்தோஷமா சந்திக்கணும். ஒரு வேள்ளை உன் வாழ்க்கையில் வந்துட்டுப் போனது யாருன்னு எனக்குத் தெரியாது. அவனுக்கு உன்னோட வாழத் தகுதியில்லையோ என்னவோ நீ கிடைக்கலைன்னு தான் வருத்தப்படணும். விட்டுடும்மா'' என்று ஆறுதல் சொன்னார். அதற்குப் பிறகு அவளை ஒரு மகளைப் போல பார்த்துக் கொண்டார்.

வாழ்க்கையில் சந்திப்பதற்கும் மேலெடுத்துச் செல்லு வதற்கும் நிறைய அறிவுரைகளை வழிகாட்டுதல்களையும் அவர் கொடுத்தார். அதனாலோ என்னவோ அந்த அலுவல கத்திலே அவள் தொடர்ந்து ஆறு ஆண்டுகள் பணி செய்தாள்.

சமீபத்தில் அந்த சிறந்த மனிதன் இந்த உலகை விட்டுப் பிரிந்தார். அதற்குப் பிறகு அவளுக்கு அங்கே பணி புரிவதில் ஆர்வம் குறைந்தது. அவர் மகன்களுடைய பொறுப்பில் அலுவலகம் வந்தது. அவளுக்கு ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை என்றாலும். வெளியே வந்து விடலாமா? என்று அவள் யோசித்துக் கொண்டிருந்த பொழுதுதான் அப்பாவுக்கு மாற்றலாகி கோவைக்கு வந்தார்கள். இவளும் கோவைக்கு வந்து விட்டாள்.

அந்த வேலைத்திறனும் அந்தத் திட்டமிடலும் அவரிடத்தில் இருந்து இவளுக்கு வந்திருந்தது. கம்பார்ட்மெண்டல்



சிஸ்டம் என்று ஆங்கிலத்திலே சொல்லுவார். மனதை பகுதி பகுதியாக பிரித்துப் போட்டுக் கொள்ளுவது. அந்த வேலை என்ற பகுதியில் அவள் நுழைந்து விட்டால் மற்ற எல்லா பகுதிகளையும் சுழட்டி வைத்து விடுவாள். அது போல இன்றைக்கும் அவளுக்கு வேலையில் சிந்தனை போனதால் சந்திரகாந்தன் ஸ்லோ மோஷனில் பின்னாலே போகிற ஒரு காட்சியைப் போல ஒதுக்கப்பட்டான்.

ஆனால் திரும்பிப் புகை வண்டியில் வரும் பொழுது மீண்டும் அவனுடைய நினைவுகள் தலையெடுத்தன.

ஏதோ நல்ல காரணத்துக்காகத்தான் அவன் தன்னைப் பிரிந்திருக்கிறான். இன்னும் கூட விளக்கம் கேட்டால் சந்திரகாந்தன் சொல்லக் கூடுமோ ஆனால் ஒரு விஷயத்தில் அவளுக்கு பெருமையாக இருந்தது. அவனாலும் தன்னை தூக்கி எறிந்து விட முடியவில்லை. ஆறு ஆண்டுகள் வேறு ஒரு பெண்ணை ஏறெடுத்துப் பார்க்கிற ஒரு முயற்சியைக் கூட அவன் செய்ய வில்லை என்பது தெரியும் பொழுது மனசுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

தனக்காக ஒரு இடம் அங்கே இருந்திருக்கிறது. அவனும் போராடிக் கொண்டுதான் இருந்திருக்கிறான் என்கிற பொழுது முதலில் எழுந்த கோபம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து போனது. ''அடடா, இரண்டு நாட்கள் டைம் சொன்னோம். நேற்றே அவனை சந்தித்திருக்க வேண்டும்'' என்று வருத்தப்பட்டுக் கொண்டாள்.

திடீரென்று சொல்லாமல் கொள்ளாமல் வந்துவிட்டோம் ஒரு வேளை அவனை அவாய்ட் செய்கிறோம் என்று நினைத்திருப்பானோ என்ற எண்ணம் கூட அவளுக்கு தோன்றியது.

எது எப்படியிருந்தால் என்ன பிரச்சினையை சந்தித்துத் தான் ஆக வேண்டும். இருக்கட்டுமே? ஆறு ஆண்டுகளுக்கு முன் தன்னை நிராகரித்த போது தன்னுடைய வலி எப்படி இருந்திருக்கும் என்பதில் ஒரு சின்ன சாம்பிளாவது அவனுக்குத் தெரியட்டுமே என்று ஓரத்தில் ஒரு உரிமைக் கோபமும் எழுந்தது.

திரும்பிப் படுத்தாள். எதிரிலே அவளுடைய தோழி ஒருத்தி லோயர் பர்த்திலே படுத்துக் கொண்டிருந்தாள். டிரெயினில் அவளை சந்தித்தாள். பழைய கல்லூரி நாட்களைப் பற்றி பேசிக் கொண்டு வந்தார்கள். அதனால் படுப்பதற்கே பன்னிரண்டு மணி ஆகி விட்டது. பொழுது உற்சாகமாகத்தான் கழிந்தது.

கல்லூரி நாட்கள் என்றவுடனேயே அவளுக்கு மீண்டும் சந்திரகாந்தன் வருகை தந்த நாட்கள், அவர்கள் சுற்றிய இடங்கள் எல்லாம் நினைவுக்கு வந்தது.

ஒரு நாள் பாம்புப் பண்ணைக்கு அழைத்துப் போயிருந்தான். அந்த சீ வால்ட்ரஸ் இருந்த அந்த குளத்திற்கு வந்தவுடனேயே அடித்த துர்நாற்றத்திலே அவள் மூக்கைப் பிடித்துக் கொண்டு அந்தப் பக்கம் நகர்ந்ததைப் பார்த்து அவன் சிரித்த சிரிப்பு இப்போது நினைவுக்கு வந்தது.

பாம்புபண்ணைக்காரர்கள் பாம்பைக் கையிலே பிடித்துக் கொண்டு ஒவ்வொன்றுக்கும் விளக்கம் சொல் வதைப் பார்த்து அவள் வாயைப் பிளந்து கொண்டு கேட்ட தையும் ''ஐய்யோ, என்ன காந்தன் இப்படியெல்லாம் பாம்பு வகை இருக்கா,'' என்று அவள் ஆச்சரியப்பட்டதும் இப்போது நினைவுக்கு வந்தது.



''எத்தனையோ ஆயிரக்கணக்கான பாம்பு வகைகள் இருக்குதாம். இவங்களுக்கு கிடைச்சது இவ்வளவாத்தான் இருக்கலாம். இன்னும் ஆப்பிரிக்க காடுகளில் ஏன் நம்மூர் மலைப் பகுதியிலே நிறைய இருக்குன்னு சொல்லுவாங்க. அவ்வளவு ஏம்பா நம்ம கோயம்புத்தூர் வெள்ளிங்கிரி மலைப் பகுதியிலே நானே மலைப்பாம்பு பார்த்திருக்கேன்'' என்றான் சந்திரகாந்தன்.

''நீங்க ஏதாவது கண்ணாடியில் பார்த்திருப்பீங்க'' என்றாள் அவள் அலட்சியமாக. சுவாரசியமாக பேசிக் கொண்டிருந்தவன் அவளுடைய அந்த அலட்சியமான கமெண்டைக் கேட்டு சட்டென்று நிறுத்தி திரும்பிப் பார்த்து சிரித்தது இப்போது நினைவுக்கு வந்தது. அந்தச் சிரிப்பு ஒரு மாதிரியாக இருந்தது. ''இதென்ன சிரிப்பு,'' என்றாள் அவள்.

''மலைப்பாம்பு ஒரு ஆளைத் தூக்கினா எப்படி இருக்கும் தெரியுமா,'' என்று அவன் மறுபடியும் 'ஆஹாஹா!' என்று சிரிக்க அவளுக்கு முகம் சிவந்து போனது.

'ச்சே, நல்லதே பேச மாட்டீயா' என்று இவள் கடிந்து கொண்டாள்.

''நான் என்ன சொன்னேன். மலைப் பாம்பு ஆளைச் சுத்தினா நெறிச்சிடும்னு சொன்னேன்''

அவள் உடனே ''பப்ஸ் வாங்கலாமா? சமோசா சாப்பிட லாமா?'' என்று பேச்சை மாற்றினாள்.

அதற்கும் அவன் கடகடவென சிரித்தான். அந்தப் பாம்புப் பண்ணையிலே இருந்த கடையிலே தின் பண்டங்கள் வாங்கிக் கொடுத்தான். அங்கிருந்து அந்த

மெயின் ரோட்டுக்கு வருகிற வரையிலும் அவர்கள் இரண்டு பேரும் கையிலே அந்த திண்பண்ட பாக்கட்டு களை வைத்துக் கொண்டு கொரித்துக் கொண்டும் விளை யாடிக் கொண்டும் வந்ததெல்லாம் இப்பொழுது அவளுக்கு நினைவுக்கு வந்தது.

அப்படியே உறங்கி விட்டாள். "ஏய் சம்யுக்தா. எழுந்திரு எழுந்திரு" என்று தோழி அவசரமாக உலுக்கவும் தான் விழித்தாள். "இருகூர் தாண்டிடுச்சு. வடகோயம்புத்தூர் வரப்போகுது. எழுந்திரு எழுந்திரு" என்று அவள் விரட்டினாள்.

அவசரமாக எழுந்து அவசரமாகச் சென்று அந்த வாஷ்பேஸினில் முகத்தை கழுவிக் கொண்டு தன் ஹேண்ட் பேக்கை எடுத்துக் கொண்டு தயார் ஆனாள்.

புகை வண்டி மெல்ல ரயில்வே ஸ்டேஷனுக்குள் நுழைந்தது. அவள் ஹேண்ட் பேக்கை எடுத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள். மெல்ல இறங்கும் பொழுதுதான் சுற்றும் முற்றும் பார்த்தாள். அவளது கம்பார்ட் மெண்ட்டுக்கு நேர் எதிராக சந்திரகாந்தன் நின்று கொண்டிருந்தான்.

சம்யுக்தா ஒரு நிமிடம் தன் கண்களை நம்ப மறுத்தாள். இரண்டு கண்களையும் படபடவென்று கொட்டிக் கொண்டு பார்த்தாள். சந்திரகாந்தன்! அவனே தான் ஆறு ஆண்டுகள் முன்பு திடீர் திடீரென்று இப்படி வந்து நிற்பானே அது போல வந்து நின்றான்.

கட்டம் போட்ட சட்டை ஜீன்ஸ் அணிந்து கொண்டு அவளை ஆழப் பார்த்துக் கொண்டு நின்றான். ஹேண்ட் பைக்கை எடுத்துக் கொண்டு இறங்கினாள் சம்யுக்தா.



ஓடிப் போய் அவனது மார்பில் சாய்ந்து கொண்டு அவனைக் கட்டிக் கொள்ள வேண்டும் என்று எழுந்த எண்ணத்தை மிகவும் சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டாள். அவனும் தன் உணர்ச்சிகளை கட்டுப் படுத்திக் கொண்டு நின்று கொண்டிருந்தான்.

இறங்கி நின்ற அவளை நோக்கி அவன் மெல்ல அடியெடுத்து வைத்து வந்தான்.

## அத்தியாயம் - 19

"நீங்க, நீங்க......!" என்று அவள் தயங்கினாள்.

"நான் தான். உன்னை கூட்டிட்டுப் போறதுக்குத்தான் வந்திருக்கேன்!" என்றான் சந்திரகாந்தன்.

அவளுடைய ஹேண்ட் பேக்கை கையில் எடுத்துக் கொண்டான். அவளைத் தொடர்ந்து நடந்தான்.

"இல்லை, நான் இன்னைக்கு வர்றது யாருக்குமே தெரியாதே?" என்றவள் சட்டென்று உணர்ந்தாள். மாலினிக்கு மட்டும் சொல்லியிருந்தாள்.

அதனால் மாலினி சொல்லியிருப்பாளோ என்று தோன்ற அவனைப் பார்த்தாள். "அதே தான், மாலினி தான் சொன்னாப்ல" என்று அவன் குறும்பாக சிரித்தான்.

"அப்பா அம்மாவுக்கு கூட சொல்லலை. மாலினிக்குத் தான் நேற்று சொன்னேன்" என்றாள் அவள்.

"அதனால தான் மாலினி எங்கிட்ட சொன்னாப்ல. காலையிலே போய் ரிசீவ் பண்ணிடுங்க அப்படின்னு"

"ஓ!" என்றாள் அவள்.

அவன் மறுபடியும் அவளைப் பார்த்து சிரித்துவிட்டு ஒன்றும் பேசாமல் வேகமாக நடந்தான். அவனுடைய காரில் சென்று டிக்கியில் அந்த ஹேண்ட் பேக்கை வைத்து விட்டு அவன் முன்னே வந்து அமர அவளும் அமர்ந்தாள்.

''ஏன் சமி? காபி, டீ ஏதாவது?'' என்றான்.

அவளுக்குள் திடீர் என்று ஒரு சிலிர்ப்பு ஓடியது. முன்பெல்லாம் அவர்கள் தனிமையாக இருக்கும்பொழுது அவளுடன் ஏதாவது குறும்பு பேசும்பொழுது அவன் சமி என்று அழைப்பான்.

''ம் .காஃபி குடிச்சா நல்லாத்தான் இருக்கும்!'' என்றாள் அவள்.

அவன் வழியிலே அன்னபூர்ணா ஹோட்டலுக்கு அருகில் வண்டியை நிறுத்தினான்.

இரண்டு பேரும் சூடாக காபி சாப்பிட்டு விட்டு இறங்கி வந்தார்கள்.

''அதென்னமோ தெரியலை இந்த அன்னபூர்ணாவுல காஃபி சாப்பிட்டா இரண்டு மணி நேரத்துக்கு பசிக்கறதில்லை'' என்றாள் சம்யுக்தா ஏதோ பேச வேண்டும் என்பதற்காக.

அவனும் மறுக்க வில்லை.

கார் மெதுவாக நகர்ந்தது. நகர்ப்புறத்தை தாண்டியவுடனேயே அவன் ஒரு ஓரமாக காரை நிறுத்தினான். ''எதுக்கு இப்ப காரை நிறுத்தினீங்க?'' என்று தடுமாறினாள்.

''இல்லை சமி, உங்கிட்ட பேசணும்''

''நீ பாட்டுக்கு இரண்டு நாளா ஒரு தகவலும் சொல்லாம ஊருக்கு போயிட்டே. கோபமா என்ன ஏதுன்னு தெரியாம நான் தவிச்சுப் போயிட்டேன். நல்ல வேளை. நேத்து



பொறுக்க முடியாம மாலினி கிட்ட பேசினேன். மாலினி விவரம் சொல்லுச்சு. அஃபிஷியலா போயிருக்கே. நீயே அன் எக்ஸ்பெக்டடா தான் போயிருக்கே அப்படின்னு. அப்புறமாத்தான் எனக்குக் கொஞ்சம் மனசு ஆறுச்சு. நான் பேசற விதத்தைப் பார்த்துதான் மாலினி சொல்லுச்சு நாளைக்கு காலையில வர்றாப்ல நீங்களே போய் ரிசீவ் பண்ணிடுங்கன்னு''.

''ஓ!'' என்று அவள் அமைதியாக.

''நிறுத்திட்டு பேசணுமா? அப்படியே கொஞ்சம் மெதுவா போலாமே. எனக்கு முதல்ல வீட்டுக்கு போய் குளிக்கணும்'' என்றாள் அவள்.

''சரி, நானே உங்க வீட்ல கொண்டு போய் விடறேன். குளிச்சிட்டு எங்கே மீட் பண்ணலாம்னு சொல்லு. ஒரு ஹ அவர்ஸ் டைம் போதுமா?''

அவள் அவனை முறைத்தாள். ''என்ன முறைக்கிறே?'' என்றான் அவன்.

''ஹலோ, ஆறு வருஷம் அட்ரஸ் இல்லாம இருந்துட்டு இப்ப வந்து திடீர்னு இரண்டு மணி நேரத்துல உங்களுக்கு நான் பதில் சொல்லணுமா?'' என்றாள் அவள்.

அவன் அவளை ஆழ்ந்த வேதனையுடன் பார்த்தான்.

''சமி, இந்த ஆறு வருஷம் நான் எப்படி தவிச்சேன்னு எனக்குத்தான் தெரியும். ஒவ்வொரு நாளும் நரகமாகத்தான் இருந்துச்சு தெரியுமா?''

அவள் அமைதியானாள். ''சரி வாங்க, வீட்ல கொண்டு போய் விட்டுட்டு ஒரு ஹ அவர்ஸ் டைம் கொடுங்க நான் ரெடியாகி வந்துடறேன்'' என்றாள்.

''எங்க வச்சுப் பேசலாம்? உங்க ஆபீஸ் கெஸ்ட் அவுஸ்லேயே!'' என்றாள் அவள் வேறு பக்கம் பார்த்துக் கொண்டு.

இதற்கு முன்பு சந்திக்கும் பொழுது அவள் அவன் ஆஃபிஸ் கெஸ்ட் ஹவுஸுக்கு வர மறுத்தது அவனுக்கு நினைவுக்கு வர லேசாக புன்னகைத்தான்.

முகம் விகசிக்க அவன் புன்னகைக்கும் போது அது மிகவும் அழகாக இருக்கும். ''ஓகே டன்!'' என்று அவன் சந்தோஷமாக சிரிப்பதை பார்த்து விட்டு அவள் பாராதவள் போல் பின்னாலே திரும்பிக் கொண்டாள்.

கார் இப்போது வேகம் எடுத்தது. ஓரக் கண்ணால் அவனைப் பார்த்தாள்.

ஆறு வருடங்களுக்கு முன்பு ஒரு இளமைத் துள்ளல் இருந்தது.

இப்போது அவனிடத்திலே கம்பீரமும் அழகும் கூடியிருந்தது மட்டும் அல்லாமல் ஒரு அமர்த்தலான கண்ணியம் வந்திருப்பது கூட அவளுக்குத் தெரிந்தது.

அவன் காரை ஒட்டிக் கொண்டே ''என்ன அளவெடுத்தாச்சா?'' என்றான்.

அவள் முகம் சிவக்க முகத்தைத் திருப்பிக் கொண்டு ''இல்லை. இப்போது மெச்சூர்ட். மாதிரி தெரியறீங்க'' என்றாள்.

''ஓஹோ அப்ப மெச்சூரிட்டி இல்லைன்னு சொல்றீங்களாக்கும்?!'' என்றான் அவன்.

''யு ஆர் ரீடிங் பிட்வீன் த லைன்ஸ். நான் எதுவுமே சொல்லலை'' என்றாள்.



அவன் மெல்லத் திரும்பி அவளைப் பார்த்தான். ''சமி இப்ப ஆக்சுவலா உன்கிட்ட பேசறதுக்கே எனக்கு பயமா இருக்கு தெரியுமா??''

''ஏனாம்?'' என்றாள் அவள்.

''உங்கிட்டயும் ஒரு கம்பீரம். ஆழ்ந்த அறிவு. எதிராளியைக் கணக்குப் போட்டு அப்புறம் பேசறது இதெல்லாம் வந்திருக்கு'' என்றான் அவன்.

''எப்படிக் கண்டுபிடிச்சீங்களாம்?'' என்றாள் அவள்.

''அதான் ஆஃபீஸ்ல பார்த்தேனே. நீ முதலாளிக்கு சஜெஷன் கொடுக்கறதையும் அவரு உடனே தலையாட்டி ஏத்துக்கறதையும். அவரு குடுக்கற மதிப்பைப் பார்த்தாலே தெரியுதேம்மா. சாமிநாதன் சீக்கிரம் ஆட்களை எடை போட்டுடுவாரு தெரியுமா?'' என்றான்.

''அதெல்லாம் சரி. அவருகிட்டயும் ஏதாச்சும் உளறி வச்சிங்களாக்கும்?'' என்றாள் அவள்.

அவன் கடகடவென்று சிரித்தான். ''நம்மளை மாதிரி எத்தனை பேரை பார்த்திருப்பாரு மனுஷன். கொஞ்சம் புரிஞ்சுக்கிட்டாருன்னுதான் நினைக்கிறேன். ஜாடை மாடையா கேட்டாரு. என்னப்பா இப்படின்னு''

''நானும் கொஞ்சம் ஜாடை மாடையா சொன்னேன். இப்ப இல்லை சார் அந்த காலத்துலயே ஆரம்பிச்ச நட்புன்னேன்''.

''ஐய்யய்யோ. அவருகிட்ட சொல்லிட்டீங்களா?'' என்றாள் அவள்.

"முழுசா சொல்லலை அம்மா. அந்த மனுஷன் ஜாடை மாடையா சொன்னதை வச்சு புரிஞ்சுட்டு எப்படியோ ரெண்டு மூணு தடவை நம்பளை சந்திக்க வச்சுட்டாரு பார்த்தியா,"

"ஓஹோ, அவரும் இந்த சதியில கூட்டா?" என்றாள்.

"ஆமா, இந்த அழகான சதியில யாரு வேண்ணாலும் கூட்டா இருக்கலாம் ரொம்ப என்ஜாயபிளா இருக்கும்" என்றான் அவன்.

அவள் ஒன்றும் பேசவில்லை. வெளியிலே பார்த்தாள்.

ஆனால், அவன் முன்னேயும் பின்னேயும் பார்த்துவிட்டு போக்குவரத்து குறைவான இடத்திலே நிறுத்தினான். "சமி, ப்ளீஸ் விரிவா பேசறதெல்லாம் அப்புறம் பேசிக்கலாம். எனக்கு ஒரே ஒரு சிக்னல் கொடு" என்றான்.

"என்னவாம்," என்றாள் அவள்.

"பாசிடிவ் தானே," என்றான்.

"நாங்க மட்டும் அவ்வளவு சீக்கிரம் சொல்லிடுவோமா," என்றாள் அவள். அவன் தொடர்ந்து ஒன்றும் பேசக் காணோமே என்று திரும்பிப் பார்த்தாள்.

அவன் தன் நேசப் பார்வையை வீசிக் கொண்டு ஆழமாக அவளைப் பார்த்து அமர்ந்திருந்தான்.

சம்யுக்தாவுக்கு திணறலாகப் போய்விட்டது. "இது என்ன பார்வை," என்றாள்.

"இது தான் நான் பார்க்க வேண்டிய பார்வை. ஆறு வருஷமா மிஸ் பண்ணின பார்வை. மடத்தனமாக வாழ்க்கையை தொலைச்ச பையன் யாராவது இருந்தால்



அது நானாகத்தான் இருக்கும் என்றபடி ஏய் சமி இப்ப ரொம்ப அழகா இருக்கே தெரியுமா?" என்று குரல் குழைய அவளைப் பார்த்தான்.

அவள் சட்டென்று தலையைக் குனிந்து கொண்டாள்.

"ப்ளீஸ் சந்திரகாந்தன். இது என்ன ரோட்ல வச்சுட்டு? போலாம்" என்றாள் அவள்.

அவன் மறுக்கவில்லை மீண்டும் காரை எடுத்தான். "ஹலோ, நான் ஒண்ணு சொல்லட்டுமா?" என்றான்.

"சொல்லுங்க!" என்றாள்.

"பதிலே சொல்ல மாட்டேன், பதிலே சொல்ல மாட்டேன்னு சொல்லிட்டு இந்த பதில் சொல்றதுல பெண்கள் ரொம்ப கெட்டிக்காரங்க தெரியுமா?" என்றான்.

"என்ன சொல்றீங்க," என்றாள் அவள்.

"இப்ப நீ எனக்கு பதில் சொல்லிட்டே"

"யாரா இருந்தாலும் யாரையாவது இப்படி வெறிச்சப் பார்த்தா பார்க்கறவங்களுக்கு அவ் சரியா இருக்கும். அந்த ரியாக்ஷன் மட்டும்தான்!" என்றாள் அவள். தன் வெட்கத்தை மறைத்துக் கொண்டு

அவன் கலகலவென்று சிரித்தான். "அப்படிங்களா, நாம கெஸ்ட் ஹவுஸில் பேசிப்போம்" என்றான்.

பல நாட்களுக்கு பிறகு வந்த சந்திரகாந்தனை சம்யுக்தாவின் பெற்றோர்கள் இயல்பாக வரவேற்றார்கள். சம்யுக்தாவின் "அப்பா என்னப்பா ரொம்ப நாட்களாக ஆளைக் காணோம்" என்றார்.

"இல்லைங்க அங்கிள். நீங்க தான் வெளியே போயிட்டீங்க. நானும் இங்க பிஸினஸ்ல கான்சன்ரேட் பண்ணினேன். அதனால டச் விட்டுப் போச்சு" என்றான்.

"ஆமாம்பா, ஊர் ஊரா சுத்தி ஒரு வழியா சென்னையில போய் ஆறு வருஷம் உட்கார்ந்தேன். கோயமுத்தூர் காரங்களுக்கு எந்த ஊரும் பிடிக்காதுப்பா. அதான் இங்க வந்துட்டேன்" என்றார்.

"நல்ல வேலை செஞ்சீங்க அங்கிள்!" என்றான் அவன். அதற்குள்ளாக சம்யுக்தாவின் அம்மா 'தம்பி காஃபி?" என்று கேட்க.

"இல்லை இப்பதான் நானும் சம்யுக்தாவும் அன்ன பூர்ணாவில் சாப்பிட்டோம்" என்றான் இயல்பாக. "அதெப் படிப்பா, சம்யுக்தா வர்றது எங்களுக்கே தெரியாது" என்று இழுக்க.

"இல்லைங்க அங்கிள். நான் வேற ஒரு ஃப்ரெண்டை ரிசிவ் பண்றதுக்காக போயிருந்தேன். சம்யுக்தா வந்தாப்ல சரி அவங்களையும் பிக்கப் பண்ணிட்டு வந்துட்டேன்" என்றான். அவன் அலட்டிக் கொள்ளாமல் பொய் சொல் வதைப் பார்த்து அவள் உள்ளறையில் இருந்து எட்டிப் பார்த்து சிரித்தாள்.

அவன் தன் சிரிப்பை அடக்கிக் கொள்வதற்கு கொஞ்சம் கஷ்டப்பட வேண்டியிருந்தது.

"சரிப்பா, அங்கிருந்து வர்றதுக்கு ஒரு ஒன் அவர் ஆவது ஆகியிருக்குமில்லே. கொஞ்சம் போர்ன் விட்டாவாவது குடிங்க" என்று சம்யுக்தாவின் தாயார் கொண்டு வந்ததை அவன் மறுக்கவில்லை. வாங்கிக் கொண்டான்.



"அப்புறம் அங்கிள். எங்க வீட்டுக்கெல்லாம் ஒரு நாள் வாங்க!" என்றான்.

"கண்டிப்பா வரணும்பா. இனி என்ன ரிட்டையர்ட் லைஃப். எல்லா நண்பர்கள் வீட்டுக்கும் போயிட்டு வரவேண்டியதுதான். இந்தப் பொண்ணுக்கு ஒரு நல்ல மாப்பிள்ளையா பார்த்து செட் பண்ணிட்டா நாங்க ஃப்ரீ ஆயிடுவோம்" என்றார் அவர்.

சந்திரகாந்தன் இயல்பாக இருக்க வெகுவாக பாடுபட்டு விட்டான்.

"நல்ல பையனா பார்த்துடலாம் அங்கிள். எப்படி மாப்பிள்ளை வேணும்னு சொல்லுங்க" என்றான் சந்திரகாந்தன்.

"என்னப்பா, உன்ன மாதிரி நல்ல பையனா இருந்தா போதும்" என்று சம்யுக்தாவின் தந்தை சொன்னவுடன் சந்திரகாந்தன் ஒரு நிமிடம் திகைத்து விட்டான்.

"சரிங்க அங்கிள்!" என்று சொல்லி விட்டு விடை பெற்றுக் கொண்டான்.

சம்யுக்தாவும் அவனோடு வாசல் வரை வந்தாள். "பார்த்தியா, உங்க அப்பாவுக்கே என்னை மாதிரிதான் மாப்பிள்ளை வேணுமாம்!" என்றான். பெருமையாக சொல்லிக் கொண்டு திரும்பிப் பார்த்து அம்மாவும், அப்பாவும் பார்வையில் படவில்லை என்ற உடனே காலரை தூக்கிக் கொண்டான்.

"ஹலோ ரொம்ப ஒண்ணும் பெருமை பட்டுக் கொள்ள வேண்டாம். ஆறு வருசம் கழிச்சு நீங்க வந்து புரபோஸ் பண்ணின உடனே நாங்க ஏத்துக்கணுமா? நாங்க கேட்க

வேண்டிய கேள்வி நிறைய இருக்கு. தயாரா இருங்க'' என்று கோபமாக சொல்லி விட்டு உள்ளே சென்றாள் சம்யுக்தா.

உண்மையான கோபம் அவள் முகத்திலே தெறிப்பதைப் பார்த்த சந்திரகாந்தன் சற்று திகைத்துத்தான் போனான்.

தான் நினைத்த அளவு விஷயம் எளிதாக இருக்காது போல என்ற கவலையுடனே காரை எடுத்தான்.

## அத்தியாயம் - 20

கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்தான் சந்திரகாந்தன். மணி பத்தாகி இருந்தது. அவன் கெஸ்ட் ஹவுஸுக்கு வரும் பொழுது கொஞ்சம் தாமதமாகத்தான் வந்தான். ஒன்பது மணிக்கு சந்திப்போம் என்று கூறியிருந்தவன் வரும் பொழுது ஒன்பதே கால் ஆகிவிட்டது.

வந்து காத்துக் கொண்டிருப்பாளோ என்று அவசர அவசரமாக வந்தான். ஆனால் சம்யுக்தாவின் நிழலைக் கூட அங்கே காணவில்லை. வாட்ச்மேனை அழைத்து யாராவது பெண் வந்தார்களா என்று விசாரித்தான்.

''இல்லைங்க சார், வீடு கூட்ற அம்மாதான் வந்துச்சு!'' என்றான் அவன். 'இதைக் கேட்டேனாக்கும்' என்ற கோபம் வந்தது சந்திரகாந்தனுக்கு. 'சரி சரி' என்று அந்த கெஸ்ட் ஹவுஸிலே இருந்த தன்னுடைய அலுவலகத்திலே போய் அமர்ந்து கொண்டான்.

காத்துக் கொண்டிருப்பது என்பது எவ்வளவு கடினமான விஷயம் என்பது அவனுக்கு புரிந்தது.

அதே நேரத்தில் இன்னொன்றும் தோன்றியது. ஆறு ஆண்டுகளாக தன்னை அறியாமல் காத்துக் கொண்டு தானே இருக்கிறோம். அவளும் வேதனையில் தானே இருந்திருக்கிறாள் என்று பலதையும் நினைத்துக் கொண்டு சற்று நேரம் அமர்ந்திருந்தான்.

கடுப்பாக இருந்தது. உடனே அலுவலகத்துக்குப் ஃபோன் செய்து முக்கியமான இரண்டு ஃபைல்களை அங்கேயே கொண்டு வரச் சொன்னான். கட்டடங்கள் நடைபெறும் இடங்களில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று விசாரித்துக் கொண்டிருந்தான்.

கொஞ்சம் வேலையில் இறங்கியதும் நேரம் ஓடியது. மீண்டும் பத்து மணிக்கு கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்து கொஞ்சம் கடுப்பாகிப் போனான். மறுபடியும் வேலையில் மூழ்கினான். பதினொரு மணியும் ஆகி விட்டது.

வாட்ச் மேனை அழைத்து தேனீருக்கு ஏற்பாடு செய்யச் சொன்னான். என்ன செய்வது என்று தெரியாமல் ஒரு நிமிடம் பேனாவை சுழட்டிக் கொண்டு தலையைக் குனிந்து கொண்டிருந்தான்.

அந்த நேரத்தில் தான் சம்யுக்தா வருவது தெரிந்தது. அவசரமாக எழுந்து வெளியே வந்து நின்றான்.

சம்யுக்தா கொஞ்சம் பரபரப்பாகத்தான் வந்தாள். ''சாரி லேட் ஆயிடுச்சு!'' என்று வந்தாள்.

அவன் முகம் மலர்ந்து விட்டது. வந்தால் போதும் என்று தானே இருந்தான். அதனால் ''பரவாயில்லை. பரவா யில்லை, எங்கே ஆளைக் காணோமேன்னு டென்ஷன் ஆயிட்டேன்'' என்றான்.

அவள் மையமாக புன்னகைத்து விட்டு அவனை நோக்கி வந்தாள்.

அந்தச் சின்ன அழகான தோள் பை அவளுக்கு மிகவும் பாந்தமாக இருந்தது. தலையைக் குளித்து விட்டு முடியை தளர விட்டு பின்னாலே கிளிப் போட்டிருந்தாள்.

எப்போதும் அவளுக்கு தலை முடியை மேலாக விரித்துப் போடுவது அவளுக்குப் பிடிக்காது. அவனுக்கும் கூட. அதனால் கீழாக அழகிய கிளிப் மாட்டியிருந்தாள்.

பொருத்தமாக சுடிதார் அணிந்திருந்தாள். அதற்கு ஏற்ற ஒரு செயற்கைப் பாசி மாலையும் அணிந்திருந்தாள். ஆடம்பரமே இல்லாமல் அடுத்தவர்களை இழுக்கிற அழகு அவளிடத்திலே இருந்தது.

அப்பொழுதும் சற்று அவன் மயங்கித்தான் போனான். தன் கவனத்தை இழுத்துக் கொண்டு அவளைப் பார்த்து புன்னகைத்தான். ''உள்ளே போயிடலாமா?'' என்றான்.

''சரி!'' என்றாள் அவள். உள்ளே ஹாலுக்குப் போனார்கள். மறுபடியும் வாட்ச்மேனை அழைத்து ''ரெண்டு பேருக்கும் காஃபி கொண்டு வரச் சொல்லு'' என்றான்.

அந்த கெஸ்ட் ஹவுசின் பின்பக்கத்தில் சிறிய அறை இருந்தது. அங்கே அதற்கென்று பணியாளர்களும் இருந்தார்கள். அடுத்த ஐந்து நிமிடத்தில் காஃபி வந்தது.

இரண்டு பேரும் அமைதியாக அதை அருந்தினார்கள். ''என்ன ஆச்சு சம்யுக்தா? நான் உங்கிட்ட பேசணும்னு தீவிரமா காத்துட்டு இருந்தேன். ஏன் லேட் ஆயிடுச்சு?'' என்றான்.

அவள் அவனைப் பார்த்து விட்டு மெல்லச் சிந்தனையுடன் சொன்னாள். ''மகாலட்சுமி வந்திருந்தாங்க என்னைப் பார்க்கறதுக்கு!'' என்றாள்.



'ஓ' என்று அவன் ஆச்சரியமானான்.

..................

குளித்து முடித்து அவசரமாக கிளம்பினாள் சம்யுக்தா. கிளம்பும் போது வேறு கோபமாக பேசிவிட்டோமே சந்திரகாந்தனிடம் எப்படி எடுத்துக் கொள்வானோ என்ற லேசான கவலையும் அவளுக்கு இருந்தது. ஆனால், காலையிலே அவன் வந்து நின்ற கோலத்திலே அவளுக்கு பாதி பிடிபட்டுப் போனது. மீண்டும் இந்த உறவு மலரப் போகிறதா என்று ஒரு எண்ணமும் அவளுக்குள்ளே தோன்றியது.

அவளைப் பொறுத்த வரை இந்த உறவு எப்போதும் அப்படியேதான் இருந்தது. இன்னொருவரை நினைக்க வேண்டும் என்ற எண்ணம் கூட அவளுக்கு தோன்ற வில்லை. எப்போது சந்திரகாந்தன் தனக்கு ஒரு விளக்கம் சொல்லி விட்டுப் போனானோ ஆறு ஆண்டுகளுக்கு முன்பு அதற்கு பிறகு அவள் வேறு யாரையும் நினைத்துப் பார்க்கக் கூட வில்லை. ஒரு சிறிய சலனம் கூட இல்லை. ஒரு விதமான விரக்தியில்தான் அவள் இருந்தாள்.

திருமணத்தைப் பற்றிய எண்ணமே இல்லாமல் தான் இருந்தாள் சம்யுக்தா. ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு சந்திர காந்தன் மீண்டும் தன் வாழ்க்கையில் வரக் கூடும் என்பது அவள் எதிர்பாராததுதான். அப்படியே வந்தாலும் இப்படி ஒரு பேச்சுவராக, திருமணம் ஆகாத பிரம்மச்சாரியாக தனக்காக காத்துக் கொண்டிருப்பான் என்பதும் அவள் எதிர்பாராதது தான். இரண்டு பேருமே எதற்காக காத்திருக் கிறோம் என்பது தெரியாமலே இருத்திருக்கிறார்கள்.

பலதும் எண்ணிக் கொண்டு அவனுக்கு பிடித்த மஞ்சள் நிறம், அதிலும் அடிக்காத மஞ்சள் நிறம் அதிலே அழகாக செங்கல் நிறத்தில் பூக்கள் இருந்த டிசைன் சுடிதாரை எடுத்து போட்டுக் கொண்டு கிளம்பினாள். பல நாட்களுக்குப் பிறகு பார்த்துப் பார்த்து தன்னை அலங்கரித்துக் கொண்டாள்.

எப்போதுமே மிகையாக அலங்கரித்துக் கொள்ள மாட்டாள். பணியில் இருப்பதால் அலங்காரம் தேவை என்பதை உணர்ந்திருந்தாள். பிறர் கண்டு கொள்ள முடியாத அளவில், லேசான அளவில் அலங்காரம் இருக்கும். பிறர் கண்ணை உறுத்தாத அளவில். இன்றைக்குக் கொஞ்சம் கூடுதலாக அலங்கரித்துக் கொண்டாள்.

வெளியே வந்து தன்னுடைய காரை எடுக்கிற நேரத்தில் எதிரிலே ஒரு ஸ்கூட்டியில் மகாலட்சுமி வந்து இறங்கினாள். அவள் தன்னைத் தேடித்தான் வந்திருக்கிறாள் என்பது தெரிந்த உடனே சம்யுக்தா காரை நிறுத்திவிட்டு இறங்கி 'வாங்க!' என்றாள்.

'மேடம், நான் உங்ககிட்டதான் பேசணும்னு வந்திருக்கேன்!' என்றாள் மகாலட்சுமி.

எல்லாம் சரியாகப் போகிறது என்கிற நேரத்தில் இவள் வேறு வந்து நிற்கிறாளே என்று கொஞ்சம் வயிற்றில் புளியைக் கரைத்தது சம்யுக்தாவிற்கு.

'ஓ, அப்படியா,' என்றாள். 'இப்போ நான் கொஞ்சம் வெளியே கிளம்பிட்டு இருக்கேனே' என்றாள் அவள்.

'யாரைப் பார்க்க,' என்று கேட்டாள் மகாலட்சுமி.

'முக்கியமான ஒருத்தரைப் பார்க்க!' என்றாள் சம்யுக்தா.



'தெரியும். சந்திரகாந்தனைத் தானே பார்க்கப் போறீங்க? அதுக்கு முன்னாடி நான் உங்ககிட்ட பேசணும்' என்றாள் மகாலட்சுமி.

''சரி என்ன பண்ணலாம்?'' என்றாள்.

''நாம ஏதாவது ஒரு பொது இடத்துல வச்சுப் பேசுவோமா?'' என்றாள்.

'சரி' என்று அவளை அழைத்துக் கொண்டு பார்க்குக்கு போனாள் சம்யுக்தா. அவள் ஸ்கூட்டியிலும் இவள் காரிலுமாக போய் இறங்கிக் கொண்டார்கள்.

அப்போதுதான் மகாலட்சுமி தன்னுடைய கதை முழுவதையும் சொன்னாள். சொல்லி முடித்தவுடன் அவள் கண்கள் கலங்கின. ''சந்திரகாந்தன் அண்ணன் எனக்காக நிறையத் தியாகம் பண்ணியிருக்காரு-ஆனால் இப்படி உங்க கிட்ட சொல்லிட்டாருங்கறது எனக்கு தெரியாது. தெரிஞ் சிருந்ததுன்னா நீங்க எங்கிருந்தாலும் கண்டுபிடிச்சு நான் உங்களை சந்திச்சு நிலைமையோட விளக்கத்தை சொல்லி யிருப்பேன்'' என்றாள்.

சம்யுக்தாவின் மனம் உருகி விட்டது. ''அது என்னவோ என் வாழ்க்கையை நிமிர்த்துறதுதான் தன்னோட வாழ்க் கையின் லட்சியம்னு நினைச்சுட்டாரு. அது ஒரு பெரிய கருணை உள்ள மனசுக்குண்டான அடையாளம். அதே நேரத்துல தனக்கும் ஒரு வாழ்க்கை இருக்குன்னு அவரு புரிஞ்சுக்கலை. கொஞ்சம் அவசரப்பட்டுட்டாரு'' என்றாள் மகாலட்சுமி.

சம்யுக்தா பெருமையுடன் அமர்ந்திருந்திருந்தாள். ''பரவாயில்லை. ஒரு நல்ல காரியத்துக்காக தானே இந்த பிரிவு.''

"இல்லைங்க. எனக்கு ஒரு சந்தேகம் இருக்கு" என்றாள் மகாலட்சுமி. என்ன என்றாள் சம்யுக்தா.

"அவரு என்ன காரணத்துக்காக ஒதுங்கி இருப்பார்னு நான் நினைக்கிறேன்னா!" என்று அந்த காரணத்தையும் சொன்னாள்.

'ஓ' என்று அமைதியானாள் சம்யுக்தா.

"அதுக்காகத்தான் அவரு யோசிச்சிருப்பாரு. உங்க கிட்டே இருந்து மட்டும் அப்படி ஒரு பிரதிபலிப்பு வந்திருந்ததுனா அவரால தாங்கி இருக்க முடியாது. அதனால அவரு அப்படி பண்ணிட்டாரு. அதுக்கு அவங்க ப்ரெண்ட்ஸ்லயே ஒருத்தர் காரணம்.இந்த கோவிந்த் பண்ணின வேலைதான்" என்று சொன்னாள் விளக்கமாக.

சம்யுக்தாவிற்கு அதே கோவிந்த் மாலினியிடமும் உளறி வைத்தது நினைவுக்கு வந்தது. "இவரோட ப்ரெண்ட்ஸ்லயே அந்த கோவிந்த் தான் கொஞ்சம் கூட மெச்சூரிட்டி இல்லாம பிகேவ் பண்ணியிருக்காருன்னு தெரியுது!" என்றாள் சம்யுக்தா.

"ஆனா, கடவுள் என்ன செஞ்சாரு பார்த்தீங்களா, நல்லவங்களுக்கு எப்போதுமே நல்லதுதான் நடக்கும். எனக்கு அவரு செஞ்ச உதவிக்கு பிரதி உபகாரமாக கடவுள் உங்களைக் கோயம்புத்தூருக்கே கூட்டிட்டு வந்துட்டாரு. அவரு கண்ணுல உங்களை பட வச்சுட்டாரு!" என்றாள்.

சம்யுக்தா மையமாக சிரித்து வைத்தாள்.

"சரிங்க, டைம் ஆயிடுச்சு. அண்ணா உங்களுக்காகக் காத்துகிட்டிருப்பாரு. நீங்க கிளம்புங்க" என்றாள். சம்யுக்தா கிளம்பி வருகிற வழியிலே ஏதோ ஒரு ஊர்வலம்



ஒன்று போனது. முக்கால் மணி நேரம் மாட்டிக் கொண்டு விட்டாள். போன் செய்து சந்திரகாந்தனுக்கு செய்து தெரிவித்து விடலாமா என்று யோசித்தாள்.

ஆனால் கூடவே கொஞ்சம் கோபம் இருந்தது. "ஆறு வருஷம் காரணம் சொல்லாமல் காக்க வச்சாரில்லே. ஒரு ஒரு மணி நேரம் இரண்டு மணி நேரம் காத்திருந்தா என்னவாம்" என்று எண்ணிக் கொண்டு தான் வந்தாள்.

அவள் அதைச் சொல்லி முடித்த பொழுது சந்திரகாந்தன் முகத்தில் லேசான குறும்புப் புன்னகை தவழ்ந்தது. "நீ என்ன தண்டனை குடுத்தாலும் ஏத்துக்க வேண்டியதுதான்" என்றான் அவன்.

"என்ன தண்டனை கொடுத்தாலுமா?" என்றாள் அவள்.

"ஆமா, ஏன்னா நான் அவ்வளவு பெரிய தப்பு உனக்கு பண்ணியிருக்கேன்!" என்றான்.

அவளை ஆழ்ந்து பார்த்தான். அவனுடைய பார்வையின் கனம் தாள முடியாமல் அவள் குனிந்து கொண்டாள்.

"அதனால நீ ஒரு இரண்டு மணி நேரம் காக்க வச்சது தப்பில்லை" என்றான்.

"ஹலோ, இரண்டு மணி நேரம் இல்லை. நானும் உங்களை இன்னொரு ஆறு வருஷம் காக்க வக்கலாம்னு யோசனை பண்ணிட்டு இருக்கேன்" என்றாள் சம்யுக்தா.

"ஏன் இவ்வளவு சீக்கிரம்? இன்னொரு பதினைஞ்சு வருஷம் காத்திருப்போம் அதுக்கு அப்புறம் ஒரு நாற்பத்தைந்து வருஷம் எனக்கும் உனக்க எத்தனை நாற்பதா நாற்பத்திரண்டு வயசுல கல்யாணம் பண்ணிட்டாப் போச்சு" என்று சிரித்தான்.

அவளும் சிரித்து விட்டாள். சிரித்துக் கொண்டிருக்கையிலே அவன் பார்வை மாறியது. "இன்னும் நான் உங்கிட்ட நேரடியா சொல்லலை இல்லை?"

"ஆமாம். முதல்ல ஆறு வருஷம் எதுக்காக இப்படிப் பிரியற மாதிரி ஒரு முடிவெடுத்திங்க அதைச் சொல்லுங்க?"

"சொல்றேன். அதுக்கு முன்னாடி" என்று இழுக்க

"அதுக்கு முன்னாடி, எதுக்கு இன்னிக்கு காலையில ரயில்வே ஸ்டேஷன் வந்து காத்திருந்தீங்களாம்? அதைச் சொல்லுங்க" என்றாள் அவள் கொஞ்சலாக.

"மூணு நாள்! அம்மணி ஒண்ணும் சொல்லாமல் போயிட்டீங்க. ஒண்ணுமே ஓடலை. நல்ல வேளை. மாலினி சொன்னதுனால காலையிலே வந்து பார்த்தேன்" என்றான்.

"பார்த்ததுக்கு அப்புறம் தான் மறுபடியும் எனர்ஜியே கிடைக்குது!" என்றான்.

"இந்த ஆறு வருஷம் அந்த எனர்ஜி எங்கே போயிருந்தது," என்றாள் அவள்.

"திரும்பத் திரும்ப அதையே கேட்காதே சம்யுக்தா ப்ளீஸ்." என்றான் வேதனை நிறைந் குரலில்.

அவளும் உடனே அப்படி கேட்டிருக்கக் கூடாது என்று எண்ணிக் கொண்டாள்.

"ஆறு வருஷம் நரகமா கழிச்சேன் தெரியுமா? ஒவ்வொரு நாளும் கடுமையான உடற் பயிற்சி. அதையும் இதையும் பண்ணி டயர்ட்னஸ்ல தான் தூக்கம். ரெகுலரான தூக்கம் இல்லை தெரியுமா?" என்றான்.



அவள் மௌனமாக அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். "சரி, என்னோட மடத்தனத்தை என்னோட தப்பை எல்லாத்தையும் மன்னித்து என்னை ஏத்துப்பியா," என்று கேட்டான்.

அவள் மூச்சு இழுப்பதை நிறுத்தி விட்டு அவனை கண் கொட்டாமல் பார்த்தாள்.

"ஆமா சம்யுக்தா, போதும் நீயும் நானும் இழந்த காலமெல்லாம் போதும். இனிமேல் கண்டிப்பா நீ இல்லாத ஒரு வாழ்க்கை கிடையாது. நீ என்னோட ப்ரொபோஸலை ஏத்துக்கறியா" என்று கேட்க அவள் சட்டென்று எழுந்து அந்த நீளமான ஹாலில் இருந்த புறத்தில் இருந்த ஜன்னல் புறம் திரும்பிக் கொண்டு நின்றாள்.

'சமி' என்றான் அவன் கேள்விக்குறியாக.

அந்த ஜன்னல் கம்பிகளில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு குலுங்கி குலுங்கி அழுதாள் சம்யுக்தா.

"சமி ப்ளீஸ்!" என்று அவன் அருகில் வந்து அவள் தோளில் கை வைக்கத் திரும்பி அவன் மார்பிலே முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

அவன் கைகள் அவள் அழுது முடியும் வரை அவள் முதுகை நீவிக் கொண்டிருந்தன.

## அத்தியாயம் - 21

மனம் நெகிழ்ந்து போய் பார்த்துக் கொண்டிருந்தான் சந்திரகாந்தன். அவள் ஒரு வழியாக அழுகையை முடித்தாள்.

தன் பாண்ட் பாக்கட்டில் இருந்து கர்சிப்பை எடுத்து நீட்டினான். அவள் முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

"ஆறு வருஷம் பொன்னான காலம் இழந்துட்டோமில்லே?" என்றாள். மறுபடியும் விம்மினாள்.

அவன் வருத்தத்துடன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். "ஏன் இப்படி செஞ்சீங்க, ஒரே ஒரு தடவை என்கிட்ட உட்கார்ந்து பேசி இருந்திருக்கலாமில்லே? இதுதான் பிரச்சினை. இதை நான் இப்படி ஹேண்டில் பண்ணப் போறேன். அப்படின்னு நீங்க சொல்லியிருக்கலாமே," என்றாள்.

சந்திரகாந்தன் இப்போது பெருமூச்சு விட்டான். "உட்காரலாமா," என்றான்.

அவள் தோளில் இருந்து கையெடுக்காமல் அழைத்துக் கொண்டு சென்று தன் அருகிலேயே அமர்ந்து கொண்டான். அவள் சற்று விலகி அமர முற்பட்டபோது "வேண்டாம் ப்ளீஸ். என் கிட்டயே உட்காரு" என்று தோள் மேல் கையைப் போட்டுக் கொண்டான்.

"நானும் பலதடவை யோசிச்சேன் எப்படி உன்னை இழக்கப் போச்சு. இதை விட பெரிய மடத்தனம் இருக்க முடியுமா? அப்படின்னு எத்தனையோ தடவை நான் வருத்தப்பட்டிருக்கேன். ஆனா அந்த வயசு... அந்த வயசுல எனக்கு பக்குவம் போதலைன்னுதான் நினைக்கிறேன்" என்றான்.

அவள் ஆர்வத்துடன் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.



"அந்த சமயத்துல ஒரு வேகம். நட்பா காதலா அப்படின்னு வரும் பொழுது நட்புத்தான்னு ஏதோ ஒரு பெரிய தியாகம் பண்றதா நினைச்சுட்டேன்" என்றான்.

"அதுல தப்பில்லைங்க. நீங்க செஞ்ச எதையுமே நான் தப்புன்னு சொல்ல மாட்டேன். மகாவுக்கு நீங்க இந்த அளவுக்கு சப்போர்ட் பண்ணி அவங்களை ஸ்டெபிலைஸ் பண்ணினது தப்பில்லை. ஆனா அதுக்கு நம்மளோட காதலை தியாகம் செய்யணுமா," என்றாள்.

"அதைத்தான் சொல்றேனே. அப்ப எனக்குப் புரியலை அதுவும் இல்லாம ஒரு சில நண்பர்கள் என் மனசை கலைச்சுட்டாங்க" என்றான்.

"கோவிந்த்!" என்று அவள் முணுமுணுத்தாள்.

"அவன்தான். டேய் நீ என்ன விளக்கம் சொன்னாலும் சரி, ஒரு பொண்ணைக் கூட்டிட்டு வந்து உங்க வீட்டுக்கு பக்கத்துல வச்சுட்டு தங்கையா தான் நினைக்கிறேன் சப்போர்ட் கொடுக்கப்போறேன் அப்படின்னா எந்தப் பொண்ணும் ஏத்துக்க மாட்டா. வீணா சந்தேகம் தான் படுவா அப்படி இப்படின்னு சொல்லி என்னை பயமுறுத்திட்டான்" என்றான்.

"நீங்க அப்ப எங்கிட்ட பேசியிருக்கலாமில்லே?" என்றாள்.

"அதாம்மா. ஏதோ ஒரு தயக்கம். எப்படி உங்கிட்ட பேசறதுன்னு. அதோட என்னை வேறு யாரு என்ன சொன்னாலும் தாங்க முடியும். ஆனா என்னை ஒருத்துரி நீ என்னை சந்தேகப்பட்டின்னா கூட....! அந்த சந்தேகத்தை தாங்கக் கூடிய சக்தி எனக்கு அப்ப இருக்கலை.அது ஒரு

பெரிய..... என்ன சொல்றது தன்மானப் பிரச்சினையாயிடுச் சுன்னு வச்சுக்கோயேன்.''

அவளிடத்தில் புன்னகை மலர்ந்தது. ''அறிவுத் திலகம்!'' என்றாள்.

கோபமும் தெரிந்தது. அவன் அதை மிகவும் ரசித்தான். ''அதை அங்க உட்கார்ந்துட்டு சொல்லக் கூடாது. இன்னும் பக்கத்துல வந்துடு. இது பத்தாது. இன்னும் கண்டபடி திட்டலாம்'' என்றான்.

அவள் கண்களை துடைத்துக் கொண்டு சிரித்தாள்.

''ஆமா, கண்ணம்மா, நிஜமாவே நான் செஞ்ச காரியத் துக்கு நீ என்னை அடிக்கலாம், திட்டலாம் என்ன வேண்ணா செய்யலாம்!'' என்றான்.

அவள் இப்போது அவனை செல்லமாக முறைத்தாள். ''இப்பத் திட்டி, அடிச்சு என்ன பண்றது, போன காலம் வரவா போகுது,'' என்றாள்.

''அது முடியாது. அதுக்கு பதிலா எதையாவது செஞ்சமே அப்படின்னு திருப்தி பட்டுக்கலாமில்லே'' என்றான் அவன்.

அவள் உடனே ஒற்றை விரலை மேலே தூக்கி மிரட்டினாள்.

''இருங்க, இருங்க இந்த ஆறு வருஷத்துக்கு நீங்க எனக்கு ஆயுசு பூரா பதில் சொல்லணும். சும்மா விட மாட்டேன்'' என்றாள்.

அவன் ரசித்துச் சிரித்தான். ''அதிலே கொஞ்சம் சாம்பிள் காட்டறது!'' என்றான்.

''ஓஹோ! உங்களுக்கு என்னோட கஷ்டம் சிரிப்பா இருக்கா, என்று எழுந்து அவனை தன் வயிற்றுப் பக்கமாக



சாய்த்துக் கொண்டு பொய்யாக முதுகிலே நாலு சாத்து சாத்தினாள். அவன் திரும்பி முகத்தை நிமிர்த்தி அவளைப் பார்த்து சிரித்தபடி இவ்வளவு சுகமான தண்டனை கிடைக்கும்னு தெரியாதே. போடு, இன்னும் நாலு போடு'' என்று சிரித்தான்.

அவளும் சிரித்தபடி அமர்ந்தாள். இரண்டு பேரும் சற்று நேரம் சிரித்து மகிழ்ந்தார்கள்.

சிரித்துக் கொண்டிருக்கும் போதே அவன் பார்வை மாறியது. கிறக்கம் பார்வையில் ஏறியது. குழைந்து போன குரலில் சொன்னான். ''இப்படி நிம்மதியா சிரிச்சு எவ்வளவு நாளாச்சு தெரியுமா,'' என்றான். ''ஹலோ, நிம்மதியா சிரிச்சு இல்லை. நிம்மதியா அடிவாங்கி!'' என்று அவள் மறுபடியும் சிரித்தாள்.

அவனும் சேர்ந்து சிரித்தான்.

''அடிமட்டுமா கிடைக்கும். இன்னும் என்னென்னமோ கிடைக்கும். என்னவெல்லாம் இருக்குமோ அதெல்லாம் வாங்கிக்கறதுக்கு சக்தி இருக்கு!'' என்றான் அவன்.

அவள் ஒன்றும் பேசவில்லை. ''ஆனால், ஆச்சவலா யோசிச்சுப் பார்த்தா நான் பெரிய மடத்தனம் பண்றேன்!'' என்றாள் அவள் சற்றே கோபமாக முகத்தை வைத்துக் கொண்டு.

''அதான் நிறைய பண்ணுவீங்களே?'' என்றான்.

''ஆமாம் அப்படி நிறைய பண்றதுனாலதான் திரும்ப வந்து நீங்க கேட்ட உடனேயே வெட்கமே இல்லாம சரின்னு தலையாட்டிட்டேன்'' என்றாள். ''எனக்கு ஒரு ஃப்ரெண்டு இருக்காப்ல'' என்றாள்.

''ஃப்ரெண்டு பொண்ணு தானே?'' என்றான் அவன் அவசரமாக.

''ஹலோ, இதானே வேண்டாங்கறது ஆறு வருஷம் எத்தனையோ பேரு கூட வேலை செஞ்சேன். ஆனா யாருக்கும் இம்மி அளவு கூட நான் இடங்குடுத்தது இல்லை. எனக்கு எந்தச் சலனமும் வந்ததில்லை. அதுவே எனக்கு ஆச்சரியமாக இருக்கு காந்தன்'' என்றாள்.

அவனும் ஆச்சரியமாக பார்த்தான். ''எனக்கும் அப்படித் தான் சமி. எந்தப் பொண்ணைப் பார்த்தாலும் சின்ன சலனம் கூட வந்ததில்லை. ஏன்னா நீ அவ்வளவு வன்மை யானவள் தெரியுமா,'' என்றான்.

அவள் அவனை ஆச்சரியமாக பார்த்தாள். ''ஆமாம் அவ்வளவு தாக்கிட்டே நீ என்னை. உன்னோட இடத்துக்கு நான் வேற யாரையும் நினைச்சுக் கூட பார்க்க முடிய வில்லை'' என்று சொல்லிக் கொண்டே சிரித்தான்.

''உம் உன் ஃப்ரெண்டு அவங்களைப் பத்தி சொல்லு'' என்றான்.

''அவங்க பெண் விடுதலையைப் பத்தி நிறைய பேசு வாங்க. அவங்க இதைக் கேள்விப்பட்டா என்ன தெரியுமா சொல்லுவாங்க. ஆறு வருஷத்துக்கு முன்னாடி நீ வேண்டான்னுட்டு போயிட்டு ஆறு வருஷம் கழிச்சுத் திரும்ப வந்து நீ தான் வேணும் அப்படின்னு கேட்டா உடனே நீ சரின்னுடுவியான்னு கேட்பாங்க'' என்றாள் அவள்.

''கேட்டா சொல்லு. நாங்க ஆறு வருஷம் உடலால மட்டும்தான் பிரிஞ்சிருந்தோம். மனசால ஒருத்தருக்குள்ள



ஒருத்தர் சிம்மாசனம் போட்டு உட்கார்ந்திருந்தோம் அப்படின்னு சொல்லு'' என்றான் ஆவேசமாக.

அதற்கும் அவள் சிரித்தாள். ''அவளைப் பொறுத்த வரைக்கும் காதல்ங்கறதே பொய் அப்படிம்பா'' என்றாள்.

அவளைச் சிந்தனையுடன் பார்த்தான் சந்திரகாந்தன். ''காதல்ங்கறது பொய்யான்னு தெரியலை ஆனா இப்ப சமீப காலத்துல அப்படியெல்லாம் கருத்து சொல்றாங்க. காதல் திரும்பக் கூட வரும்னு சொல்றாங்க ஆனா ஒருத்தனுக்கு ஒருத்தின்னு சொல்றது எவ்வளவோ சௌகரியம்னு தோணுது'' என்றான்.

''சௌகரியமா,'' என்றாள் அவள்.

''ஆமா அடுத்த தலைமுறை பாதிக்காம ஒரு வாழ்க்கை வாழணும்னா ஒருத்தனுக்கு ஒருத்தியா இருக்கறதுதான் நல்லது. அப்படித்தான் எனக்குத் தோணுது'' என்றான் சந்திரகாந்தன்.

அவளும் இதை ஏற்றுக் கொண்டாள்.

''அது சரி! ஊர் கதை தத்துவமெல்லாம் பேசிட்டு இருக்கவா நாம இங்க வந்தோம்'' என்றான் அவன்.

''நான் என்ன தெரியுமா நினைச்சேன். சம்மதம் கேட் கறதுக்காகக் கூப்பிட்டிருக்கீங்க. உங்க பிரச்சினையை சொல்லுவீங்க. ஒரு சமரசத்திற்கு வரலாம் அப்படின்னு தான் நினைச்சேன்'' என்றாள்.

அவன் குறும்பாக அவளைப் பார்த்தான் ''சமரசத்துக்கு வந்துட்டோம்னு எப்படித் தெரியும்?'' என்றான்.

''எப்படித் தெரியணும்,'' என்று கேட்கும் போதே அவளுக்குப் புரிந்தது.

"இல்லை, இப்ப ஒரு அக்ரிமெண்ட் போடணும்னா முத்திரை வைக்கணுமில்லே?" என்றான் அவன்.

"காந்தன், நீங்க மாறவே இல்லை!" என்றாள் அவள்.

"அதைத்தானே நானும் சொல்றேன் மாறவேயில்லை. இடையிலே கொஞ்சம் மடையனா இருந்துட்டேன் ஆனா உன்னைப் பொறுத்த வரைக்கும் இனிமே எல்லாத்தையும் வசூல் செய்துடுவேனில்லே," என்றான்.

அமர்ந்து கொண்டிருந்த அவளை இடக்கையால் தூக்கி நிறுத்தினான். அவள் முகம் நோக்கி குனிந்து முத்திரைகள் பதித்தான். "இப்படித்தான் முத்திரைகள் பதிக்கணும்!" என்று குழைந்து போன குரலில் சொல்லியபடியே மெல்ல நிமிர்ந்தான்.

அவன் முகத்தைப் பார்க்க சக்தியற்றவள் போல அவள் திரும்பிக் கொண்டாள்.

ஓரமாகப் போய் நின்று கொண்டாள். அவன் ஒரு நிமிடம் அவளை ஆழப் பார்த்துக் கொண்டு நின்றான். அவனிடத்திலே இருந்து சத்தமே வரவில்லையே என்று அவள் மெல்ல திரும்பிப் பார்க்க அவன் ஆழமான குரலில் "காத்துக்கிட்டு இருக்கேன் மேடம்!" என்றான்.

அவள் திகைத்துப் போய் அவனைப் பார்த்து "எதுக்கு?" என்றாள்.

அவன் குறும்பாக சிரித்து விட்டு "இரண்டு பார்ட்டியிலே ஒரு பார்ட்டி முத்திரை வச்சாச்சு. இன்னொரு பார்ட்டி முத்திரை வைக்கணுமில்லே?" என்றான்.

அவள் அசையாமல் நின்றாள் மறுபடியும் அவளை இடக்கையால் இழுத்தான்.



"அதெல்லாம் முடியாது. கண்டிப்பா கொடுத்தாகணும்!" என்றான். அவள் மெல்ல முகம் தூக்கி அவன் தலையை வளைத்து தானும் முத்திரைகள் பதித்தாள்.

அதற்குப் பிறகு உணர்வுகள் எல்லை மீறுகிற நிலையில் மெல்ல அவள் விலகிக்கொண்டாள். 'விடுங்க' என்று.

அவன் புன்னகைத்த படி "இனிமேல் விடறதாவே இல்லை. ஒரு தடவை விட்டதே போதும். இந்த இடைப் பட்ட காலத்தில் படாத பாடு பட்டாச்சு. இனிமே எல்லாம் ஏமாந்து போகிற ஐடியாவே இல்லை!" என்றான்.

"போதும். இப்ப டென்ஷன் ஆகி என்ன பண்றது," என்றாள் அவள்.

"என்ன பண்றது, கல்யாணம் பண்ணிக்கறது. அடுத்த இருபது நாள்லே நல்ல முகூர்த்தம் இருக்குன்னு அப்பா சொல்லிட்டாரு!" என்றான்.

"அப்பாவா," என்றாள்.

"ஆமா, ரெண்டு மணி நேரம் கேட்டுல என்ன பண்ணினேன்,
அம்மா கிட்ட அப்பாகிட்ட பேசினேன்!" என்றான்.

"அம்மாவும் அப்பாவும் வந்து உங்க வீட்ல பெண் கேட்கறேன்னு சொல்லிட்டாங்க. உன்னை பொறுத்த வரைக்கும் எப்படி வச்சுக்கலாம்னு சொல்லு. அரேஞ்ச்ட் மேரேஜா காட்றதுன்னாலும் காட்டலாம். லவ் மேரேஜா காட்றதுன்னாலும் காட்டலாம்" என்றான்.

அவள் வெட்கப்பட்டாள். 'முடியாது' என்றாள்.

அவன் திடுக்கிட்டுப் போனவனாக "என்ன சொல்றே," என்றான்.

''அதெல்லாம் மாலினி போய் உளறிட்டா.இன்னிக்கு காலையில தான் எல்லாத்தையும் சொல்லியிருக்கா அதுவும் நான் வெளியில வந்துக்கப்புறம். அப்பா என்னைக் கூப்பிட்டு கேட்டாரு. அவரைத்தான் சந்திக்க போயிட்டிருக்கேன் அப்படின்னு அப்பா கிட்ட சொல்லியிருக்கேன்''

''உங்க அப்பா ஸ்டிரிக்டான ஆஃபீசராச்சே? ஒத்துக்கு வாரா?'' என்றான்.

''அதுதான் எல்லாரும் நினைச்சுட்டு இருக்காங்க. ஆனா எவ்வளவு ஸ்டிரிக்டா இருப்பாரோ அதே அளவுக்கு எங்கிட்ட அன்பு. அவ்வளவு என்னைப்பத்தி நம்பிக்கை. உங்களுக்குத் தான் ஆனா என்மேல நம்பிக்கை இல்லாமப் போச்சு!'' என்றாள்.

''ப்ளீஸ் அதையே சொல்லிக் காட்டாதே. உண்மை என்னன்னா உன் மேலே அவ்வளவு மதிப்பு. உன் பார்வையிலே இம்மியளவு கீழே போனாக் கூட தாங்க முடியாத அளவுக்கு நேசம். இப்ப சொல்லு, நான் எப்படிக் காம்பன்சேட் பண்ணனும்னு சொல்லு செய்யறேன்'' என்றான் அவன்.

அவன் சொன்னது அவளுக்குள் முழுமையாக இறங்கியது. இப்படியும் ஒரு கோணம் இருக்கிறதோ? அவள் நிமிர்ந்து நின்றாள்.

''ஆண்டாண்டு காலம் இனிமேல் உங்கள் ஆயுட்காலம் முழுவதும் என்னிடத்தில் எதையும் மறைக்காமல் உண்மையான கணவனாக இருக்க வேண்டும். சம்மதமா?'' என்றாள்.



அவனும் உடனே மண்டியிட்டு ''கண்டிப்பாக மகா ராணியாரே!'' என்றான்.

''ஆனால் எனக்கும் ஒரு வேண்டுகோள் உண்டு தேவியாரே!'' என்றான்.

''சொல்லலாம்!'' என்றாள் அவள் அதிகாரமான தோரணையிலே.

''ஏதோ நான் பார்த்து கேட்கும் போதெல்லாம் கொஞ்சம் கவனிக்க வேண்டும். வரிசையாக ஒன்றிரண்டு குழந்தைகள் பெற்றுத் தர வேண்டும்!'' என்றான்.

அவள் பட்டென்று சிரித்து விட்டாள்.

''பயங்கரமான ஆள் நீங்க!'' என்றாள்.

அவள் அருகில் நின்ற அவன் அவளைத் தன் அருகிலே இன்னும் நெருக்கமாக இழுத்துக் கொண்டான்.

''ஆறு வருஷத்தையும் மறந்துடலாம். இனிமே வாழப் போற ஒவ்வொரு நாளும் அந்த ஆறு வருஷத்துக்கு ஈடு செய்யற மாதிரி நூறு வருஷம் நாம வாழப்போறோம்!'' என்று சிரித்தான் அவன்.

''கொஞ்சமே கொஞ்சம் முன்னோட்டம்.'' என்று நெருங்கி இழைந்தான். அவன் தாபப் பார்வை கண்டு அவளும் இடம் கொடுத்தாள்.

''கொஞ்சலுக்கும் முன்னோட்டமாக்கும்?'' என்று அவள் முத்துப் பல் தெரியச் சிரிக்க அவனும் முத்துச் சரம் தொடுத்தான்.

திடுக்கிட்டு விலகினார்கள். வெட்கம் இழையோட ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டார்கள்.

அதே நேரத்தில் அந்தத் தெருவில் உள்ள ஒரு கோவிலில் இருந்து உச்சி கால மணி அடித்தது. "கோயில் மணியே அடிச்சிடுச்சுங்க. இனிமே நமக்கு எல்லாமே நல்லதுதான்!" என்றாள் அவள்.

அவனும் 'அப்படித்தான் நினைக்கிறேன்' என்று அவளை அருகிலே இழுத்து அவள் காதில் சொன்னான். "இந்த ஆறு வருஷமும் எனக்கு கடுமையான கோடைக் காலம் மாதிரி இருந்தது. இப்பதான் வீடு வந்து சேர்ந்த பறவை மாதிரி இருக்கேன். அது மட்டும் இல்ல இப்பதான் உன்னை பார்க்கும் போதே முகத்திலே மலர்ச்சி தெரியுது.ஏதோ நிலாவை பிழிஞ்சு சாறெடுத்து ஒரு முகத்தைச் செய்தால் எப்படி இருக்குமோ அந்த மாதிரி இருக்கு. சமீபத்தில் ஒரு கவிதையில படிச்சேன் "தண்ணிலவில் சாறெடுத்து"ன்னு அது மாதிரி இருக்கு. இந்த நிலா முகம் எப்பவுமே. குளிர்ச்சியா இருக்கணும் குளிர்ச்சியே கொடுக்கணும்!" என்றான் அவன் கொஞ்சலாக.

"ஆமாம் நிச்சயமா இனிமே அதுதானே என்னோட வாழ்க்கை லட்சியமாக இருக்கப்போகிறது!" என்றாள் அவள்.

இருவரும் இணைந்து சிரித்தார்கள்.கடந்து போன காலத்தில் பட்ட துன்பங்களையெல்லாம் கடந்து சிரித்தார்கள்.இனி வருங்காலம் நிலவின் குளிர்ச்சியே இருக்குமென்ற நிறைவில் சிரித்தார்கள்!

நிறைவு